

கல்கி
KALKI 7.5.89 ரூ. 2.
ஃபாஷன்!
ஃபாஷன்!
ஃபாஷன்!

கேட்கும் ஸின்த்தால் எதுவோ, கிடைக்கும் ஸின்த்தால் அதுவே



விருப்பமானதை தேர்ந்தெடுப்பீர்

கோத்ரெஜ்

* நடுவில் ஷஃபீக்



சலாம் பாம்பே



* ஷஃபீக் சலாம் — காருக்கு வெளியே.

'இந்தப் படம் எங்கே ஓடப் போகிறது?' என்று முணுமுணுத்தவர்கள் மூக்கின் மேல் விரல் வைக்கும்படி, 'சலாம் பாம்பே' படத்துக்குக் கூட்டம் நிரம்பி வழிகிறது. படத்தில் அப்படி என்னதான் இருக்கிறது? டாக்குமெண்டரி டைப் படம்தான். பெரிய நடிக நடிகையர்கள் கிடையாது. ஆனால் டைரக்டர் மீரா நாயர், அவருடைய அமெரிக்கக் கணவர், மற்றும் டீம் ஒர்க்கின் உழைப்பு படத்தில் தெரிகிறது. பதினாலு வாரமாக பம்பாயில் ஓடிக் கொண்டிருக்கிறது.

சாதாரணமான கதைதான். பம்பாய்க்கு மற்ற மாநிலங்களிலிருந்து பிழைக்க வரும் சிறுவர் சிறுமியர் படும் அவதிகள்தான் கதை.

தெருக்களில் வசிக்கும் சிறுவர்களை நடிக்கத் தேர்ந்தெடுத்து, அவர்கள் கதையை அவர்கள் வசிக்கும் இடத்திலேயே படமாக்கியிருக்கிறார் மீரா. ஒரு சில டி. வி. புகழ் நடிக நடிகையரும் படத்தில் நடித்துள்ளார்கள். அவர்களுக்கு நடுவில் சிறுவன் ஷஃபீக், போட்டி போட்டுக் கொண்டு நடிக்கிறான். ஹன்ஸா விட்டல் என்ற சிறுமியும் மற்றும் பல சிறுவர்களும் நன்றாக நடித்துள்ளார்கள்.



* மீரா நாயர்

இதில் ஷஃபீக்கின் நடிப்பு அசாதாரணமாக இருக்கிறது. இவன்தான் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

பெங்களூரிலிருந்து பிழைப்புக்காக பம்பாய் வந்த பதினாலு வயது சிறுவன் ஷஃபீக் சய்யத், முதலிலேயே வழி தவறிப் போனவன்தான். பிழைப்பிற்காகச் சின்னச் சின்னக் குற்றங்கள் செய்து வந்தான். 'சலாம் பாம்பே'யில் நடிக்க வாய்ப்புக் கிடைத்ததிலிருந்து, படம் எடுத்து முடியும் வரை, கொஞ்சம் சுக ஜீவனம்! பிறகு பழைய படி நடைபாதை ஜீவனம்தான்!

படத்தின் வெற்றிக்குக் காரணமான ஷஃபீக் மற்றும் பல சிறுவர் சிறுமியருக்கு 'சலாம் பாலக் டிரஸ்ட்' என்ற டிரஸ்ட் ஒன்று ஏற்படுத்தியுள்ளார், படத்தின் டைரக்டர் மீரா நாயர். இந்தப் பணம் இச்சிறுவர்களின் படிப்பு, மற்றும் அவர்களின் நலனுக்காக உபயோகப்படுத்தப்படுமாம். ஆனால் உடனடியாக இப்பணத்தை எடுத்துச் செலவழிக்க, இச்சிறுவர்களுக்கு வழியில்லை. ஷஃபீக் சய்யத், பெரிய நடிகனாக வர வேண்டுமென்று விரும்புகிறான்.

இந்தப் படத்தை எடுக்க யாரும் முதலில் பணம் தர முன்வரவில்லை. பின்னர் இங்கிலாந்தைச் சேர்ந்த "சானல் — 4" என்ற நிறுவனம், பணம் தந்து உதவியது. அதன் பின் 'நேஷனல் பிலிம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' உதவி செய்தது.

படம் முழுக்க 'காமாட்டிபுர்' என்ற சிவப்பு விளக்குப் பகுதியில் எடுக்கப்பட்டுள்ளது.


படத்தில் பாடல்கள் கிடையாது. ஆனால் பின்னணி இசை இயற்கையாகத் தவழ்ந்து வந்து மனத்தைக் கொள்ளை கொள்கிறது. இசை அமைப்பு, பிரபல வயலினிஸ்ட் எல். சுப்பிரமணியம்.

இந்தியாவில் வெளியிடுவதற்கு முன், வெளிநாடுகளில் பல விருதுகளைச் 'சலாம் பாம்பே' வாங்கியுள்ளது. இவ்வாண்டின் ஆஸ்கார் விருதுக்காக இப்படம் முன்மொழியப்பட்டது. ஆஸ்கார் கிடைக்கவில்லை. ஆனால் முன்மொழியப் பட்டதே ஒரு பெருமைதான்!

"இந்தியாவின் வறுமையை வெளிநாடுகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி மீரா நாயர் 'பப்ளிசிட்டி' சம்பாதிக்கிறார்" என்பதாக இப்படத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியது. ஆனால் மீரா சொல்கிறார்:

"இந்தியாவின் வறுமை என்பது யதார்த்த உண்மை; அதை மூடி மறைப்பதில் யாருக்கும் லாபமில்லை. மேலும், இப்படத்தைப் பொறுத்தமட்டில், வறுமையைக் காண' மட்டும் ரசிகர்கள் வரவில்லை. படம், பல்வேறு கலை அம்சங்களில் சிறந்து விளங்குவதால்தான் கூட்டம் அலைமோதுகிறது!"

— செம்பூர் சந்துரு.



என் ரத்தத்தின் ரத்தமே!



'இந்தி தர்ஜுமா ராஜா' பாலாஜி இந்த முறை எப்படி இடறி விழுந்தார்? இதை எடுத்துச் சொல்ல ஒரு விமர்சனம் தேவை தானா? அந்த விஷயத்தை அப்புறம் வைத்துக் கொள்ளலாம். பார்த்த படம் எப்படி?

'இன்னாங்கடா. அல்லாரையும் இஸ்கூல் கொயந்திங்கன்னு நெனைச்சிக்கினாங்களா? என்னுமோ பயாஸ்கோப் காட்டறானுங்க...?' படம் முடிந்து வெளியே வரும் போது யாரோ இப்படி ஒலிபரப்பிக் கொண்டு போனதைக் கேட்டேன்.

குழந்தைக் கதை இருக்கலாம், தப்பில்லை. அதிலே பெரியவர்கள் விவகாரத்தைக் கலந்தால் இப்படித்தான் பிசிறடித்துப் போய் எரிச்சல் மூட்டும். தெரியாமல்தான் கேட்கிறேன். இந்த 'மாயாவி' கதையில் மறைந்த



முதல்வர் எம்.ஜி.ஆர்., விஞ்ஞானி ஜி. டி. நாயுடு இவர்களையெல்லாம் இழுத்து விடுவானேன்? அவர்களுடைய இமேஜைத் தூக்குவதாய் நினைத்துக் கொண்டு கேலிக்கு ஆளாக்குவானேன்?

சும்மா சொல்லக் கூடாது. அறிமுக மீனாட்சி சேஷாத்திரி படு ச்ரிக்! அது அவர் குரலா, இல்லை யாராவது வட நாட்டு மங்கையை வளைத்து இழுத்துப் பிடித்து வண்டமிஷ் பேச வைத்தார்களா? மழலைக் குளுமை. துடுக்கும் துடிப்பும் வெடுக்கும் வெறிப்பும் முடுக்கும் முறைப்பும் அப்படியே ஸ்ரீதேவி நகல்தான். பத்திரிகை ஆசிரியரான ஜனகராஜ், நிருபர் மீனாட்சியிடம், 'இங்கே ஒரு ரேப்பிஸ்ட்டை வரச் சொல்லியிருக்கேன். நீதான் பேட்டி எடுக்கணும்.' என்று சொல்லியனுப்ப, அந்த இடத்தில் தற்செயலாய் ஆட்டோ பாக்யராஜ் வந்து அமர்ந்திருக்க, அவர்தான் பலான நபர் என்ற ஐயப்பாட்டுடன் மீனாட்சி பேச்சுக் கொடுப்பதும், மீனாட்சியின் முதுகுக்குப் பின்னாலிருந்த பல்லியிடமிருந்து அவரைக் காப்பாற்றப் பாக்யராஜ் முனைவதும் அது கண்டு, 'இத பாருய்யா, அப்படிப் பார்க்காதே. கிட்ட வராதே.' என்று அஞ்சி நடுங்கி, அப்புறம் விறிட்டுக் கூட்டம் சேர்த்துச் செய்யும் அமளியும் கச்சிதம்தான்.

பாக்யராஜ் தன் சேட்டைகளையும் குறும்புகளையும் ஓரம் கட்டி விட்டு எம்.ஜி.ஆர். அர்ச்சகராய்ப் போய் விட்டதால் எடுபடவில்லை. தவிர, பாதிக்குப் பாதி 'இன்விஸிபிள் மேனாக' இருந்து விடுவதால் எங்கே பார்க்க முடிகிறது அவரை? எப்பவோ ஒரு வாட்டி என்றால் பரவாயில்லை. சும்மா சும்மா கண் கலங்கி நெகிழ்ச்சி காட்டினால் என்னமோ மரத்துப் போகிறது.

ஜி. டி. நாயுடுவுக்குச் சீடன் என்று சொல்லிக் கொண்டு அந்த ஆங்கிலோ இந்தியர் (ஜூஜூஜூதாத்தா?) ஆராய்ச்சி பண்ணுகிறாரே, விஞ்ஞானக் கூடமா அது? விளையாட்டுப் பிள்ளைகளுக்குப் பூச்சாண்டி காட்டுகிற மாதிரி என்ன சார் குளறுபடி அது? மர எருமைக்கு வாயில் புல் ஊட்டி மடியில் பால் கறந்து சாப்பிடுகிறாராம்! இவர்தான் ரிஸ்ட் வாட்ச் மாதிரி ஏதோ ஒன்று செய்து, அதைக் கட்டிக் கொண்டு விசையைத் திருப்பினால் அப்படியே அந்தர்த்யானமாகும் கண்டுபிடிப்பின் பிதா! காட்!

இவை எல்லாவற்றையும் விட உச்சக் கட்ட குளறுபடி—குடியரசு முகிழ்த்ததால் ராஜ்யங்களைப் பறிகொடுத்த முன்னாள் மன்னர்களின் சதிதான். அத்தனை பேரும் வில்லர்களாம். இந்த நாட்டையே மறுபடியும் தங்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்பதற்காக வெளிநாட்டாரோடு சேர்ந்து கொண்டு வெடிகுண்டு வீசுவதும் நாட்டைச் சூறையாடுவதுமாய்ச் சதிசெய்கிறார்களாம்!

தயாரிப்பாளர் — டைரக்டர் நடிகர் மோதலைப் பத்திரிகைகள் விறுவிறுப்பாய் மேளம் கொட்டியதைப் பார்த்து விட்டுத் தசரா ஊர்வலத்தைப் பார்க்கப் போகும் தெம்போடு போனால்... அது வேறு மாதிரி ஊர்வலமாக அல்லவா இருக்கிறது!

— பி. எஸ். எஸ்.

கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்குமா?

பெங்களூர்.

அபாய நிறத்தில் உள்ள கர்நாடக அரசு பஸ்கள், சர், புர்ரென்று சாலைகளில் விரைந்து கொண்டிருந்தன. லால்பாக்கிலும், கப்பன் பாக்கிலும், கைகளைக் கோத்துக் கொண்டு ஜோடிகள். விதான் சௌதாவைச் சுற்றிக் காமிராவும் கையுமாக டூரிஸ்டுகள். காமத் ஹோட்டல்களில் தித்திப்பு, சாம்பார், இட்லி சாப்பிடும் வழக்கமான கூட்டம்.

ஆக, பெங்களூர் அப்படியே இருந்தது!

என்னடா இது... படு பயங்கரமான ஜனநாயகப் படுகொலை நடந்திருக்கிறது. மக்களிடையே எந்தவிதமான கொந்தளிப்பும் காணோமே என்ற ஆச்சர்யத்தில் குயின்ஸ் சாலையிலுள்ள ஒரு பிரபல கன்னடப் பத்திரிகையின் பதிப்பாளரைச் சந்திக்கச் சென்றோம்.

ஆளுனர் வேங்கடசுப்பையா:

''மத்திய அரசின் ஏஜெண்ட்?''




நம்முடைய ஆச்சர்யத்தை வெளிப்படுத்திய போது, ''இதுதான் ஸார் கர்நாடகா!'' என்று சிரித்தவாறு பதிலளித்தார் அவர்.

''கர்நாடகாவைப் பொறுத்தவரை மக்கள் 'தலைவர்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு யாரும் கிடையாது. தனி மனிதரை வழிபாடு செய்யும் கெட்ட பழக்கம் உங்கள் மாநிலத்தில்தான். இங்கே எந்தத் தலைவரும் மக்களுக்கு அறிமுகமாவது செய்தித் தாள்களின் மூலம்தான். செய்தித்தாள்களின் நிருபர்கள்தான் தலைவர்களைச் சுற்றி வந்து கொண்டிருப்பார்கள். தற்போது மத்திய அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்திருக்கிறது. 'மிகக் குறுகிய காலத்தில் என் மெஜாரிட்டியை நிரூபித்துக் காண்பிக்கிறேன்' என்று கூறிய பொம்மையைக் கவிழ்த்து விட்டார்கள். மிக மோசமான நடவடிக்கைதான் இது. உங்கள் தமிழ்நாடாக இருந்திருந்தால் பத்து பஸ்கள் எரிந்திருக்கும். கையில் மண்ணெண்ணெய் டப்பாவுடன் தீக்குளிக்க ஆட்கள் தயாராக இருப்பார்கள். இங்கே நிலைமையே வேறு. எப்படியும் தேர்தல் வந்தாக வேண்டுமே.. அப்போது மக்கள் கண்டிப்பாகத் தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றுவார்கள். அக்கிரமங்களுக்கு விடை கிடைத்து விடும்.''

''தேர்தலின் முடிவு எப்படி இருக்கும்?''

''ஜனதா தளத்தின் செல்வாக்குச் சரிந்து கொண்டே வந்தது. இந்த கவிழ்ப்பில்





பொம்மை:
''இங்கே தேவ கௌடா, டெல்லியில் சுப்பிரமணிய சாமி, பூட்டா சிங், மூவரும் சேர்ந்து கொண்டு விளையாடியிருக்கிறார்கள்...''

மூலம் அந்தக் கட்சிக்குப் புத்துயிர் கொடுத்தது மட்டுமல்லாமல் தேசிய அளவில் எதிர்க் கட்சிகளின் ஒற்றுமைக்கு உரமிட்டிருக்கிறார் ராஜீவ் காந்தி. ஆனால் வருகிற தேர்தலில் இந்தக் காரணத்தினாலேயே ஜனதா தளம் பதவிக்கு வந்து விடும் என்று சொல்ல முடியாது. ஜனதா — ஜனதா தளம் என்று கட்சி பிரிந்திருப்பதால் காங்கிரஸுக்குக் கொஞ்சம் கூடுதலாகவே ஸீட்டுகள் கிடைக்கும்.

''ஆளுனர் ஏன் இப்படி நடந்து கொண்டார் என்று நினைக்கிறீர்கள்?''

''கவர்னர் வெங்கட சுப்பையா அந்தக் காலத்து காங்கிரஸ்காரர். கவர்னர் டெல்லிக்குச் சென்ற போது, 'நீங்கள் ஜனதா தளத்தின் தலைவராக நடந்து கொள்கிறீர்கள் போலிருக்கிறதே' என்று கண்டித்திருக்கிறார் ராஜீவ். இதனால் வெறுப்புற்ற கவர்னர், தமது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார் என்று



தேவ கௌடா:
''காங்கிரஸ்தான் எங்கள் முதல் எதிரி!''



ஹெக்டே;
''மீண்டும் மாநில அரசியலுக்கு வருவதாக இல்லை''



* பங்காரப்பா: தேவே கௌடாவுடன் காங்கிரஸ் கூட்டு இல்லை.

இருபது நாட்களுக்கு முன்னர் ஒரு வதந்தி பரவியது. 'சட்ட மன்றத்தில் ஜனதா கட்சி, ஜனதா தளம் என்ற நாமகரணம் சூட்டிக் கொள்ள, எந்தவித முட்டுக் கட்டையும் போடாமல் ஒத்துழைத்தார்' என்பதுதான் கவர்னர் மேல் காங்கிரஸ்காரர்களுக்கு உள்ள குறை. இதனாலெல்லாம் வெறுப் புற்று, ராஜீவ் காந்திக்குச் சங்கடத்தை விளை வித்து விட்டார் கவர்னர் என்று சிலர் ஊகிக்கிறார்கள். ஆனால் இதற்குச் சான்று கிடையாது.''

ஜனதா தள மந்திரி சபை கவிழ்வதற்கு ஹெக்டேயும் ஒரு காரணம் என்று பெங் களூரில் வதந்திகள் வேகமாகப் பரவி வரு கின்றன. இது பற்றிக் கேட்பதற்காக ஹெக் டேயைச் சந்தித்தோம். அவருடன் ஒரு மினி பேட்டி:

கல்கி: பொம்மை அரசு கவிழ்வதற்கு நீங் களும் ஒரு காரணம். — அதாவது உங்கள் ஆட்களுக்கு மந்திரி பதவி கொடுக்கப் படாததாலும், கர்நாடக அரசியலில் நீங்கள் தனிமைப்படுத்தப்பட்டு வருவதாலும் கவிழ்ப்பு முயற்சியில் உங்களுக்கும் பங்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே!

ஹெக்டே: (சிரிக்கிறார்) இங்கே பொம் மையைப் பதவியில் வைத்தவனே நான் தான். 1988 – ஜனவரியில் நான் விலகும் வரை காங்கிரஸால் என் மந்திரி சபையைக் கவிழ்க்க முடியவில்லை. இப்போது தேவ கௌடாவின் ஜனதா – ஜ (அதாவது ஜனதா – இந்துபாய் பட்டேல்), காங்கிரஸ் கட்சியின் உதவியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வதந்திகள் இவர் கள் மூளையில் உருவானவைதான்.

கல்கி: தேர்தலை எப்படி எதிர்கொள் ளப் போகிறீர்கள்?

ஹெக்டே: ராஜீவ் காந்தியின் முட்டாள் தனமான போக்கினால் நாடு எந்த அளவுக்கு ஆபத்தான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதையும், எதிர்க் கட்சிகளின் அரசைக் கவிழ்க்க ராஜீவ் எப்படி தவறான நடவடிக்கைகளில் இறங் கியிருக்கிறார் என்பதையும் விளக்கிக் கூறு வோம்.

கல்கி: நேற்று நடந்த கண்டனக் கூட்டத் துக்கு எல்லா தேசிய முன்னணித் தலைவர் களும் வந்திருந்தார்கள்; தமிழக முதல்வர் கருணாநிதியைத் தவிர... இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஹெக்டே: அவர் சட்டமன்ற நடவடிக் கைகளில் பிஸியாக இருந்ததால்தான் வர முடியவில்லையே தவிர, மத்திய அரசுக்குப் பயந்து வராமல் இருக்கவில்லை. தேசிய முன்னணியில் தி. மு. க.வுக்கும் மிக்க பொறுப்புண்டு.

கல்கி: வரும் சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவீர்களா?

ஹெக்டே: நிச்சயமாக மாட்டேன். மீண்டும் மாநில அரசியலுக்குத் திரும்புவ தாக உத்தேசம் இல்லை.

தேவ கவுடாவைச் சந்தித்தோம்.

''ஜனதா தள அரசை நான் கவிழ்த் தேனா...? அவர்களே குழிபறித்துக் கொண் டார்கள். வீணாகப் பழியை என் மீது போடுகிறார்கள்'' என்றார் கவுடா.

''தேர்தலில் உங்கள் கட்சி காங்கிரஸு டன் தொகுதி உடன்பாடு வைத்துக் கொள் ளுமா?''

''சர்வாதிகாரப் போக்குடன் செயல்படும் காங்கிரஸோடு எங்கள் கட்சிக்கு எந்தவிதத் தொடர்பும் இருக்காது. ஜனதாவும் லோக் தளமும் ஜனமோர்ச்சாவும் இணைந்து ஜனதா தளம் ஆனதை நாங்கள் விரும்ப வில்லை. வரும் தேர்தலில் உண்மையான ஜனதா கட்சியினரான எங்களுக்குத்தான் மக்கள் வாக்களிப்பார்கள்.''

காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான பங்காரப்பா சொன்னார்:

''1977–ல் காங்கிரஸ் மந்திரி சபையைக் கர்நாடகத்தில் கவிழ்த்தது மத்திய ஜனதா அரசு. இன்று இவர்களுக்குக் காங்கிரஸைக் குறைகூற என்ன தகுதி உள்ளது? கர்நாடக ஜனதா அரசின் ஊழல்கள் ஏராளம்! பெங்களூரில், நிலங்களைக் கூட்டுறவு அமைப்புகளுக்குக் கொடுத்ததில் பல கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது. அரசு சரியா கவே இயங்கவில்லை. உட்கட்சிப் போராட்டத்தினால் அரசு இயந்திரம் ஸ்தம் பித்து நின்றது. ஏராளமான மக்கள் என்னைத் தினசரி சந்தித்து, 'அரசைக் கலைத்தது சரிதான்' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்து விட்டுப் போகிறார்கள்.''

''தேவ கவுடாவுடன் காங்கிரஸ் எந்த உறவும் வைத்துக் கொள்ளாது என்று அறிவித்திருக்கிறீர்களே...?''

''அதில் என்ன தப்பு...? தேவே கவுடாவே, ''காங்கிரஸ்தான் எங்கள் முதல் எதிரி'' என்று கூறியிருக்கிறார். அப்படிச் சொல்லும் அவருடன் நாங்கள் எப்படித் தேர்தல் உறவு வைத்துக் கொள்ள முடியும்?''

''நீங்கள் கர்நாடக காங்கிரஸ் தலைவர் அல்ல. மேலும் கூட்டு பற்றி முடிவெடுப்பது கட்சி மேலிடம்தான். இந்த நிலையில்

நீங்கள் சொன்னது சரிதானா?''

''நான் அவ்வப்போது பிரதம மந்திரியைச் சந்தித்துக் கர்நாடக அரசியலை மட்டுமல்ல, தேசிய அரசியலையும் குறித்துப் பேசி வந்திருக்கிறேன். பிரதமரின் மனநிலையை அறிந்துதான் 'தேவே கவுடாவுடன் எந்தத் தொடர்பும் இருக்காது' என்று உறுதியுடன் சொல்கிறேன்.''

ஹைகிரவுண்டு போலீஸ் ஸ்டேஷன் அருகேயுள்ள முன்னாள் மு த ல் வ ர் பொம்மையின் பிரும்மாண்டமான பங்களா. கேட்டிலிருந்து உள்ளே அரை பர்லாங் சென்ற பிறகுதான் கட்டடமே தெரிந்தது. புல்வெளியில் நான்கு சேர்கள். இரண்டு காலியாக இருக்க, சற்றுத் தூரத்தில் வெள்ளை பைஜாமாவும், வெள்ளை சட்டையும் போட்டுக் கொண்டு படு கேஷுவலாக யாருடனோ பேசிக் கொண்டிருந்தார் பொம்மை. மற்றபடி பங்களா வெறிச்சிட்டிருந்தது. உதவியாளர் போய் விஷயத்தைச் சொன்னவுடன், உள்ளே அறையில் வந்து உட்கார்ந்து 'இந்தியா கிங்' ஸைப் பற்ற வைத்துக் கொண்டு பேசினார்.

''ஆட்சியைக் கலைக்கும் அளவுக்கு கவர்னர் செயல்படுவார் என்று நான் நினைக்கவில்லை. இங்கே தேவே கவுடா, டெல்லியில் சுப்பிரமணிய சாமி, பூட்டா சிங், மூவரும் சேர்ந்து கொண்டு விளையாடி இருக்கிறார்கள். எங்கள் கட்சியில் கருத்து மோதல்கள் இருந்தது உண்மைதான். 'நீங்கள் மந்திரி சபை விஸ்தரிப்பைத் தள்ளிப் போட்டிருந்தால் இந்த நிலைமையைச் சமாளித்திருக்கலாம்' என்று பலர் சொல்கிறார்கள். அவையெல்லாம் சரியான கருத்துக்கள் அல்ல. நடந்து முடிந்தது எப்படியானாலும் இனிமேல்தான் என் பணி ஆரம்பமாகிறது. 1983—ல் ஜனதா பதவிக்கு வந்த போது நான்தான் கட்சித் தலைவர். எனக்கு அடிமட்ட ஊழியர் முதல் எல்லோரையும் தெரியும். எங்கள் ஆட்சியில் தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டன. சுத்தமான அரசு செயல்பட்டு வந்தது. இப்போது ஜனநாயகப் படுகொலை நிகழ்ந்திருப்பதால், எங்கள் பிரசாரத்திற்கு இன்னும் வலிவு கூடியிருக்கிறது. மேலும் ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து, கோர்ட்டுக்குப் போகலாம் என்றும் எண்ணியிருக்கிறேன்.''

''தேர்தலில் உங்களுக்கு இதர கட்சிகளின் ஆதரவு கிடைக்குமா?''

''கம்யூனிஸ்ட் கட்சிகளோடு எங்களுக்குக் கூட்டணி இருக்கும். ஆனால் பாரதீய ஜனதாவோடு தொகுதி உடன்பாடு இருக்குமா என்பது மேலிடம் எடுக்க வேண்டிய முடிவு.''

''கர்நாடக மக்களிடையே ஹெக்டேக்கு மிக அதிக செல்வாக்கு உண்டு. ஆனால் இப்போது ஜனதாவும் — ஜனதா தளமும் வோட்டுக்களைப் பிரிக்குமே! இந்த நிலை காங்கிரஸுக்குச் சாதகமாக இருக்குமே?''

''தேவே கௌடாவை ஜனதா கட்சியாக மக்கள் பார்க்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் ஏஜெண்டாகத்தான் பார்க்கிறார்கள்'' என்றார் பொம்மை. ''நிச்சயமாக, 150—க்கும் மேற்பட்ட இடங்களை ஜனதா தளம் கைப்பற்றும்'' என்று நம்பிக்கையோடு பேசினார்.

''தமிழ் நாட்டைப் போல மாதா மாதம் ராஜீவ் காந்தி வந்தால், அலை காங்கிரஸ் பக்கம் வீசாதா?''

''எப்படி வீசும்? தமிழ் நாட்டில்தான் பார்த்தோமே!'' என்று கூறிச் சிரித்தார், பொம்மை.

கட்டுரை: **தில்லப்பா.**

படங்கள்: **கே. வி. ஆனந்த், பாபுராஜ்.**

அடுத்த இதழில்... கவர் ஸ்டோரி

மரணத்திற்கு ஒரு டிக்கெட்?





கர்நாடகா அரசு டிஸ்மிஸ்!
நாடாளுமன்றத் தேர்தலில் ராஜீவ் அரசு டிஸ்மிஸ்!
மக்கள்
Redcarpet reception!
இந்திய இலங்கை ஒப்பந்தம்
கவலைப் படாதே! ஊழல்களை எல்லாம் அம்பலமாக்கினேன்! இன்னும் மலை மலையா ஊழல்களை அம்பலமாக்கிக்கிட்டே வருவேன்!
ஒரு கை பாக்காமெ விடமாட்டேன்! கருப்புக் கொடி காட்டுவோம்! வெளிநடப்பு செஞ்சுக்கிட்டே இருப்போம்!
தண்ணீர் பிரச்னை



கல்கி

1989 மே 7
மலர் 47 இதழ் 40
சுக்ல சித்திரை 24



ஜெயலலிதா பதவி துறப்பாரா?

'ஒரு மந்திரிக்கு உள்ள எல்லா அந்தஸ்துகளையும் சலுகைகளையும் சம்பளத்தையும் பெறுகிறார் எதிர்க் கட்சித் தலைவர். அப்படி இருந்தும் அவர் தமது கடமையைச் செவ்வனே செய்யாமலிருந்தால் எப்படிப் பொறுப்பது?' என்று அர்த்தமுள்ள கேள்வியைச் சட்டமன்றத்தில் எழுப்பியுள்ளார் பி. எச். பாண்டியன். அதற்குப் பதிலையும் அவரே கூறியிருக்கிறார். 'அவர் தமது பதவியைத் துறந்து, அதனை வேறு ஒருவரிடம் ஒப்படைப்பதே முறை' என்று பேசியிருக்கிறார். நியாயமான வாதம்தான்.

ஜெயலலிதா, தமது கடமையைச் சரியானபடி செய்ய முடியாத சூழ்நிலை சட்ட மன்றத்தில் நிலவுவதாகக் கருதலாம்; அல்லது தமது தேக அசௌக்கியம் அதற்கு இடம் தரவில்லை என்று நினைக்கலாம். எவ்வாறாயினும் சட்ட மன்றத்துக்கு வந்து தமது கடமைகளைச் செய்ய முடியாது என்று அவர் முடிவு செய்வாரேயானால் இன்னொருவரிடம் அந்தப் பொறுப்பை விட்டு விடுவதே சிலாக்கியமானது; நேர்மையானது. கட்சித் தலைவராக அவர் நீடிப்பதை அவரது கட்சியைச் சேராத யாருமே ஆட்சேபிக்க முடியாது; ஆனால் சட்டமன்றத்துக்குப் போகாமலே எம்.எல்.ஏ. ஆக நீடிப்பதை அவர் தொகுதியைச் சேர்ந்த மக்கள் அனைவருமே ஆட்சேபிக்க முடியும். கடமைகளைச் செய்யாமல் எதிர்க் கட்சித் தலைவராக அவர் நீடிப்பதையோ, தமிழக மக்கள் அனைவருமே ஆட்சேபிக்க முடியும்! ஏனென்றால், எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் தமிழக மக்கள் அனைவர் சார்பிலும் சட்டமன்றத்தில் எதிர்ப்புப் பணி ஆற்ற வேண்டியவராய் இருக்கிறார். அவருக்கு வோட்டுப் போட்டவர்களுக்காக மட்டுமோ அல்லது கட்சிக்காரர்களுக்காக மட்டுமோ அவர் இயங்க முடியாது, கூடாது.

'சட்டமன்றத்துக்கு அவர் போக முடியாத சூழ்நிலையைத் தி. மு. க.வினர்தானே ஏற்படுத்தினார்கள்?' என்று கேட்கலாம். இதில் பெருமளவு உண்மை இருக்கிறது. ஆனால் மார்ச் 25—ல் நடந்தனவற்றுக்கு ஜெயலலிதா தலைமையை ஏற்றுள்ள எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கும் பங்கும் பொறுப்பும் உண்டு. இது ஒருபுறமிருக்க, தி. மு. க. வினர் இப்போது எச்சரிக்கப்பட்டு விட்டார்கள். மறுபடி ஓர் அசம்பாவிதம் சட்டமன்றத்தில் நிகழுமானால் உதய சூரியன் உடனே அஸ்தமனமாகி விடும் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே ஜெயலலிதா தைரியமாகச் சட்டமன்றம் சென்று நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்.

இதற்கு அவசியமும் உள்ளது. தி. மு. க. பதவிக்கு வந்து இதோ நூறு நாட்கள் முடியப் போகின்றன. இதுவரை அவர்கள் செய்துள்ளது குறைவு; செய்ய வேண்டியதோ ஏராளம். ஆரம்பத்தில் இருந்த செயல்திறன், செய் நேர்த்தி, சுறுசுறுப்பு எல்லாம் இனி படிப்படியாகக் குறைய வாய்ப்புண்டு. தவறுகள் இழைக்கவும் குற்றங்கள் புரியவும் தொடங்குவார்கள். அப்போது சுட்டிக்காட்டவும் தட்டிக் கேட்கவும் ஆற்றல் மிக்க எதிர்க் கட்சித் தலைமை தேவை. கறுப்புக் கொடி காட்டுவது, வெளிநடப்பு செய்வதுடன் எதிர்க்கட்சிப் பணி முடிந்து போவதல்ல. மேல் நாட்டு ஜனநாயகங்களில் எதிர்க் கட்சியில் ஒரு நிழல் மந்திரி சபையே இயங்கும். அவர்கள் பிரச்னைகளை ஆராய்ந்து, அணுகுமுறைகளை வகுத்துத் தந்து, தீர்வு காண வழிகாட்டுவார்கள். ஆளும் கட்சியை விட எதிர்க் கட்சி முக்கியமானது என நிரூபிப்பார்கள். தமிழ் நாட்டிலோ இன்று வறட்சி, மின்வெட்டு, குடிநீர்த் தட்டுப்பாடு என்று பல பிரச்னைகள் கவனிக்கப்படக் காத்திருக்கின்றன.

ஆனால் இத்தகைய ஆக்க பூர்வமான சிந்தனையை அ. தி. மு. க.வில் காணோம். மாறாகக் குழப்பமே நிலவுகிறது. நேற்று ஜெயலலிதா கூறுகிறார், 'கர்நாடகா மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்வது சரியல்ல; குழந்தைவேலு பேசியது தவறு' என்று. இன்று திருநாவுக்கரசு சொல்கிறார், 'மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்தது சரி; ஜெயலலிதாவின் கருத்தும் அதுதான்' என்று!

கடந்த கால ஆட்சியின் தவறுகளையும் ஊழல்களையும் இன்றைய அமைச்சர்கள் பிட்டுப் பிட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சாராய சாம்ராஜ்ய ஊழல், என்.ஆர்.ஐ. ஊழல், பல மாடி கட்டட ஊழல், கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல், கைத்தறித் துணி ஊழல், கோயில் சொத்துக்கள் பராமரிப்பு ஊழல் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவற்றுக்குப் பதில் கூறப் பயந்துதான் ஜெயலலிதா சட்டமன்றம் போகவில்லை என்ற எண்ணம் மக்களிடையே பரவக் கூடும்.

உக்கம் சந்த்தைச் சிறையில் சந்தித்து, ஆரஞ்சு ஜூஸோ, களையோ தந்து, ஒருநாள் உண்ணாவிரதத்தை முடிக்கச் சொல்வதில் காட்டும் ஆர்வத்தை, சட்டமன்றத்தில் சிறப்பான விதத்தில் எதிர்ப்புப் பணி ஆற்றுவதிலும் ஜெயலலிதா காண்பிக்க வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

தன்னம்பிக்கை



□ ஒவ்வொரு மனிதனும் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். என்னால் முடியாது என்று ஒரு போதும் சொல்லாதீர்கள். நீங்கள் வரம்பில்லா வலிமை பெற்றவர்கள் எதையும், எல்லாவற்றையும் சாதிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் நீங்கள்.

□ மனித வரலாற்றை முழுவதும் பார்க்கும்போது ஆணோ, பெண்ணோ வரலாற்றில் சிறப்புடன் விளங்கினார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்களது தன்னம்பிக்கை தான் என்று சுவாமி விவேகானந்தர் வீர முழக்கமிடுகிறார்.

• ஆனால்.. நம்மில் பலர் ஓரளவு கல்வித்தகுதியிருந்தும் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் பேசத்தயங்குகிறோம்.

தவறாகப் பேசிவிடுவோமோ என்ற பயமும், ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மையுமே இத்தயக்கத்திற்கான மூல காரணமாகும்.

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளிக்கும் ஓர் எளிய பயிற்சி முறையை மேற்கொண்டால், தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாடவும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள் கட்டுரைகள் எழுதவும் உங்களால் முடியும்.

வீட்டிலிருந்த படியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப் பயிற்சியை மேற் கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. இன்றே கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண் 4986. 9, மேட்லி ரோடு, தி.நகர். சென்னை-600 017.

அடுப்பங்கரையிலிருந்து கூடங்குளம் வரை

'சுற்றுப்புறச் சூழல் அறிவியல்' என்று ஒரு முதுகலைப் பட்டப் படிப்பைத் தென்னகத்திலேயே முதன் முதலாகத் தொடங்கிய பெருமை திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரிக்குப் போய்ச் சேர்கிறது.

என்ன காரணம் என்று சொல்ல முடியவில்லை, பெரும்பான்மையாக மாணவிகளையே ஈர்த்துள்ளது இந்தப் படிப்பு... ஒரு மாணவி, குடும்பப் பெண்கள் நாள்தோறும் உழலும் அடுப்பங்கரைப் பிரச்னைகளைப் பற்றியே கூட ஆராய்ச்சி நடத்தியிருப்பது சுவையான செய்தி.


ரோஸ் தாமஸ் என்கிற அந்த மாணவியின் ஆராய்ச்சிகளின்படி, விறகு அடுப்பில் புகையப் புகையத் திணறிக் கொண்டு புழங்கும் பெண்களுக்கு மிக அதிகமான அளவில் உடல்நலக்கேடு ஏற்படுகிறதாம். அடுத்தபடியான கெடுதல் மண்ணெண்ணெய்ப் புகையால் ஏற்படுகிறதாம். அதற்காக எல்லோரும் எல்.பி.ஜி. காஸ் அடுப்பில்தான் புழங்க வேண்டும் என்பதில்லை. எரிபொருள் சிக்கனம், உடல்நலம் இரண்டுக்கும் உதவுகிற முறையில் 'சூளா' என்னும் புகையாத அடுப்புக்களை வலியுறுத்துகிறார் இந்த மாணவி.

பத்து ரூபாய்ச் சலுகை விலையில், வார்ப்பட இரும்புத் தயாரிப்பில், வடக்கத்திய மாநிலங்களில் தயாராகி வருகிற சூளா அடுப்பைத் திருச்சி சேவாசங்கம், காஜாமலை மகளிர் சங்கம் போன்ற மகளிர் அமைப்புக்கள் வாங்கி விற்பனை செய்கின்றன.

விறகைத் தவிர்த்து, உமி, வறட்டி போன்ற எரி பொருள்களைப் பயன்படுத்திச் சூளா அடுப்பை எரிய விடுவது, ஆரோக்கியத்துக்கு மட்டுமின்றி வனவளப் பாதுகாப்புக்கும் நல்லது என்று குறிப்பிட்டு, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சூளா அடுப்பைப் பரவலாக்க வேண்டும் என்று கூட இக் கல்லூரி கருத்துத் தெரிவித்துள்ளது.

பஸ் நிலையங்களில், பொதுக் கழிப்பிடங்களில் காணப்படும் சுகாதாரக் கேடுகளைக் குறிப்பிட்டுக் கேட்டால், பேராசிரியர் எட்வின் சந்திரசேகர் சொல்வது: "சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவது என்கிற ஆபத்து இயற்கைக் கழிவுகளால் ஏற்படுவதை விடச் செயற்கையான ஆலைக் கழிவுகளால் ஏற்படுவதே பன்மடங்கானது. இயற்கைக் கழிவுகளின் நுண் கிருமிகளின் எழுச்சி காரணமாக நோய் பரவும் போது முன்கூட்டியே அடையாளங்கள் தெரியும்.. கட்டுப்படுத்தி விடலாம். ஆனால் வேதியி


* பெரும்பாலும் மாணவிகள்தாம்...



* வகுப்பறையில் விளக்கம்...



* சூளா அடுப்பு...



யல் கழிவுகளால் ஏற்படும் நாசம் மெல்ல மெல்லவே வேர் பிடித்து, குணப்படுத்த வாய்ப்பில்லாத ஒரு நிலைக்குக் கொண்டு போய் விடும்.''

அன்றாடம் பார்க்கும் காட்சிகளுள் ஒன்றான சாலைப் போக்குவரத்துக் காவல் துறையினரின் அல்லல்களை இவர்கள் ஆராய்ந்து காவல் துறைக்கு அறிக்கை தந்து, நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களை முச்சந்திக் காவல் பணியில் ஈடுபடுத்த வேண்டாம் என்று கூட ஆலோசனை தந்திருக்கிறார்கள்.

இந்த மாணவர்கள் பன்னிரண்டு 'டிராபிக் போலீஸ்காரர்' களைக் கவனித்து விவரம் சேர்த்தார்கள். வாகனப் புகைகளிலிருந்து வெளிப்படும் ஈயச் சத்து, இவர்களின் இரத்தத்தில் கலந்து அபாயம் விளைவிப்பதைப் பற்றி ஆராய்ந்தார்கள். மனிதனின் வயது, புகைப் பழக்கம் — மதுப் பழக்கம் போன்றவை ஈயச் சத்து மிகுதியால் ஏற்படும் கோளாறுகளை மோசமாக்கி விடுமாம்.

"ஆழ்கடல் எண்ணெய்க் கிணற்றுப் பகுதிகளில் ஏற்படும் கசிவு கடல்வாழ் உயிரினங்களை அழித்து விடுகிறது. எரித்தாலும், நாற்பது சதவீத எண்ணெய் கூடக் குறைவதில்லை. எண்ணெய்ப் படலம் புறக் காற்றின் ஆக்ஸிஜனைத் தண்ணீருக்கு வர விடாமல் தடுக்கிறது. இதனால் மீன்களின் சுவாச உறுப்புக்கள் கெட்டுப் போய்ச் சுவாசிக்க முடியாமல் செத்துப் போய் விடுகின்றன'' என்கிறார்கள் மாணவி தேவிகாவும், அமுதா ராணியும்.

அதே போல், அளவுக்கு அதிகமான பூச்சிக்கொல்லி மருந்துகளும் விதைகளின் முளைப்புத் திறனைக் கெடுக்கும், பயிர் வளர்ச்சியைக் குறைக்கும் என்பதை ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள் இத்துறை மாணவர்கள்.

கொள்ளிடத்துக்கு வரும் நீரில் பூச்சிக் கொல்லி மருந்துகளின் விளைவான நச்சுக் கலப்பு அதிகமாம். பொதுவாகத் திருச்சிராப்பள்ளி வட்டாரத்தில், காவிரி, கொள்ளிடம், உய்யக் கொண்டான் வாய்க்கால் ஓட்டத்தில் பல இடங்களில் ஆராய்ச்சி செய்வதற்காக இவர்களுக்கு மத்திய அரசு 5.7 லட்ச ரூபாய் நிதியுதவி செய்துள்ளது.

சர்க்கரை ஆலைக் கழிவுகள், தோல் பதனிடும் ஆலைக் கழிவுகள், கனரகத் தொழில், மின்முலாம் தொழில் — என்று எல்லாவிதமான செயற்கை நச்சுக்களும் இந்த மாணவர்களின் கரங்களில் மதிப்பீடு பெறுகின்றன. தங்கள் ஆய்வுகளின் முடிவுகளையும், ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இவர்கள் உடனுக்குடன் தெரிவித்து விடுகிறார்கள். பல நிறுவனங்கள் இவர்களின் ஆலோசனையைக் கோரிப் பெற்றும் தங்களையும் சுற்றுப் புறத்தையும் பாதுகாத்துக் கொள்ள முன் வருகிறார்கள்.

பச்சை மலை, கொல்லி மலைப் பகுதிகளில் இக் கல்லூரி மாணவர்கள் ஆய்வுப் பணி மேற்கொண்ட போது அங்குள்ள நிலத்தடி நீரில் கூடுதலான ஃப்ளோரைடு சத்து இருப்பதை உணர்ந்தனர். இதனால் பல் அரிப்பு நோய் போன்றவை வரலாம். இறுதிக் கட்டத்தில் எலும்புக் கூட்டையே பாதிக்கும் ஆபத்து உண்டு. ஆகவே தண்ணீரைப் பதப்படுத்தி ஃப்ளோரைடு அளவைக் குறைத்தார்கள் என்கிறார் பேராசிரியர்.

மாணவர்கள், இந்த ஆண்டு விடுமுறை முடிந்ததும் கூடங்குளம் போய் சர்வே பண்ணப் போகிறார்கள். அங்கு அணு மின் நிலையம் ஏற்பட்டால், வீணாகும் ரேடியோ ஐஸோடோபிக் கழிவுகளை எப்படிப் 'புதைக்கப்' போகிறார்கள் என்பதே மிரட்டுகிற பிரச்சினை.

கட்டுரை, படங்கள்: யெஸ்பால்

எதற்கு நன்றி...?

ஒரு பிரபல எழுத்தாளர் பெரிய நகரத்துக்கு வந்தார். பிச்சைக்காரன் ஒருவன் தனக்கு உதவுமாறு கேட்டான். அவர் சட்டைப் பையைத் தடவிப் பார்த்து விட்டு "தம்பி உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லையே" என்று வருத்தத்துடன் கூறினார். உடனே பிச்சைக்காரன், "மிகவும் நன்றி ஐயா" என்று கூறினான்.

எழுத்தாளர், "நான்தான் உனக்குப் பிச்சையிடவே இல்லையே! பின் எதற்கு இந்த நன்றி?" என்று கேட்டார்.

"என்னை நீங்கள் அன்புடன் தம்பி என்றீர்களே, அதற்காகத்தான்" என்றான் பிச்சைக்காரன்.

அந்த எழுத்தாளர் மார்க் ட்வெயின்.

கே. கார்த்திக்.



"நீயே சொல்லுயம்மா...!"

எஸ்.கே. கணேசன்

அன்றைய காலைப் பொழுது மங்களத்திற்குப் போறாத வேளையாக அமைந்தது. லேட்டாக வேலைக்கு வந்தவளை அந்தக் கேள்வி கேட்டிருக்க வேண்டாம். ஆனால் கேட்டு விட்டாள். ''ஏன் காத்தாயி, லேட்டு? '' என்று.

காத்தாயி கொஞ்ச நேரம் மௌனமாக இருக்கவே, 'சரி, சொல்ல விருப்பம் இல்லை போலிருக்கு' என்று நினைத்து ஜோலியைப் பார்க்க உள்ளே போனவளைப் பெருத்த அழுகைக்குரல் தடுத்து நிறுத்தியது.

காத்தாயிதான் வயிறு எக்கி அழுது கொண்டிருந்தாள். அந்த மௌனம் இந்த அழுகைக்குத்தானா என்ற பரிதாபத்தோடு ''என்ன காத்தாயி? '' என்றாள்.

''த்த.... நீ கேட்டுக்கினியேனு சொல்றேன். அந்தப்பேமானி ஈதே!''

மங்களம் முழித்தாள். ''அது யாரது? '' என்று கேட்டும் விட்டாள்.

''அதான், என் புருஷன்காரன். கஸ்மாலம். குடிச்சுட்டு நேத்தி முழுக்க பேஜாரு. தோபாரு!'' பரபரவென்று புடைவையையும் ஜாக்கெட்டையும் வழித்துக் காண்பித்தாள். கரணை கரணையாக வீங்கியிருந்தது.

''ஐயோ பாவம். உன் போறாத காலம் தான்! இப்படியும் ஒரு புருஷன் பெண்டாட்டியை அடிப்பானோ....? அவன் கட்டையில போக!'' மங்களம் நிஜமான துக்கத்தோடு சொல்ல — அவ்வளவுதான்.

விண்ணிலிருந்து ஏவப்பட்ட ராக்கெட்டாய்த்துள்ளி எழுந்தாள் காத்தாயி, முந்தானையை அள்ளிச் சொருகிக் கொண்டாள். வெற்றிலையை ஓங்காரமாய் வெளியே துப்பி விட்டு வர... அந்த செய்கை மங்களத்தின் வயிற்றை ஏகமாய்க் கலக்கியது.

''இன்னாமே சொல்லிக்கினே! யாரைப் பார்த்துக்கட்டையிலபோகச்சொன்னே? ... ம்...? '' என்று கையை மேலே கொண்டு போய்க் கேட்டாள்.

மங்களத்திற்கும் சூட்சுமத்திற்கும் வெகு தொலைவு. ''அதான்டி புருஷன் கடன்காரன்!'' என்று முடிக்க வில்லை; முடிக்க விடவில்லை!

''த! என்ன பேசறே. ஒரு பொம்பளை பேசற பேச்சா இது! ஏதோ என் கஷ்டம், கேட்டுக்கச் சொன்னா! என் புருஷனைத் திட்றியே. என் வாயால சபிச்சா என்னாகும் தெரியுமா...? ஏதோ உன் மூஞ்சிய பார்த்து உட்றேன்!'' என்று, முகத்தில் அடிக்காத குறையாய் நீட்டிப் பேசி விட்டு வெளி நடப்புச் செய்தாள்.

பின் ஞாபகம் வந்தவளாக — ''நாளைக்கு வருவேன். பாக்கியைக் கைமேல் வைக்கணும். உன் வேலையுமாச்சு நீயுமாச்சு.'' என்று வாசல் வரை, தெரு வரை திட்டிக் கொண்டே போனாள். போய்க் கொண்டே திட்டினாள். வீட்டைக்கடக்கும் ரோலர் வண்டியைப் போல அவளின் வசவுகள் நீண்ட நேரம் கேட்டுக் கொண்டேயிருந்தன.

மங்களம் பிரமித்து விட்டாள். அந்த பிரமிப்பு அடங்க இரண்டு மாதமானது. இரண்டாவது மாத முடிவில் லட்சுமி வந்தாள். பெயருக்கேற்ப சாத்விகமான முகம். பழைய நினைவுகளை மறக்கடிக்கக் கூடிய முகம்.

அந்த காரணத்தினாலோ என்னவோ, துணிந்து கேட்டு விட்டாள் மங்களம். ''ஏன்





பாரதிராஜாவுக்குக் கார் விபத்தில் காயம்பட்டு, அவர் சிகிச்சை பெற்று வருவதால், 'என் உயிர்த் தோழன்' அடுத்த இதழில் இடம்பெறும். நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்பதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

லட்சுமி லேட்டு?''

லட்சுமி விகாரமாய் அழுதாள். மூக்கைச் சிந்தி உதறினாள். "என்னை ஒண்ணும் கேட்காதே.'' என்று நிறுத்தி விட்டு, பின் அவளே சொல்லத் தொடங்கினாள்.

''அது இருக்குதே!''

மங்களத்திற்குக் கதை கேட்கும் சுவாரசியமும் அதே நேரத்தில், ஃப்ளாஷ் பேக் நினைவும் தற்போது கொஞ்சமாய் எட்டிப் பார்த்த சூட்சும புத்தியும் கலந்து ''யார் அவர்? '' என்று கேட்க வைத்தது.

''அவரு என் அவரு... சுவரு. மனுஷனா அந்த ஆளு ஹூம்!'' என்று ஒரு குரல் கொடுத்தாள். ''அது கெட்ட கேட்டுக்கு செட்டப் வேற. பாடையில போறவன்! அவ வீட்டுக்குப் போறியே; நீ பண்றது நியாயமா கீதானு கேட்டேன். அவ்வளவுதான் தாவி. என் உடம்பை நவுத்தி எடுத்துட்டாப்பல! என்ன நியாயம் இது. நீயே சொல்லு... என்ன? '' என்றாள்.

மங்களத்திற்கு இப்போது பெரிய பொறுப்பு வந்தது போல உணர்ந்தாள். பெண் குலத்தின் பெருமையையும் பொறுமையையும் எடுத்துரைப்பது போல — "தப்புதான் லட்சுமி. ஆனா ஆம்பிளைங்க அப்படி இப்படித்தான் இருப்பாங்க. நாமதான் அனுசரிச்சுண்டு போகணும்'' என்று நிறுத்தி, திருப்தியுடன் லட்சுமியின் முகத்தைப் பார்த்தாள்.

ஆனால் நேர் எதிராக லட்சுமி நடந்து கொண்டாள். ஃபாஸ்ட் பார்வர்ட் போட்ட படமாய் ஏகமாய்க் குதித்தாள். 'நீயெல்லாம் ஒரு மனுஷின்னு உன்கிட்டே சொன்னேன் பாரு! என் புத்தியை ஜோட்டாலே அடிச்சிக்கணும். அய்யா போடற சோறு தின்னு உடம்ப வளர்த்துகினெ. நீ இதுவும் பேசுவே இன்னமும் பேசுவே. உனக்குச் சக்களத்தி வந்தா தெரியும். ம்...'' என்று அவளும் போய் விட்டாள்.

மங்களம் கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். இனி இந்த வீட்டிற்கு வேலைக்காரி வேண்டாம் என்று. ''ஆமாம் உனக்குப் பேசத் தெரியல. என்கிட்டத்தான் உனக்கு வாய்.'' என்ற கணவரைப் பார்வையால் கட்டுப் படுத்தினாள்.

தனக்கே சாமர்த்தியம் இல்லை என்பதை இன்னொரு வேலைக் காரியின் மூலம் நிரூபிக்க மங்களம் தயாராக இல்லை.

ஆனால் அவள் வைராக்யம் பிரசவ வைராக்யமாய்ப் போனது. காஸ் தீர்ந்து போன அவஸ்தையைப் போல வேலைக்காரி இல்லாமல் கஷ்டமாக இருந்தது.

கடைசியில் பழைய குருடி கதவைத் திறக்க... புதிதாக வந்தவள் மாரி. அவள் உருவத்தை வைத்து எதையும் அனுமானம் பண்ண முடியவில்லை. வேலைக் காரியின் மரபைப் போல அவள் லேட்டாக வர ஆரம்பித்தாள். அப்படி நிகழும் போதெல்லாம் வெகு சாமர்த்தியமாய் வாயில் பிளாஸ்த்திரி போட்டுத் தன் செயலை நினைத்து மகிழ்ந்து கொண்டாள் மங்களம்.

பழைய பாணியில் சொல்வதென்றால் அந்தப் பொல்லாத நாளும் வந்தது. மாரி தாளமாட்டாமல் ''இன்னிக்கு லேட்டாயிடுச்சும்மா, ஏன்னா...?'' என்று அவளாகவே ஆரம்பித்த போது மங்களம் பீதியோடு அவளைப் பார்த்தாள்.

''இன்னா இந்தம்மா.. இந்த முழி முழிக்குது...! நான் ஏன் லேட்டுன்னா?''

மங்களம் அவசரமாக ''லேட்டானா என்ன? நோக்கும் ஆயிரம் ஜோலியிருக்கும். பாவம்!'' என்று வேதாந்த நிலையில் சொன்னாள்.

விதி சிரித்தது என்பார்களே அந்த நிலை மங்களத்திற்கு.

''எனக்கென்ன ஜோலி கீது... தே! இந்த அக்கிரமத்தைக் கேளு... அப்பால நீயே நியாயத்தைச் சொல்லு.''

காரியம் அவளை மீறிப் போய் விட்டது. மங்களம் அதே பீதியோடு கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு வழியாகப்பாதி அழுகையோடும், பாதி விம்மலோடும் தன் துயரத்தை மாரி சொல்லி முடித்து, போர்டில் எழுதி விட்டுத் திரும்பிக் குழந்தைகளைப் பார்க்கும் வாத்தியாரைப் போல் மங்களத்தைப் பார்த்தாள்.

மங்களம் கல்லை ஜீரணம் செய்தவள் போல் பேசாமல் நின்றிருந்தாள்.

ஏதோ மங்களத்திற்குக் கேட்க வில்லை என்று நினைத்து மீண்டும் தன் வேதனையைப் பெருத்த குரலில் சொன்னாள் மாரி.

மீண்டும் மங்களத்திடம் மௌனம்.

வந்ததே மாரிக்குக் கோபம் "என்னம்மா உன்னைப் பணமா கேட்டாங்க ஏதோ பொம்பளைக்குப் பொம்பளை ஆறுதல் சொல்லுவேன்னு பார்த்தா; நீ மப்பா கீறியே! பொம்பளையா நீ!'' என்று நீளமாகப் பேசிக் கொண்டே போனாள்.

மங்களம் பிரமித்து நின்றவள்தான். இன்னும் அப்படியே உறைந்து போய் நிற்கிறாள்.

‘ஸ்ஸ்ஸ் ...! ஜூஸ்ப..!’ vs. ‘நாட்டுக்கே பயனுள்ள தகவல் போங்கள்...!’

• காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தலைமைக்கும் கல்கியைக் காட்டிலும் ஒரு நல்ல அரசியல் ஆலோசகர் இருக்க முடியாது என நினைக்கிறேன். நீர் அடிக்கடி தலையில் அடித்து (தலையங்கம்) சொல்கிறீர், தனித்தன்மை வேண்டுமென்று. 'இல்லை, எங்களை நாங்களே அழித்துக் கொள்வோம்' என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். என்ன செய்வது!

காஞ்சிபுரம். தமிழ் எழிலன்.

• எலிகளின் தொல்லைக்குப் பயந்து வீட்டைத் தீ வைத்துக் கொளுத்திய கதையாக, தமிழக காங்கிரஸின் தலைமையை, மூப்பனாரை முகத்திற்கு முகம் எதிர்த்த வாழப்பாடி ராமமூர்த்தியைக் கொண்டே மாற்றியமைத்திருக்கும் காங்கிரஸ் மேலிடத்தின் அவசர புத்தியை மிக அருமையாகச் சாடியிருந்தீர்கள்.

தோட்டக்குறிச்சி. இரா. வனையாபதி.

• தலையங்கம் படிக்கப் படிக்க விறுவிறுப்பாக இருந்தது. அரசியலை உரித்த வாழைப் பழம் போல் வாசகர்களுக்குத் தரும் கல்கிக்கு எனது மனம் திறந்த பாராட்டுக்கள்.

வேடத்தவாடி. ஜி. சங்கரன், அமுதா சங்கரன்.

• பாண்டியராஜன் வெற்றிலைக் காம்பைக் கூட விடாமல் இன்னும் தகவலைத் தந்த கல்கியே! இனி இதுபோன்ற — நாட்டு மக்களுக்கு மிகவும் பயன்படும் தகவலையே தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.... எனக்கு வர்ற கோபத்தில் உங்களை அப்படியே மவுண்ட் ரோட்டில் கொதிக்கும் வெயிலில் தூக்கிப் போட வேண்டும் போல் தோன்றுகிறது!

ஈரோடு. மேஜர்தாசன்.

• ஸ்ஸ்ஸ்.....! ஜினி ஜூஸ்.....! அட கல்கியிலா?! ம்ம்..... கீப் இட் அப்!

திருத்துறைப்பூண்டி. ஜெயந்திப்ரியன்.

• சட்டசபை — அறிஞர்கள் சபையானால் ஆண்டவன் வடிவமாகும்... ஸ்ரீகாமகோடி பெரியவர்களின் அருள் வாக்கைக் கால நேரத்திற்குத் தகுந்தாற்போல் தேர்ந்தெடுத்துப் போட்டுள்ளீர்கள்.

திருவாரூர். ஜி. சிவராம அய்யர்.

• என்.டி.ஆர். சர்வாதிகாரி என்று கூறுபவர்களிடமிருந்து நேரடி பேட்டியும் அதை வைத்து என்.டி.ஆரின் பேட்டியும் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தன. அது சரி. இரண்டு பக்கமும் பேட்டி எடுத்து வெளியிட்ட உமக்கு 'நடுநிலைத்திலகம்' என்ற பட்டம் கொடுக்கலாம் என்று நினைக்கிறோம்!?

கும்பகோணம். கவிட் ரவி.

• இளநீரை எப்படி அருந்துவது போன்ற கேள்விகளுக்குத்தான் இ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட் போல அரக அண்ணாச்சி இருக்காரே... உமக்கு ஏன் வீண் சிரமம்...?

மேல்பட்டி. எல். மாறன்.

• இளநீர் பருகுங்கால் நிகழும் அனிச்ச செயலைக் கவிதை நயத்தோடு விவரித்த நேர்த்தியை வியந்தவாறு பலமுறை படித்தேன். வெறும் கல்லை பாலிஷ் போட்டு, பள பளக்கச் செய்த அருமை இருந்தது பதிலில்.

மைசூர். சி. நாச்சிமுத்து.

• பெண் குழந்தைகளைப் பெற்றோர்களே வெறுக்கும் கொடுமையை நெஞ்சைத் தொடும் வகையில் படம் பிடித்துக் காட்டிச் சிந்திக்க வைத்திருக்கிறீர்கள். அட்டையில் அழும் அந்தப் பிஞ்சுக் குழந்தையின் முகம் இன்னும் என் இதயத்தை என்னவோ செய்கிறது.

மங்கைநல்லூர். ஆர். செல்வராணி.

• இவ்வார கல்கியின் அட்டைப் படமே மனத்தைக் கலங்க வைத்து விட்டது. கண்ணீர் ததும்பும் விழிகள். அந்த இறைஞ்சும் பாவனை... கட்டுரையை விரைவில் படிக்க வைத்தன. பெண் குழந்தைகள் வெறுக்கப்படுவதற்கு, முக்கியமான முதன்மையான காரணம் வரதட்சணைப் பிரச்னையே. வரதட்சணை வாங்குவதும், கொடுப்பதும் பெருங் குற்றமென அறிவித்து, சட்டத்தை மிகக் கடுமையாக்காத வரை, பெண் குழந்தைக் கருக்களை அழிப்பதும், பிறந்த பச்சிளம் சிசுக்களை எருக்கம் பால் விட்டு அழிக்க முற்படும் நிலையும் என்றுமே தொடரத்தான் செய்யும்.

இராமநாதபுரம். எஸ். லதா.

• அழகு என்றால் இதுதான். அது இப்படித்தான் இருக்கும் என்று வரையறுத்து வைத்துக் கொண்டு வாழ்க்கையுடன் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருப்பவர்களுக்கு, உண்மையான அழகு எது என்பதை உணர்த்தியுள்ளார் மும்தாஜ் யாசின்

அரூர். மு. மதிவாணன்.

• "மனசுக்கு எது புடிக்குதோ அதெல்லாம்தான்... அழகுன்னு தனியா ஒண்ணும் இல்லை" — அழகுக்கு மும்தாஜ் யாசின் கொடுத்துள்ள அழகான, அருமையான விளக்கம். படிக்கப் படிக்க நெஞ்சு தித்தித்தது. 'அழகு' அற்புதமான கதை!

திருப்பரங்குன்றம். டி.கே. சுப்பிரமணியன்.

• இவ்வாரக் கல்கியில் 'பார்க்கலாம்' சிறுகதையும் 'கொதுகசத்தம்' சிறுகதையும் மனத்தைத் தொட்டன.

கொடைக்கானல். வி. சக்திவேல்.

• பார்த்திபனை நான்காவது 'பா' டைரக்டர் எனச் சொல்கிறாரே உமது விமர்சகர்! பாலசந்தர், பாரதி மகேந்திரா, பாரதிராஜா, பாக்யராஜ் என்று முன்பே நான்கு பேர் 'பா' வரிசையில் உள்ளனர்!

குடியாத்தம். கே.வி.எஸ். மணியன்.

• 'புதியபாதை' மூலம் திரையுலகில் காலடி எடுத்து வைத்திருக்கும் பா வரிசை டைரக்டர் பார்த்திபனைத் தாங்கள் மனந்திறந்து பாராட்டியது மனத்துக்கு இதம் அளித்தது. புதியவர்களைத் தட்டிக் கொடுத்து முன்னுக்குக் கொண்டு வருவதில் கல்கிக்கு நிகர் கல்கியே தான்!

வைத்திகவரன் கோயில். லோ.க. உதயன்.

கல்கி விடுமுறை மலர் 1989



வண்ணங்களில்:

* காஷ்மீரக் காட்சிகள்
* கொனாரக்; கன்யாகுமரி.
* ராதிகா; விஜயகாந்த்.
* புவனேசுவரி; W.V. ராமன்.
* பலூன் பயணம்
* கண்காட்சி தரத்தில் —
  — ஓவியங்கள்
  — ஒளிப்படங்கள்
* கவிதை மலர்
* கோகுலம் பக்கங்கள்
* வனவிலங்குகள்; பறவைகள்.
* இருபதுக்கும் மேற்பட்ட சிறு கதைகள்
* இரு குறுநாவல்கள்
* மேடை நாடகம்
* அமரர் 'கல்கி' எழுதிய பூரி யாத்திரை
* மற்றும் ஏராளமான பயணக் கட்டுரைகள்.
* விளையாட்டுக்கள், புதிர்கள்.
* நகைச்சுவை அம்சங்கள்.

விலை ரூ. 10 :: 320 பக்கங்கள்

உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள் அல்லது பதிவுத் தபாலில் பெற ரூ. 16 அனுப்பவும்.

மானேஜர்,
கல்கி,
சென்னை — 600 032.

* வண்ணப்படம்: யோகா.



அலங்கார் ஏ/சி
வசந்தி ஏ/சி
பகல் காட்சி
12-15 மணி
11-30 மணி
அனுஷகா ஏ/சி (4 காட்சிகள்)
உதயம் ஏ/சி
பாண்டியன்
3 காட்சிகள்
விவேக் சித்ரா அளிக்கும்
மற்றும் தமிழகமெங்கும்
புதியபாதை
கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன்..
R.பார்த்திபன்
சந்திரபோஸ், வைரமுத்து
K.ராஜ்ப்ரீத், M.N.ராஜா, 'ஸ்டில்ஸ்' ரவி
தயாரிப்பு
A. சுந்தரம்
ELEGANT

நியாயங்கள்



வநிதாவின் மனத்தைத் தன் வழிக்குப் பக்குவப்படுத்துவதற்குக் கோபிநாத் மிகவும் சிரமப்பட்டான்.

இளம் வயதில் — அதுவும் அழகின் பெட்டகம் — பாதுகாப்பின்றி வாழ்வதில் எத்தனை கஷ்டங்கள் என்பதை அவளுக்கு உணர்த்தினான்.

கிழட்டு மானேஜர் மேகநாதன் முதல் ப்யூன் பூரணலிங்கம் வரை அவளிடம் 'வழிவதை' எடுத்துச் சொன்னான்.

கணவன் மறைவிற்கு ஒரு மாதம் கழித்து அவன் பணியாற்றிய அதே அலுவலகத்தில் வேலை கிடைத்தபோது, மற்றவர்களைவிட கோபிநாத் வித்தியாசமானவனாக இருப்பதை உணர்ந்தாள் வனிதா.

பெற்றோரின் திடீர் மறைவு — சகோதரர்கள் ஒதுங்கிக் கொண்டது ஆகியவை அவளைக் கோபிநாத் பக்கம் சேர்த்தன. ஆனால் பழைய நினைவுகள் அவள் மனத்தில் அவ்வப்போது அலைமோதிக் கொண்டிருந்தன.

நீண்ட யோசனைக்குப் பிறகுதான் மிஸஸ். கோபிநாத் ஆக அவள் சம்மதித்தாள்.

படுக்கை அறையின் குறைந்த வெளிச்சத்தில் கோபிநாத் வனிதாவை அணைத்தபடி பேசினான். "ஒரு வேண்டுகோள் வனிதா" என்றான்.

"என்ன?" அழகிய புருவங்களை உயர்த்தியபடி கேட்டாள் அவள்.

"உன் மனத்தில் விஸ்வநாத் பற்றிய எண்ணங்கள் இன்னும் இருக்கத்தான் செய்யும். காலப்போக்கில்தான் நீ அந்த நினைவுகளை முழுவதுமாக மறக்க முடியும். அப்படி மறக்க முடியாமல் போனாலும் ஆச்சரியமில்லைதான். ஆனால்....."

"என்ன ஆனால்...?"

"நீயும் அவனும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ இந்த வீட்டில் மாட்டப்பட்டிருப்பதை நான் விரும்பவில்லை. அதனால்..." துணிச்சல் இன்றிப் பேச்சை நிறுத்தினான்.

"சொல்லுங்கள்..."

"அந்த போட்டோவை அகற்றிவிடு. பெட்டியின் அடியில் போட்டுவிடு! ப்ளீஸ்...!"

— அவன் குரலில் அருவருப்பு இருப்பதாகப் பட்டது வனிதாவுக்கு.

வனிதா அவனை விநோதமாகப் பார்த்தாள்.

ஒரு முடிவுக்கு வந்தவளாக, ஸ்டூல் போட்டு ஏறி அவளும் விஸ்வநாத்தும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோவை ஆணியிலிருந்து கழற்றினாள்.

மறுநாள்.

தன் விருப்பப்படியே போட்டோவை வனிதா நீக்கி விட்டதைக் கண்ட கோபிநாத் அவளை இறுகத் தழுவினான்.

"வனிதா... யூ ஆர் ரியலி கிரேட்!"

மணி ஒன்பது அடித்தது.

"வநிதா... மணி ஆச்சு... ஏன் இன்னும் டிரெஸ் சேஞ்ச் பண்ணிக்கலை. கிளம்பு. ஆபீசுக்கு!" அவசரப்படுத்தினான்.

ஓர் உறையை அவனிடம் நீட்டினாள். "பிரித்துப் பார்க்கலாமே!"

உறையைப் பிரித்தான்; படித்தான்.

அதிர்ச்சியை முகத்தில் காட்டி, "வாட் நான்சென்ஸ்... வேலையை ரிசைன் பண்ணிட்டே?" கத்தினான்.

வனிதா முகத்தில் அமைதியைக் குடியேற்றி, "ஆமாம்... அவரோடு சேர்ந்து நான் எடுத்துக் கொண்ட போட்டோ வீட்டில் இருக்கக் கூடாது. என்று சொல்லும் போது அவர் மூலமாக — அவர் பிரிவின் மூலம் கிடைத்த வேலையில் மட்டும் நான் தொடர்வது சரியா? அதுதான் ராஜினாமா செய்ய முடிவெடுத்தேன்" — அழுத்தமாகக் கூறினாள்.

கோபிநாத் செய்வதறியாது, சொல்ல வார்த்தைகள் இன்றி அவளைப் பார்த்தான்.

பி.ஆர். பார்த்தசாரதி

ஃபாஷன்! ஃபாஷன்! ஃபாஷன்!

ஆராதனா ஃசாலி, 'ஜெயா பாதுரி' புடைவை, நதியா வளையல், என்று சினிமாவும் நட்சத்திரங்களும் சராசரி மனிதர்களின் வாழ்க்கையை வண்ண மயமாகவும் சுவாரஸ்யமாகவும் ஆக்கிய காலம் ஒன்று உண்டு. ஏன்...? இன்னமும் 'ரஜினி ஸ்டைல்' மொஃபசல் ஏரியாக்களில் பாபுலராகத்தான் இருக்கிறது. ஆனால், சமீப காலமாக, நகரங்களில் இளைஞர்களிடையே சினிமா பாணி நடை உடை பாவனைகளுக்கு மவுசு குறைந்து, பாரம்பரிய ஆடை அணிகலன்கள் பிரபலமாகி வருகின்றன. கைத்தறிப் புடைவைகள், கரை வைத்த கைத்தறி ரவிக்கைகள், மல்லிகைப்பூவுடன் ஒற்றைப் பின்னல், பழைய காலத்து அட்டிகை, வங்கி, ஒட்டியாணம் ஆகியவற்றுக்கு மவுசு திரும்பியுள்ளது. 'மிடி' போன்ற நவீன ஆடைகளைக் கூடப் பாரம்பரிய நெசவில் உருவான கைத்தறித் துணிகளைக் கொண்டு பிரத்தியேகமாகத் தயாரிக்கச் செய்து அணிகிறார்கள். வடக்கிலிருந்து இறக்குமதியான சல்வார் – கமீஸ், சூரிதார் – கமீஸ் ஆடை வகைகளைக் காஞ்சிபுரம் பருத்தி நெசவுத் துணியில் தைத்துப் போட்டுக் கொள்கிறார்கள். சில மாதங்களுக்கு முன் ஹரியானாவில் நடந்த வருடாந்திர கைத்தறி விழாவில், பியரி கார்டின் என்ற நவீன ஃப்ரெஞ்சு ஆடை வடிவமைப்பாளர்கள் கோ – ஆப்டெக்ஸுடன் இணைந்து ஒரு 'ஃபாஷன் ஷோ' நடத்தினார்கள். இதில் கோ – ஆப்டெக்ஸ் கைத்தறிப் பருத்தித் துணிகளுக்கே முதலிடம் அளிக்கப்பட்டது!



* ஜொலிக்கும் இந்த சல்வார் கமீஸ்கள் விசேஷ வைபவங்களுக்கு.

அயல் நாட்டினர் நம் பாரம்பரியக் கலையழகுகளைப் போற்றுவதென்பது புதிதல்ல. ஆனால், நம்மவர்களிடையே 'பாரம்பரியம்' இன்றைய நாகரிகமாகத் திரும்பியுள்ளது தான் ஆச்சரியமான விஷயம்.

இதற்குக் காரணம் Festival of India போன்ற கலைவிழாக்களும் அவற்றுக்கு டி.வி.யில் அளிக்கப்பட்ட முக்கியத்துவமும்தான் என்கிறார் ஃபாஷன் துறை நிபுணரான **சபிதா ராதா கிருஷ்ணா.** சென்னையில் பல வருடங்களுக்கு முன்னரே முதன் முதலாக 'பொடீக்' எனப்படும் முன்னணி நாகரிக உடைகளுக்கான ஷோ ரூமை ஆரம்பித்த சபிதாவைச் சந்தித்தோம்:

"நம்முடைய பழைமையான நெசவுகளும் பாரம்பரிய வண்ணங்களும் யாவை, அவற்றை அணிந்து கொண்டால் எவ்வளவு அழகாக இருக்கும் என்பதை இந்த விழா நிகழ்ச்சிகளை டி.வி.யில் பார்த்தவர்கள் உணர்ந்தார்கள். கைத்தறிப் புடைவைகளை வயதானவர்கள்தான் கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணம் மாறியது. பாரம்பரிய பாணிப் புடைவையுடன் நவீன ரவிக்கை பொருத்தமாக இராது என்பதால், 'ஸ்லீவ்லெஸ்' மற்றும் 'லோ நெக்' ரவிக்கைகள் தற்காலிகமாகக் காணாமல் போயுள்ளன; தலை முடியைக் குட்டையாக வெட்டிக் கொண்ட பெண்கள் சிலர், நீண்ட முடியை வளர்த்துக் கொள்ள முனைந்துள்ளனர்; மூக்கைக் கூட குத்திக் கொண்டுள்ளனர்; காது மடல்களைக் குத்திக் கொண்டு கொப்பு அணிகின்றனர்!

"புடைவை அல்லாத வேறு நவீன உடைகளை அணிவதில் கூட உடல் தெரிய, இறுக்கமாக அணியும் ஃபாஷன் இப்போது இல்லை. சௌகரியமான தொள தொள

ஆடைகளே வரவேற்கப்படுகின்றன.

"ஆனால் இவையெல்லாம் எவ்வளவு நாட்களுக்கு நீடிக்கும் என்பதை மட்டும் நிச்சயமாகச் சொல்லவே முடியாது. இப்போதே ஆங்காங்கே சிலர் சலித்துப் போய், வேறு புதிய ஃபாஷன்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்!

"இந்தியாவில் ஃபாஷன்களின் போக்கை நிர்ணயிக்கும் நகரம் தில்லிதான். உலகின் ஃபாஷன் தலைநகரான பாரிஸிலிருந்தும் இதர மேற்கத்திய நாடுகளிலிருந்தும் தில்லிக்குப் புதிய ஃபாஷன்கள் இறக்குமதியாகின்றன. ஆனால், அவை தில்லிக்கு வந்து சேர்வதற்குள் தங்கள் உற்பத்தி ஸ்தலங்களில் 'Out of fashion' ஆகியிருக்கும் என்பது வேறு விஷயம்! உதாரணமாக, ஆறு வருடங்களுக்கு முன் பாரிஸ் சென்று வந்த ஒருவர் அணிந்திருந்த அவ்வூர் 'தொள தொள' ஆடை ஒன்றை, இந்திய பாணியில் எப்படி மாற்றி வடிவமைக்கலாம் என்று நான் யோசித்ததுண்டு. அதைப் போன்ற தொள தொள உடைதான் (baggies) இப்போது இங்கே ஃபாஷனாக உள்ளது!

இறக்குமதி ஃபாஷனை இந்தியச் சூழலுக்கு ஏற்பத் திருத்தி, இதர நகரங்களுக்கு அளிப்பது தில்லிதான். அரசியல் மையமானதால், இங்கு தோன்றும் ஃபாஷன்கள் உயர்ந்த ரசனையுடன் இருக்கும். எளிமையும் கம்பீ



* ஆண் பிள்ளைகள் கூட காது குத்திக் கொள்கி றார்கள்!



* 'ஆஸிட் வாஷ்' டெனிம் ஜாக்கெட் இப்போது மிகவும் பாபுலர்.



* பாரம்பரிய அழகு — பார்த்துக் கொண்டே இருக்கலாம்!



ஒருவர்: நம்ம கட்சி தலைவி... முன்பு சினிமா நடிகையாய் இருந்தவங்கன்னு எப்படிக் கண்டுபிடிச்சே...?

மற்றவர்: 'உன்னை ஏன் கட்சியில் இருந்து டைவோர்ஸ் செய்யக் கூடாது?' என்று கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருக்காங்களே...

— திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.

ரமும் இணைந்த கலவையாக, அடக்கமான வண்ணங்களில் ஒளிரும். பம்பாய் இதற்கு நேர் மாறுதல்! சினிமாத் தலைநகர் என்பதால் பம்பாய் ஃபாஷன்கள் சற்று பகட்டாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும். பம்பாய் வாசிகள் அணியக் கூடிய சில நிறங்களைத் தில்லி வாசிகள் கனவில் கூடத் தேர்ந்தெடுக்க மாட்டார்கள்!

தங்களுடைய பாரம்பரிய உடையான சல்வார் கமீஸ் தெற்கில் மிகவும் பிரபலமாகி விட்டது குறித்து வட இந்தியர்களுக்குப் பெருமிதம். தென்னிந்தியர்கள் ஃபாஷன்களில் மிகவும் பின்தங்கியவர்கள் என்ற அபிப்பிராயம் அவர்களுக்கு உண்டு. 'பட்டிக் காட்டுப் புடைவை அணிந்து, ஒரு கை எண்ணெய் வைத்துத் தலையை இழுத்துப் பின்னிக் கொள்வார்கள் தென்னிந்தியர்கள்' என்று ஏளனத்துடன் அவர்கள் சொல்வதுண்டு. ஆனால் அதே வட இந்தியர்கள் இன்றைக்குக் காஞ்சி காட்டன்களையும் பட்டுகளையும்தான் விரும்பி அணிகிறார்கள். (டி. வி. தேசிய ஒளிபரப்பில் செய்தி வாசிப்பவர்களைப் பாருங்கள்!) சில வடக்கத்திப் பெண்கள் திருமாங்கல்யத்தை நகை போல் உள்ளங் கழுத்தில் அணிந்து கொள்கிறார்கள்.

''தேசிய ஒருமைப்பாடு வேறெதில் இருக்கிறதோ இல்லையோ, உடைகள் பரிமாற்றத்தில் நிச்சயமாக இருக்கிறது. காஞ்சிபுரத்தை டெல்லிக்கு அனுப்பி விட்டு நாம் சல்வார் கமீஸ்களைத் தத்தெடுத்துக் கொண்டு விட்டோம். இந்த உடையைப் போல் ஃபாஷன் உலகில் நீடித்த இடம் பிடித்த வேறு ஆடை வகை கிடையாது! தற்போது மூன்று தலைமுறையினர் இதனை அணிகின்றனர். ஜீன்ஸ் – டீ.ஷர்ட் அளவுக்குச் சௌகரியமாக உள்ள அதே நேரத்தில், இது பரம்பரையான பெண்கள் உடையாகவும் இருப்பதால் நாகரிகத்துக்கு நாகரிகமும் ஆயிற்று, அடக்கத்துக்கு அடக்கமும் ஆயிற்று. சமீபத்தில் ஒரு பாட்டி என் கடைக்கு வந்து, தமக்குப் பேரன் பிறந்திருப்பதாகவும் குழந்தையைத் தூக்கிக் கொண்டே வேலை செய்ய வசதியாக ஓர் எளிய 'மாடல்' சல்வார் செட் வடிவமைத்துத் தர வேண்டும் என்றும் கேட்டு, ஆர்டர் கொடுத்து விட்டுப் போனார்!

"சென்னை நகரம் பத்து வருடங்களுக்கு முன் இருந்தது போல் 'கர்நாடகமாக' இல்லை இப்போது. முன்பு நான் ஃபாஷன் ஷோக்கள் நடத்தினால் அவற்றில் பங்கேற்க வரும் பெண்களுக்கு உச்சி முதல் கால் வரை நானே அலங்காரம் செய்து விட வேண்டியிருக்கும். இப்போது அத்தகைய 'ஷோ'க்களுக்கு வரும் பெண்கள் நவநாகரிகத்தைக் கரதலபாடமாகத் தெரிந்து வைத்துக் கொண்டுள்ளார்கள். முக்கியமாக, பத்து வருடங்களுக்கு முன் பெண்களுக்கு இருந்த கூச்சமும் ஒடுக்கமும் இப்போது இல்லை. நாகரிக ஆடைகள் அணிவதே பாவம் என்ற மனப்பான்மை போய், நன்றாகவும் நாகரிகமாகவும் உடுத்துவதில் இன்றைய இளைஞர்களும் யுவதிகளும் பெருமை கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னையில் சில அழகு நிலையங்களில் பெண்கள் தங்கள் தலைமுடியை வண்ணச் சாயங்களில் தோய்த்துக் கொள்ள வருவதாகக் கூடக் கேள்விப்பட்டேன்!

''என்னைக் கேட்டால் இத்தகைய அளவு கடந்த ஃபாஷன்கள் நமக்குப் பொருத்தமாக அமைவதில்லை என்பேன். எந்த புதிய ஃபாஷனை வேண்டுமானாலும் பின்பற்றலாம். ஆனால் அதே நேரத்தில் நமது பாரம்பரியத்தையும் மறக்காமல் இருக்க வேண்டும். இந்த வகையில் பாவாடை தாவணி இப்போது படிப்படியாக மறைந்து கொண்டு வருவது எனக்குக் குறையாகவே உள்ளது. இதனால் லெஹங்கா—சோளி என்ற பாரம்பரிய ஆடையை இப்போது அறிமுகப்படுத்தியுள்ளேன். இது பாவாடை தாவணியின் வட இந்திய வடிவம் எனலாம்.

''நகரங்களில் இருப்பவர்கள் கூட ஓரளவுக்குப் பாரம்பரியத்தைக் காப்பாற்றுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள். கிராமவாசிகளுக்குத்தான் அதன் அருமை பெருமைகள் புரிவதில்லை. இத்தனைக்கும், பாரம்பரியங்களின் பிறப்பிடமே கிராமங்கள்தான். ஆனால் சினிமா மோகத்தில் சிக்கி, கிராமத்துப் பெண்கள் கண்ணைப் பறிக்கும் செயற்கை இழைச் சேலைகளையே

ஒரு ஃபாஷன் உரையாடல்!

"ஹாய் டா! இன்னிக்கு ஈவினிங் 'ரெட் டிராகன்ஸ்' We'll have Chinese grub டா!"

"ஓ. கே. சுஜி! உங்க வீட்டுக்கு செவன் ஓ கிளாக்குக்கு வந்துடறேன்... நீ என்ன ட்ரெஸ் போட்டுக்கப் போறே...? நான் டெனிம் ஸ்கர்ட் அண்ட் எக்ஸிபிஷன்ல வாங்கின மிர்ரர் வொர்க் 'டாப்' போட்டுக்கலாம்னு இருக்கேன்..."

"ஓ கமி! நான் இன்னும் உன் புது 'டாப்'பைப் பாக்கவே இல்லை...! ஜுக்டா! நான்கூட புது ஸ்லிப் ஆன்ஸ் வாங்கியிருக்கேன்!"

"வாட் டா! லாஸ்ட் மந்த்தானே புது கோலாப்ஸ் வாங்கினே...?"

"கம்ம்ம்மா டா! But my mother also shouted at me...!"

"ஐயோ, இன்னிக்கு நான் கூட டோஸ் வாங்கினேன்டா...!"

"எதுக்கு டா டோஸ் வாங்கினே...?"

"ஆமா... நான் டோஸ் வாங்கினா உனக்கு thrill! ... கம்மா QS QT நாலாவது வாட்டி பாக்கணும்னு 'ரம்' கிட்டே போன்ல சொல்லிட்டிருந்தேன் டா... My mother heard me and screamed... ஏய்...! இன்னிக்கு ஈவினிங் சைனீஸ் கிரப் வேண்டாம்..."

"ஏன்...?"

"கம்மா! 'பிட் பாட்'ல போய் we'll have pizza and milk shake டா!"



அருஞ்சொற்பொருள்:

- டா — செல்லமான பொதுவின்பால் அடைமொழி.
- டெனிம் ஸ்கர்ட்: ஜீன்ஸ் துணியில் தைத்த. இறுக்கமான முக்கால் பாவாடை.
- டாப் — ஜீன்ஸ் அல்லது ஸ்கர்ட்டுக்கு மேல் அணியும் அங்கி. அணிபவருக்கு இரண்டு சைஸேனும் பெரிதாக இருக்க வேண்டும்.
- மிர்ரர் வொர்க் — கண்ணாடி வேலைப்பாடு.
- ஸ்லிப் ஆன்ஸ் — லேஸ் இல்லாத ஷூஸ்.
- 'கோலாப்ஸ்' — கோலாப்பூரி செருப்பு (ஒரு ஜதை)
- QS QT — கயாமத் ஸே கயாமத் என்ற ஹிந்தி திரைப்படம் (முந்நூறு நாட்களுக்கு மேலாக ஓடிக் கொண்டிருக்கிறது.)
- கிரப் — உணவு.
- ரம் — ரமேஷ் என்பதன் சுருக்கம்.
- Pizza — இத்தாலிய உணவு வகை.
- 'கம்மா': கம்மா!

பெரிதும் விரும்புகிறார்கள். ஒரு முன்னணி ஜவுளி ஆலையில் நான் ஆலோசகராகப் பணியாற்றிய போது பாரம்பரிய டிசைன்களைச் செயற்கை இழைகளில் புகுத்த முயன்று சிபாரிசு செய்தேன். ஆனால் அந்த டிசைன்களை விநியோகஸ்தர்கள் ஏற்கவில்லை! நீண்ட நாள் உழைக்கும் என்பதற்காகச் செயற்கை இழைத் துணிகளை விரும்பி வாங்குவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அவற்றில் நமது வாழ்க்கைக்கும் கலாசாரத்துக்கும் சம்பந்தமே அற்ற வண்ணங்களையும் வடிவங்களையும் புகுத்துவதை என்னால் ஏற்க முடியவில்லை. அப் பணியிலிருந்து விலகிக் கொண்டேன்.



• சபீதா ராதாகிருஷ்ணா.

"நாகரிகமாக உடுத்த நிறையச் செலவழிக்க வேண்டும் என்ற பரவலான தப்பபிப்பிராயம் நிலவி வருகிறது. அறுபத்தைந்து ரூபாய்க்குக் கூட ஓர் அழகான கைத்தறிப் புடைவையை வாங்க முடியும். கற்பனையைச் சிறிது ஓட விட்டால் குறைந்த செலவில், பொருத்தமான மர மணிகளையோ, பாசி மணிகளையோ வாங்கி அதனுடன் அணியலாம். எளிமையான அழகுடன் மிளிரலாம். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், ஃபாஷன் என்பது ஒரு தனிப்பட்ட நபருடைய மனோதர்மத்தின் வெளிப்பாடுதான் என்பது புரியும். ஒவ்வொருவருமே ஃபாஷனாக இருக்க முடியும். கற்பனையையும் மனோதர்மத்தையும் தூண்டும் வகையில், இளம் வயதிலேயே வண்ணங்கள் பற்றியும் வடிவங்கள் பற்றியும் சிந்திக்க, இளம் உள்ளங்களைத் தூண்டினால், கண்ணுக்கு ரம்மியமாக உடுத்தித் தன்னம்பிக்கையுடன் நடைபோடும் தலைமுறைகளை நாம் உருவாக்க முடியும்.

சந்திப்பு: **சீதா ரவி**

அட்டை வண்ணப்படமும் மற்ற படங்களும்: **யோகா**

குளுமையான பேருந்துகளில் களிப்பூட்டும் சுற்றுலாக்களை உங்களுக்கு அளிக்கிறது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

முதன்முறையாக தென்னகத்தில்
சிறு குளுமை ஊர்திகளை
அறிமுகப்படுத்தியுள்ளது
தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

சொகுசுப் பேருந்துகளின் கட்டண அடிப்படையிலேயே
சிறிய-குளுமை ஊர்திகள் வாடகைக்கு விடப்படும்.
சொகுசுப் பேருந்துகளும், குளுமைப் பேருந்துகளும்
குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படும்.
காணத் தவறாதீர்கள் இவற்றை!
கலைவண்ணம் திகழும் காஞ்சிச் சிற்பங்கள்.
கருத்தைக் கவரும் குமரிமுனை.
மனத்திற்கிதமளிக்கும் மலை வாசஸ்தலங்கள்
விலங்குகள் உலவும் சரணாலயங்கள், இன்னும்
மதுரை, மாமல்லபுரம்......

கடுமையான கோடையிலும் இனிமையான
சுற்றுலாக்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்
குளுமையான சொகுசுப் பேருந்துகளில் மேற்கொள்ளுங்கள்.


மேலும் விவரங்களுக்கு அணுகுங்கள்.

சுற்றுலாக்கள்


தினசரி
* சென்னை * மாமல்லபுரம் * திருப்பதி

ஒரு வாரச்சுற்றுலா
* தமிழ்நாடு * தென்னகம்

சனிக்கிழமைகளில்
* மூகாம்பிகா * மந்த்ராலயம் - கோவா



தமிழ்நாடு சுற்றுலா
வளர்ச்சிக் கழகம்
(ஒரு தமிழக அரசு நிறுவனம்)
143, அண்ணாசாலை, சென்னை-600 006.
போன்: 849803, 849115.



DIPR/628/MS/89/SAS.

நினைவு

ஏனோ அந்தப் பெண்மணியைப் பார்க்கும் போது செத்துப் போன அம்மா ஞாபகம்தான் வந்தது.

வருஷம் தவறாமல் ஆனி மாசம் அம்மா செத்துப் போன நாள் வரும். கூடவே சர்ச்சையும்.

''என்றைக்கு?''

''பதிமூணாந்தேதி. லீவுக்குச் சொல்லிட்டீங்களா?''

''சொல்லணும். ஏற்கெனவே ஏகப்பட்ட பிரச்னை. நடுவுல இது வேறே. ம்ம். பேசாமே ஒண்ணு செஞ்சா என்ன?'' என்றேன்.




''வேணாம். பேசாதீங்க...'' என்று தடுக்கும் நளினியின் குரலில் பதற்றம் தெரியும்.

''எல்லாம் மூட நம்பிக்கை.''

''அப்படிச் சொல்லாதீங்க. நாலு வருஷங்களுக்கு முன்னால. செய்ய முடியாமே போயி, கோவில்லே வச்சு செஞ்சோம். அடுத்த வாரமே உங்களுக்கு ஸ்கூட்டர் ஆக்சிடெண்ட். பிழைச்சதே அதிர்ஷ்டம்.''

''ஸ்கூட்டர்ல ஏதோ ரிப்பேர். அதைப் போயி.''

''சரி... போன வருஷம்... அதே மாதிரி நீங்க டில்லிக்கு ஊர் போகணும்னு கோவில்ல செஞ்சீங்க. என்ன ஆச்சு. பிரபுக்கு ஜுரம். ஸ்கூலுக்கு இரண்டு வாரம் லீவு. சீரியஸா போயி... புள்ளை.... பிழைப்பானான்னு இருந்தான்.''

''இப்ப... என்னதான் சொல்றே?'' என்றேன் எரிச்சலாக.

''விளையாட்டே வேணாம். இந்த வருஷம் வீட்டுலதான் திவசம்.''

ரிஷபன்

"உன்னால அவ்வளவு காரியமும் செய்ய முடியாது. அப்புறம்; உடம்பு வலி, அது, இதுன்னு படுத்திட்டு, செஞ்சதுல ஏதோ குறை அப்படீன்னு அடுத்த புராணம் ஆரம்பிப்பே."

"எனக்குத் தெரிஞ்ச மாமி ஒருத்தி இருக்கா. நமக்குக் கூட ஏதோ தூரத்து உறவாம். சமையலுக்கு அவளை வச்சுக்கலாம். நம்ம சாஸ்திரிகளுக்கு நீங்க ஃபோன் பண்ணிடுங்கோ. சிம்பிளாப் பண்ணாலும் வீட்டோட பண்ணிடலாம்." என்றாள்.

தலையசைத்து வைத்தேன்.

மாமி சொன்னபடியே வந்து விட்டாள். மடியாகச் சமையலும் ஆரம்பித்து விட்டது. ரொம்பவும் இயல்பாகச் செய்தாள். சர்வீஸ்தான்!

மாமி முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. இறுக்கம்தான். சற்று மேடான நெற்றி. முகச் சுருக்கம். சின்னக் கண்கள்தான். அம்மாவும் இதே ஜாடைதான். அதனால்தானோ என்னமோ மாமியைப் பார்க்கும் போது... அம்மா ஞாபகம் வந்தது.

கூடையில் இருந்த சின்னச் சின்னக் கத்தரிக்காய்களைப் பார்க்கும் போதும் அம்மா ஞாபகம்தான். கத்தரிக்காய் போட்டு ரசம் வைப்பாள். மசாலாப் பொடி திணித்த பிஞ்சுக் காய்கள். அம்மாவுடன் போய் விட்டது அந்த ரசமும். இவளிடம் கேட்டால் சிரிப்பாள்.

"கத்தரிக்காயை என்ன பண்ணப் போறீங்க." என்றேன்.

"ஏதாவது உளறாதீங்க. திவசத்துக்குக் கத்தரிக்காயெல்லாம் பண்ண மாட்டா."

என்ன அசட்டுத்தனம். அம்மாவுக்கு அதுதானே பிடிக்கும். இன்று அதைச் செய்யாமல், வேறேதோ காய்கறிகளைச் செய்து வைத்து என்ன பயன்?

சாஸ்திரிகளும் இன்னொருவரும் வரவே பதினொரு மணியாகி விட்டது.

வாய் இயந்திரமாய் மந்திரங்களை முணு முணுக்க, மனசுக்குள் அம்மா நினைவுகள்தான்.

அடம் பிடிக்கிற பிரபுவைச் சமாளிக்கிற விதமே தனி.

"தோசை சாப்பிட வாடா."

"எப்ப பார் அதே தோசை! வேணாம், போ." என்பான்.

"இங்கே பார். யானை தோசை, குருவி தோசை" என்பாள்.

மாவை வெவ்வேறு 'ஷேப்'பில் கொட்டித் தோசை வார்த்துச் சாப்பிடச் செய்து விடுவாள்.

"உங்க அப்பனையும் இப்படித்தான் தாஜா பண்ணணும்." என்று கூடவே கமெண்ட் வேறு!

கொஞ்சங் கொஞ்சமாய் வியாதிகள் ஆரம்பித்தன. சாப்பாடு குறைந்து கொண்டே வந்து மோர் சாதத்தில் நின்று விட்டது. எது அதிகப்படியாய்ச் சாப்பிட்டாலும் வாந்தி, பேதிதான்.

நல்லவேளை. அம்மா ரொம்பவும் கஷ்டப்படாமல் போய் விட்டாள்.

"சுபிட்சமா, தீர்க்காயுசா இருக்கணும்" என்றார் சாஸ்திரிகள். சாப்பாடு முடிந்து விட்டது. தட்சணையும் கொடுத்தாகி விட்டது. கிளம்ப வேண்டியதுதான்.

"ரொம்ப திருப்தி ஸார். வரட்டுமா."

போய் விட்டார்கள்.

ஊஹூம். எனக்கு ஏனோ திருப்தியாகவில்லை. மனசுக்குள் ஏதோ குறை நெருடியது. புரிந்தும் புரியாமலும் மந்திரங்களைச் சொன்னதில் திருப்தி ஏற்படவில்லை.

மனசு அலைபாய, பார்வை தன்னிச்சையாய் மாமி மேல் பதிந்தது. அருகே போனேன்.

"மாமி. நீங்க சாப்பிடுங்கோ. நான் பரிமாறட்டுமா? "

நளினி ஏதோ சொல்ல முயல்வது புரிந்தது. 'நம் அந்தஸ்து என்ன. போயும் போயும் சமையல்கார மாமிக்கு நீங்க ஏன் பரிமாறணும்.' என்கிற தொனி புரிந்தது.

ஊஹூம். நான் கவனிக்காதவன் போல அதே கேள்வியைத் திரும்பக் கேட்டேன். ரொம்ப ஆர்வமாய்.

மாமி சோகையாய்ச் சிரித்தாள்.

"எனக்கு எதுவுமே இப்ப ஒத்துக்கிறதில்லே. ஏதோ ருசியாச் சமைப்பேனே ஒழிய நான் சாப்பிடறது மோர் சாதம் மட்டும்தான். வேறெதாவது சாப்பிட்டா, வாந்தி வந்திடும். முடியறதில்லே."

மெல்ல மோர் சாதம் கலந்து தொட்டுக் கொள்ள ஏதுமின்றி, ஒவ்வொரு கவளமாய் விழுங்கினாள்.

அம்மா....

மனசு உடைத்துக் கொள்ள, கண்ணீர் தானாகக் கொட்ட... அடக்க இயலாமல்... விம்ம ஆரம்பித்தேன்.



ஆட்டோ டிரைவர் மாப்பிள்ளையா அமைஞ்சது தப்பாயிடுச்சு!

ஏன், என்னாச்சு?

மொய் எழுதறவங்க கிட்டேயெல்லாம் மேல ஏதாவது போட்டுக் கொடுக்கக் கூடாதான்னு கேட்குறாரு!

நீடாமங்கலம் ஜே.பி.



அத்தியாயம் 41

கரிகாலன் கொலைவெறி

ஆதித்த கரிகாலன் தான் வேட்டையாடச் சென்று வெகுகாலமாயிற்று என்றும், வில் வித்தையையே மறந்து போயிருக்கக் கூடும் என்றும் சொன்னான் அல்லவா? அன்று அவன் வீரநாராயண ஏரிக்கரைக் காட்டில் வேட்டையாடியதைப் பார்த்தவர்கள் அவ்விதம் எண்ண வில்லை. அவனுடைய வில்லிலிருந்து கிளம்பிய அம்புகளுக்கு அன்று எத்தனையோ காட்டு மிருகங்கள் இரையாயின. முயல்களும் மான்களும் கரடிகளும் சிறுத்தைகளும் செத்து விழுந்தன. விலங்கு எதுவும் கண்ணில் படாதபோது வானத்தில் பறந்த பறவைகள் மீது அவனுடைய அம்புகள் பாய்ந்தன. பருந்துகளும் இராஜாளிகளும் அலறிக் கொண்டு தரையில் விழுந்தன. கரிகாலனுடைய கொலை வெறி நேரமாக ஆக அதிகமாகிக் கொண்டிருந்தது. அவனுடன் சென்றவர்களுக்கு அதிக வேலை இருக்கவில்லை. குதிரைகளும் மனிதர்களும் கூட்டமாக இரைச்சலிட்டுக் கொண்டு சென்றதில் காட்டு மிருகங்கள் தத்தம் இடத்திலிருந்து கிளம்பிச் சிதறி ஓடின. மற்றவர்கள் வேட்டையில் செய்த உதவி அவ்வளவேதான். கரிகாலன் மீது பாய வந்த மிருகங்கள் மீது மற்றவர்கள் அம்பு விடுவதையும் வேலை எறிவதையும் கூடக் கரிகாலன் அனுமதிக்கவில்லை. கந்தமாறன் ஒரு தடவை அவ்வாறு கரிகாலன் மீது பாய்ந்து வந்த கரடியின் பேரில் அம்பு எய்தான். அப்போது கரிகாலன் அவன் பக்கம் திரும்பிப் பார்த்து, "கந்தமாறா! நீ கரடியைக் கொல்லப் பார்த்தாயா? என்னைக் கொல்ல முயன்றாயா?" என்று கேட்டான். கந்தமாறன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. பிறகு அவன் வில்லை வளைக்கவே இல்லை.

ஏறக்குறைய சூரியன் உச்சிவானத்தை அடைந்த சமயத்தில் எல்லாரும் களைத்துப் போனார்கள். சற்று ஓய்வு

அமரர் **கல்கி**

எடுத்துக் கொண்டு வீடு திரும்பலாமே என்ற யோசனை எல்லாருடைய மனத்திலும் தோன்றியது. ஆனால் கரிகாலனோ களைத்துப் போன குதிரையை மேலும் காட்டு வழிகளில் செலுத்திக் கொண்டு போனான்.

காலை நேரத்திலெல்லாம் கந்தமாறன் கரிகாலனையொட்டிப் போய்க் கொண்டிருந்தான். "என்னைக் கொல்லப் பார்த்தாயா?" என்று கரிகாலன் அவனைக் கேட்ட பிறகு கந்தமாறன் பின்னால் தங்கிப் பார்த்திபேந்திரனுடன் சேர்ந்துகொண்டான். அவனிடம் இளவரசரின் முரட்டுத் தனமான நடத்தையையும் பேச்சையும் பற்றிக் குறை கூறத் தொடங்கினான். பார்த்திபேந்திரன் அதற்குச் சமாதானம் கூற முயன்றான்.

இந்தச் சமயம் பார்த்து வந்தியத்தேவன் கரிகாலனை அணுகினான். பிறகு அவர்கள் இருவருமே சேர்ந்து முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். வந்தியத்தேவன் வில்லும் அம்பும் எடுத்து வரவில்லை. அவனுக்கு வில்வித்தை அவ்வளவாகப் பழக்கமும் இல்லை. கையில் வேல் மட்டுந்தான் கொண்டு வந்திருந்தான். ஆகையால் கரிகாலனுடைய வேட்டையில் குறுக்கிடாமல் அவன் ஜாக்கிரதையாகச் சென்று வந்தான். 'ஏதாவது அபாயம் நேருவதாக இருந்தால் வேலை உபயோகிப்பதற்கு மட்டும் எச்சமயமும் ஆயத்தமாகப் போய்க் கொண்டிருந்தான். அதற்கு அவசியம் உச்சி நேரம் மட்டும் ஏற்படவில்லை.



கந்தமாறன் பார்த்திபேந்திரனிடம் "இன்றைக்கு இவ்வளவு வேட்டை ஆடியது போதாதா? இன்று ஒரு நாளிலேயே இந்தக் காட்டிலுள்ள விலங்குகளை எல்லாம் கொன்று தீர்த்து விடுவார் போலிருக்கிறதே? இவருடைய வேட்டை வெறி தணிவதற்குக் கொல்லிமலைக்குத்தான் போக வேண்டும். 'இன்றைக்குப் போதும்; வீடு திரும்பலாம்' என்று சொல்லுங்கள்!" என்று கூறினான்.

அதற்குப் பார்த்திபேந்திர பல்லவன், "தம்பி! இளவரசரின் உள்ளத்தில் ஏதோ கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை விட்டுக் கொடுத்து விடுவது என்றால் இலேசான காரியமா? அந்த ஆத்திரத்தையெல்லாம் வேட்டையில் காட்டுகிறார். அதுவரையில் நல்லதுதான். இல்லாவிடில் உன் மீதும் என் மீதும் காட்டுவார். அவராகச் சலிப்புற்றுப் 'போதும்' என்று சொல்லட்டும். நாம் தலையிட வேண்டாம்" என்றான்.

இந்தச் சமயத்தில் அந்த வனம் வனாந்தரமெல்லாம் நடுங்கும்படியான உறுமல் சத்தம் ஒன்று கேட்டது.

கந்தமாறன் முகத்தில் பீதியின் அறிகுறி காணப்பட்டது. "ஐயோ! காட்டுப் பன்றி! இளவரசரை நிற்கச் சொல்லுங்கள்!" என்றான்.

"காட்டுப் பன்றிக்கு என்ன அவ்வளவு பயம்? புலி, கரடியெல்லாம் இளவரசரிடம் பட்ட பாட்டில் பன்றி எந்த மூலை?" என்றான் பார்த்திபேந்திரன்.

"நீங்கள் தெரியாமல் சொல்லுகிறீர்கள். இந்தக் காடுகளில் உள்ள பன்றிகள் புலி கரடிகளைச் சின்னாபின்னமாக்கிவிடும்! யானையை முட்டிக் கீழே தள்ளிவிடும்! குதிரைகள் இலட்சியமே இல்லை. அம்பும் வேலும் காட்டுப்பன்றியின் தோலிலே பட்டுத் தெறித்து விழுமே தவிர அதன் உடலுக்குள்ளே போகாது!.... ஐயா!

ஐயா! நில்லுங்கள்!'' என்று கந்த மாறன் கூச்சலிட்டான்.

அதே சமயத்தில் காட்டுப் புதர்களிலே ஒரு சிறிய சுழற் காற்று அடிப்பது போன்ற அல்லோல கல்லோலம் ஏற்பட்டது. மறு நிமிடம் குட்டி யானைகளைப் போன்ற கரிய பெரிய உருவம் வாய்ந்த இரண்டு காட்டுப் பன்றிகள் வெளிப்பட்டன. அவை ஒரு கண நேரம் நின்று குதிரைகளையும் அவற்றின் மீது வந்தவர்களையும் உற்றுப் பார்த்தன.

கந்தமாறன் ''ஜாக்கிரதை ஐயா! ஜாக்கிரதை!'' என்று கூச்சலிட்டான்.

பின் தொடர்ந்து வந்த வேட்டைக்காரர்களில் சிலர் இதற்குள் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்கள் தாரை தப்பட்டைகளைப் பிராணன் போகிற அவசரத்துடன் முழக்கிக் கொண்டு ''கா கூ'' என்று கூச்சலிட்டார்கள்.

அந்தப் பன்றிகள் என்ன நினைத்துக் கொண்டனவோ, என்னமோ தெரியவில்லை. ஒரு வேளை அவற்றின் குட்டிகளை நினைத்துக் கொண்டிருக்கலாம். குட்டிகளுக்கு ஆபத்து வராமல் தடுக்க வேண்டுமென்ற உணர்ச்சியினால் தூண்டப்பட்டிருக்கலாம். அல்லது தாரை தப்பட்டைகளின் சத்தத்தைக் கேட்டு மிரண்டிருக்கலாம். பன்றிகள் இரண்டும் வெவ்வேறு திசையை நோக்கிப் பிய்த்துக்கொண்டு ஓடத் தொடங்கின.

கந்தமாறன் அதைப்பார்த்துவிட்டு, ''கோமகனே! அவை போய்த் தொலையட்டும். ஐந்தாறு வேட்டை நாய்கள் இல்லாமல் ஒரு காட்டுப் பன்றியைத் துரத்திக் கொல்ல முடியாது!'' என்றான்.

கரிகாலன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வில்லை வளைத்து அம்பை விட்டான். அது ஒரு பன்றியின் முதுகில் போய்த் தைத்ததைப் பார்த்து விட்டு இளவரசன், ''ஆஹா!'' என்று உற்சாக கோஷம் செய்தான். அடுத்த கணத்தில் அந்தப் பன்றி உடம்பை ஓர் உலுக்கு உலுக்கியது. அம்பு தெறித்துக் கீழே விழுந்தது; பன்றி மேலே ஓடியது.



கந்தமாறன் அப்போது சிரித்த சிரிப்பில் ஏளனத்தின் தொனி தெரிந்தது. கரிகாலன் அவனைப் பார்த்து, ''கந்தமாறா! எங்கே ஒரு பந்தயம்! நானும் வய்தியத்தேவனும் அந்தப் பன்றியைத் தொடர்ந்து போய் அதைக் கொன்று எடுத்துக் கொண்டு வருகிறோம். நீயும் பார்த்திபேந்திரனும் இன்னொரு பன்றியைத் துரத்திப் போய்க் கொன்று எடுத்து வாருங்கள்! இந்தப் பன்றிகள் இரண்டையும் கொல்லாமல் அரண்மனைக்குத் திரும்பக் கூடாது!'' என்று சொல்லிக் கொண்டே குதிரையைத் தட்டி விட்டான். வந்தியத்தேவனும் அவனுடன் சென்றான்.

அவர்கள் தொடர்ந்து சென்ற காட்டுப் பன்றி எந்தத் திசையில் எந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிறதென்பது கொஞ்ச நேரம் வரையில் தெரிந்து கொண்டிருந்தது. ஏனெனில் பன்றி சென்ற வழியிலிருந்த செடி கொடிகளும் புதர்களும் அந்தப் பாடு பட்டிருந்தன. பின்னர் ஒரு சிறிய கால்வாய் குறுக்கிட்டது. அது காட்டில் பெய்யும் மழைத் தண்ணீரை ஏரியில் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய். அவ்விடத்துக்கு வந்த பிறகு பன்றி எந்தப் பக்கம் போயிற்று என்று கண்டுபிடிக்க முடியவில்லை. கால்வாயைக் கடந்து அப்பாலுள்ள காட்டுக்குச் சென்றதா? கால்வாய் ஓரமாக இந்தப் பக்கமாகவோ, அந்தப் பக்கமாகவோ சென்றதா என்பதை அறிய முடியவில்லை.

அச்சமயம், கால்வாயின் வழியாகத் தெரிந்த ஏரியின் விசாலமான நீர்ப் பரப்பில் தெரிந்த ஒரு காட்சி அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. படகு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதிலிருந்தவர்கள் பெண்மணிகள் என்றும் அறியக் கூடியதாயிருந்தது. ஆனால், அவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. வந்தியத் தேவனும் கரிகாலனும் அச்சமயம் இருந்த இடத்தை நோக்கியே படகு வருவதாக முதலில் காணப்பட்டது. பிறகு திசை சற்றுத் திரும்பி, ஏரிக் கரையோரமாக இருந்த இன்னொரு தீவை நோக்கிச் சென்று படகு மறைந்து விட்டது.

''வல்லவரையா! படகில் வந்தவர்கள் யாராயிருக்கும்? பெண்மணிகள் போலத் தோன்றினார்கள் அல்லவா?'' என்றான் கரிகாலன்.

''பெண்கள் போலத்தான் தோன்றியது. அதற்கு மேல் எனக்கும் தெரியவில்லை'' என்றான் வந்தியத் தேவன்.

''ஒருவேளை சம்புவரையர் வீட்டுப் பெண்களாயிருக்குமோ?''

''இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அவர்கள் ஏன் இவ்வளவு தூரம் வர வேண்டும்?''

''ஆமாம்; அவர்களாயிருக்க முடியாதுதான்.... காலையில் பழுவேட்டரையர் புறப்பட்டுப் போய் விட்டார் அல்லவா? நிச்சயந்தானே?''

''நிச்சயந்தான், ஐயா! அரண்மனைவாசல் திறப்பதையும் அவர் யானை மீது வெளியே போவதையும் நானே பார்த்தேன்.''

''அவர் மட்டுந்தான் போனாரா?''

''ஆமாம்; கிழவர் மட்டுந்தான் போனார். இளைய ராணி போகவில்லை.''

''அந்தக் கிழவரைப் போன்ற வீராதி வீரனை எங்கே பார்க்கப் போகிறோம்? என் பாட்டனார் மலையமானைக் கூடப் பழுவேட்டரையருக்கு அடுத்தபடியாகத்தான் சொல்ல வேண்டும்.....''

''ஐயா! அந்தக் கிழவர்களைப் பற்றியெல்லாம் பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறேன். தங்களுடைய வீரத்தைப் போர்க் களத்தில் நேரில் பார்த்திருக்கிறேன். கடம்பூர் அரண்மனையிலும் பார்த்தேன். கிழவர்கள், குமரர்கள் எல்லாரையும் எப்படி நடுநடுங்க அடித்துக் கொண்டிருந்தீர்கள்!'' என்றான் வந்தியத் தேவன்.

''அது உண்மைதான். ஆனால் எதற்காக அவ்வளவு தடபுடல் செய்தேனோ, அந்தச் சந்தர்ப்பம் நெருங்கி வந்திருக்கும் போது எனக்கு உள்ளமும் உடலும் நடுங்குகின்றன. என்னைப் போன்ற பயங் கொள்ளிக் கோழையை இந்தச் சோழ நாட்டிலேயே காண முடியாது....

''இளவரசே! இன்று காட்டில் வேட்டையாடிய போது அப்படித் தாங்கள் பயந்து நடுங்கியதாகத் தெரியவில்லையே? வன விலங்குகள், பட்சிகள், பின்னோடு வந்தவர்கள் எல்லாரையும் அல்லவா நடுநடுங்கச் செய்தீர்கள்?''

''இவையெல்லாம் ஒரு தைரியத்தில் சேர்ந்ததா? கேவலம் ஒரு வேட்டை நாய் வேங்கைப் புலி மீது பாய்ந்து கொல்லுகிறது. காட்டுப் பன்றி மத யானையோடு சண்டைக்குப் போகிறது. வேட்டையாடும் தைரியம் ஒரு தைரியமா? வல்லவரையா! கேள்! நான் செய்த சூழ்ச்சி பலித்து விட்டது. பழுவேட்டரையர் நந்தினியைத் தனியாக விட்டுவிட்டுச் சென்று விட்டார். ஆயினும்அவளைத்தனிமையில்பார்த்துப் பேசுவதைப் பற்றி எண்ணினால் எனக்குப் பீதி உண்டாகிறது'' என்றான் ஆதித்த கலிகாலன்.

''ஐயா! அதற்குக் காரணம் உண்டு. இத்தனை காலமும் பழுவூர் இளைய ராணியைப் பற்றி ஒருவிதமாக எண்ணியிருந்தீர்கள். இப்போது அவர் தங்கள் சகோதரி என்பதை அறிந்திருக்கிறீர்கள். அவரோ தங்கள் குலத்தையே அழித்துவிட விரும்பும் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்து கொண்டிருக்கிறார். இதையெல்லாம் அவரிடம் சொல்லுவது கஷ்டமான காரியம்தான். எனக்கே அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் என்னால் சொல்ல முடியவில்லையே....''

"நண்பா! நீ அறிந்து வந்து கூறிய செய்தி ஒவ்வொன்றும் திடுக்கிடச் செய்வதாகவே இருக்கிறது. இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் சிற்சில பழைய விஷயங்களை யோசித்துப் பார்த்தால், உண்மையாக இருக்கலாம் என்றும் தோன்றுகிறது. எனக்கும் அவளுக்குமிடையில் எப்போதும் ஒரு மாயத்திரை இருந்து வந்தது. பழையாறை பெரிய பிராட்டியார் — செம்பியன் மாதேவியார் — நந்தினியுடன் நான் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அந்த நாளில் வற்புறுத்திச் சொன்னார். ஆனால் உண்மை முழுதையும் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் இவ்வளவெல்லாம் நேர்ந்திராது.....

"செம்பியன் மாதேவிக்கு முழு உண்மையும் தெரிந்திராமலிருக்கலாம். யாரோ அநாதை ஊமை ஸ்திரீ பெற்றுப் போட்டு விட்டுப் போன பெண் என்று மட்டும் அறிந்திருக்கலாம். சுந்தர சோழரின் மகள் பழுவூர் இளைய ராணி என்பது ஒருவேளை தெரியாமலிருக்கலாம்."

அத்தியாயம் 42
"அவள் பெண் அல்ல!"

இளவரசன் கரிகாலன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். இளம்பிராயத்து நினைவுகள் அவன் உள்ளத்தில் அலை அலையாக மோதிக் கொண்டு தோன்றி, குமுறிக் கொந்தளித்து விட்டுப் பிறகு வேறு நினைவுகளுக்கு இடங்கொடுத்து விட்டு மறைந்தன.

அந்த நினைவு அலைகளைப் பலவந்தமாகத் தடுத்து நிறுத்தி ஒரு தீர்க்கமான மூச்சு விட்டு விட்டுக் கரிகாலன் கூறினான்:—

"போனதைப் பற்றி இப்போது பேச வேண்டாம். நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசலாம். அதற்காகவே உன்னைத் தனியாக அழைத்து வந்தேன். பந்தயத்தில் நாம் தோற்று விட்டோம். பன்றி போய் விட்டது. இனி என்ன செய்வது, எப்படிச் செல்வது என்று யோசித்து முடிவு செய்யலாம். வல்லவரையா! நந்தினியிடம் அவளுக்கும் எனக்கும் உள்ள உறவை எப்படிச் சொல்வதென்று நினைத்தாலே எனக்குப் பீதி உண்டாகிறது. அவள் முகத்தை நன்றாக நிமிர்ந்து பார்க்கக்கூட என்னால் முடியவில்லை. தப்பித்தவறிப் பார்க்கும் போதெல்லாம், வீர பாண்டியனுடைய உயிருக்காக அவள் மன்றாடியபோது எப்படி முகத்தை வைத்துக்கொண்டாளோ, அப்படியேவைத்துக் கொள்கிறாள். அவளுடைய பார்வை என் நெஞ்சை வாள் கொண்டு அறுப்பது போலிருக்கிறது. என் சகோதரி வீர பாண்டியன் மீது காதல் கொண்டு அவன் உயிருக்காக என்னிடம் மன்றாடினாள் என்பதை நினைத்தாலே என் நெஞ்சு உடைந்து விடும் போலிருக்கிறது. வல்லவரையா! உன் கருத்து என்ன? இன்னமும் அவளுக்கு உண்மை தெரியாது என்றா நினைக்கிறாய்? அவள் சுந்தர சோழரின் மகள் என்றும், எங்களுக்கெல்லாம் சகோதரி என்றும் அறிய மாட்டாள் என்றா கருதுகிறாய்?"

"கோமகனே! இவையெல்லாம் தெரிந்திருந்தால், இன்னமும் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களுடன் சேர்ந்திருப்பாரா? சோழகுலத்துக்குவிரோதமாக ஒரு சிறு பிள்ளையைச் சிம்மாசனத்தில் அமர்த்திப் பாண்டிய நாட்டு மன்னனாகவும் சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தியாகவும் மணி மகுடம் சூட்டியிருப்பாரா? அந்த மணி மகுடத்தைத் தாங்கி நிற்பதாகக் கையில், கத்தி ஏந்திச் சபதம் செய்திருப்பாரா? இவையெல்லாம் திருப்புறம்பயம் பள்ளிப்படையருகில் நள்ளிரவில் நடந்ததை நானே பார்த்தேன்....."

"இவ்வளவையும் பார்த்த உன்னை





காந்தமென கவர்ந்திழுக்கும் தன்மையது.



நந்தினி உயிரோடு விட்டு விட்டதை நினைத்தால் வியப்பாயிருக்கிறது."

"ஐயா! எனக்கு அதில் வியப்பு இல்லை. பெண் உள்ளத்தில் இயற்கையாகக் குடி கொண்டுள்ள இரக்கம் காரணமாயிருக்கலாம் அல்லவா?"

"வல்லவரையா! நீ உலகமறியாதவன். பெண் உள்ளத்தில் குடி கொண்டுள்ள வஞ்சமும் வஞ்சனையும் இத்தகையவை என்பது உனக்குத் தெரியாது. என்ன நோக்கத்துடன் உன்னை அவள் உயிரோடு விட்டாள் என்பதை நான் அறியேன். ஆனால் என்னை எதற்காக ஓலை அனுப்பி வரவழைத்தாள் என்பது என் அந்தரங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது."

"இளவரசே! அது என்ன காரணமாயிருக்கும்!"

"என்னைக் கொன்று வீர பாண்டியனுக்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காகத்தான் வரவழைத்திருக்கிறாள்...."

"ஐயா! அப்படி ஏதாவது விபரீதம் நேர்ந்துவிடப் போகிறதென்று எண்ணித்தான் இளையபிராட்டியும் முதன் மந்திரியும் என்னை அவசரமாக அனுப்பி வைத்தார்கள். ஆனால் அவர்கள் கடம்பூருக்குப் போக வேண்டாம் என்று சொன்னதைத் தாங்கள் கேட்கவில்லை...."

"வல்லவரையா! இளையபிராட்டியும் முதன் மந்திரியும் மிக மிக அறிவாளிகள்தான். ஆனால் விதியை அவர்களால் கூடத் தடுக்க முடியாது அல்லவா? அருள்மொழி வர்மனைப் பற்றிச் சோதிடர்கள் சொல்லியிருப்பதையெல்லாம் உண்மையாக்குவதற்காகவே விதி என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறதோ, என்னமோ, யார் கண்டது? வல்லவரையா! கந்தமாறன் என் பின்னாலிருந்து அம்பை விட்டானே? உண்மையில் அவன் கரடியைக் குறி பார்த்து விட்டானா? என்னைக் குறி பார்த்து விட்டானா? நீ கவனித்தாயா?"

"நான் கவனிக்கவில்லை, ஐயா! ஆனால் கந்தமாறன் அத்தகைய துரோகம் செய்யக் கூடியவன் என்று நான் ஒரு நாளும் ஒப்புக்கொள்ள மாட்டேன். வீட்டுக்கு வந்த விருந்தாளியை, அதிலும் சக்கர வர்த்தியின் குமாரனைப் பின்னாலிருந்து அம்பு எய்து கொல்லக் கூடியவனா கந்தமாறன்? அவனுடைய அறிவுக் கூர்மையைப் பற்றி எனக்கு அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் இல்லைதான். முதுகில் குத்தப்பட்டு உணர்வற்றுக் கிடந்தவனை நான் தூக்கிக் கொண்டு போய்க் காப்பாற்றினேன். கண் விழித்ததும் என்னைப் பார்த்த படியால் நான்தான் அவனைக் குத்தியதாக எண்ணிக் கொண்டான். அப்போது அவன் என்பேரில் கொண்ட பகைமை இன்னும் மாறவில்லை. ஆனால் அவனுடைய புத்தி கொஞ்சம் கட்டையாயிருந்தாலும் துரோக சிந்தையுள்ளவன் அல்ல!......"

"நண்ப! ஓர் அழகிய பெண்ணின் மோகனாஸ்திரத்துக்கு எவ்வளவு சக்தியுண்டு என்று உனக்குத் தெரியாது. எவ்வளவு நல்லவனையும் அது துரோகச் செயல் புரியச் செய்து விடும்....."

"ஐயா! பெண்களின் மோகன சக்தியைப் பற்றி நானும்சிறிது அறிந்து தானிருக்கிறேன். அதனால் நான் ஒரு நாளும் துரோகியாகி விடமாட்டேன்....."

"ஆகா!மணிமேகலைநல்லபெண், உன்னைத் துரோகமான காரியம் செய்யும்படி ஏவ மாட்டாள்..."

"நான் மணிமேகலையைச் சொல்லவில்லை. பூரண சந்திரனைப் பார்த்த கண்களுக்கு மின்மினி கவர்ச்சிகரமாகத் தோன்ற முடியுமா?"

"பூரண சந்திரன் என்று யாரைக் குறிப்பிடுகிறாய்?"

"இளவரசே! கோபிக்க வேண்டாம். பழையாறை இளைய பிராட்டியைத்தான் சொல்லுகிறேன்...."

"அடே! அதிகப் பிரசங்கி! உலகிலுள்ள மன்னாதி மன்னர்கள் எல்லாரும் குந்தவையின் கைப்பிடிக்கத் தவம் கிடக்கிறார்கள். அத்தகைய என் சகோதரியை நீ மனத்தினாலும் நினைக்கலாமா?"

"ஐயா! பூரண சந்திரனுடைய மோகனத்தையும் தண்ணொளியையும் பூலோக சக்கரவர்த்திகளும் பார்த்து அநுபவிக்கிறார்கள்; ஏழை எளியவர்களுந்தான் நிலவில் நின்று

களிக்கிறார்கள். அவர்களை யார் தடுக்க முடியும்?''

''ஆமாம்; உன் பேரில் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. தெரிந்து தான் நான் உன்னை என் சகோதரியிடம் ஓலையுடன் அனுப்பினேன். நீயும் அவளுக்குத் திருப்தியாக நடந்து கொண்டாய். ஆனால் பார்த்திபேந்திரனிடம் மட்டும் இதையெல்லாம் சொல்லி விடாதே! அவன் சோழ குலத்துக்கு மருமகனாகித் தொண்டை நாட்டுக்கு மன்னனாக விளங்கலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறான்......''

''ஐயா! அவ்விதம் சில காலத்துக்கு முன்பு வரையில் இருந்திருக்கலாம். இப்போது கந்தமாறன், பார்த்திபேந்திரன் இருவரும் நந்தினி தேவி காலால் இட்ட வேலையைத் தலையினால் செய்யக் காத்திருக்கிறார்கள்......''

''அதை நான் கவனித்து வருகிறேன். ஆகையினால்தான் அவர்கள் விஷயத்தில் எனக்குப் பயமாயிருக்கிறது.''

''எல்லாவற்றையும் உத்தேசிக்கும் போது, தாங்கள் இளைய ராணியைச் சீக்கிரம் சந்தித்து எல்லா உண்மைகளையும் சொல்லி விடுவது அவசியம் என்று தோன்றுகிறது.''

''நண்பா! எனக்கு அவ்வளவு தைரியம் வரும் என்று தோன்றவில்லை. எனக்குப் பதிலாக நீயே அவளைச் சந்தித்துச் சொல்லி விடடால் என்ன?''

''இளவரசே! நான் சொன்னால் இளைய ராணிக்கு நம்பிக்கை ஏற்படாது. ஒரு முறை நான் அவரை ஏமாற்றி விட்டுத் தப்பித்துக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆகையால் இதுவும் ஏதோ ஒரு சூழ்ச்சி என்று கருதக் கூடும்.''

''ஆனால் நான் நந்தினியைத் தனியாகச் சந்திப்பது எப்படி? அவளோ அந்தப்புரத்தில் இருக்கிறாள்!''

''ஐயா! மணிமேகலையின் மூலம் அது சாத்தியமாகும். அதற்கு வேண்டிய ஏற்பாடு நான் செய்கிறேன்....''

''மணிமேகலையை நீ கைக்குள் போட்டுக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. நல்ல காரியந்தான்! எது எப்படியானாலும் மணிமேகலையை உனக்குத் திருமணம் செய்து வைத்து விட்டேனானால், என் உள்ளம் ஓரளவு நிம்மதி அடையும்.''

''ஐயா! மணிமேகலையை நான் என் உடன் பிறந்த சகோதரியாகக் கருதுகிறேன். அவளுக்கு இன்னும் பன்மடங்கு மேலான அதிர்ஷ்டம் கிட்டக் கூடும் என்று எதிர்பார்க்கிறேன்......''

''எதைப் பற்றிச் சொல்கிறாய்?''

''தெரியவில்லையா, இளவரசே! சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசரின் உள்ளத்தில் கன்னி மணிமேகலை இடம் பெற்றிருப்பதாக ஊகிக்கிறேன். சற்று முன் சம்புவரையர் குமாரியைப் பற்றி ஒரு மாதிரி பேசினேன். என் மனத்தைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்காக அவ்விதம் சொன்னேன். இளையபிராட்டி ஒருவரைத் தவிர இந்த உலகில் பிறந்த வேறு எந்தப் பெண்ணும் மணிமேகலைக்கு அறிவிலும் குணத்திலும் இணையாக மாட்டார்கள். தாங்கள் மட்டும் மணிமேகலையை மணந்து கொண்டால் நம்முடைய தொல்லைகள் எல்லாம் தீர்ந்துவிடும். சம்புவரையரும் கந்தமாறனும் நம்முடன் சேர்ந்து விடுவார்கள். பழுவேட்டரையர்கள் தனித்துப் போய் விடுவார்கள். இளைய ராணியின் சக்தியும் குறைந்துவிடும். மதுராந்தகத் தேவர் பின்னர் இராஜ்யம் என்ற பேச்சையே எடுக்க மாட்டார். சிற்றரசர்களின் சூழ்ச்சியையும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளின் சதியையும் ஒரேயடியாய் முறியடித்து வெற்றி காணலாம்......



''எல்லாம் சரிதான், தம்பி! ஆனால் கடம்பூருக்கு நான் திருமணம் செய்து கொள்வதற்காக வரவில்லை. ஏதோ ஒரு பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று என் மனத்தில் தோன்றிக் கொண்டிருக்கிறது. நான் சொல்கிறேன், கேள்! பழுவேட்டரையர் மதுராந்தகனோடு திரும்பி வரும் போது ஒரு பெரிய படையுடன் வரப் போகிறார்......''

''ஐயா! அப்படியானால் நாமும் திருக்கோவலூர் அரசருக்குச் சொல்லி அனுப்பிப் படை திரட்டிக் கொண்டு வரச் செய்தால் என்ன? எதற்கும் முன் ஜாக்கிரதையுடன் இருப்பது நல்லதல்லவா?''

''நானும் அதைப் பற்றி யோசித்து வருகிறேன். ஒவ்வொரு சமயம் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? இந்தக் கடம்பூர் அரண்மனையைத் தரை மட்டமாக்கி, இங்கே சதியாலோசனை செய்தவர்கள் அத்தனை பேரையும் அரண்மனை வாசலில் கழுவிலேற்ற வேண்டுமென்று தோன்றுகிறது. என் தந்தையை முன்னிட்டுத்தான் கோபத்தை அடக்கிக் கொள்கிறேன். அவரை மட்டும் நீ காஞ்சிக்கு அழைத்து வந்திருந்தால்....?''

''இளவரசே! அவரிடம் தங்கள் ஓலையைச் சேர்ப்பிப்பதே பிரம்மப் பிரயத்தனமாகி விட்டதே!''

''ஆமாம்; சக்கரவர்த்தி இந்தப் பழுவேட்டரையர்களிடம் நன்றாய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். என் பெற்றோர்களுக்கென்று காஞ்சி மாநகரில் நான் கட்டிய பொன் மாளிகையில் வௌவால்கள் சஞ்சரிக்கின்றன. நான் உயிரோடிருக்கும் போது அவர்களை அம்மாளிகையில் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ, என்னமோ தெரியாது. இந்தக் கடம்பூரை விட்டு உயிரோடு போவேனோ என்று கூடச் சந்தேகமாயிருக்கிறது.....''

''இளவரசே! தாங்கள் இவ்விதம் பேசப் பேச, மலையமானைப் படைகளுடன் வரச் சொல்வது மிக்க அவசியம் என்று தோன்றுகிறது...''

''அந்தக் காரியத்துக்கு உன்னையே அனுப்பலாமா என்று பார்க்கிறேன்....''

''ஐயா! மன்னிக்க வேணும்! தங்களை விட்டு ஒரு கணமும் பிரியவே கூடாது என்று தங்கள் தமக்கையார் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.....''

''அதை நீ இதுவரை நன்றாக நிறைவேற்றி வருகிறாய்.''

''பார்த்திபேந்திர பல்லவர் இங்கே சும்மாத்தான் இருக்கிறார். பொழுது போகாமல் கஷ்டப்படுகிறார்....''

''ஆமாம்; பழுவூர் இளைய ராணியைப் பாராத ஒவ்வொரு கணமும் அவனுக்கு ஒவ்வொரு யுகமாக இருக்கிறது. பார்த்திபேந்திரன் பெண்ணழகுக்கு இவ்வளவு அடிமையாவான் என்று நான் கனவிலும் கருதவில்லை. அவனைத்தான் மலையமானிடம் அனுப்ப வேண்டும்.''

''சரியான யோசனை, ஐயா!''

''அவன் இல்லாதபோது எனக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் உதவிக்கு நீ இருக்கவே இருக்கிறாய்...''

''இளவரசே! யார் இருந்தாலும் இல்லாவிட்டாலும், தங்களுக்குத் தீங்கு செய்யத் துணிவுள்ளவன் இந்த உலகில் இருப்பதாக நான் கருதவில்லை. தாங்கள் இல்லாத போது தங்களைப் பற்றி ஏதேதோ பேசிய வீரக் கிழவர்கள், தங்களை நேரில் பார்த்ததும் கை கால் நடுங்கி வாய் குழறித் தடுமாறுவதை நேரில் பார்த்தேனே?''

''தம்பி! கையில் கத்தி எடுத்துப் போராடக் கூடிய எந்த ஆண் மகனுக்கும் நான் பயப்படவில்லை. பின்னாலிருந்து முதுகில் அம்பு விடக் கூடிய கந்தமாறன் போன்றவர்களுக்கும் நான் பயப்படவில்லை.....''

''மறுபடி கந்தமாறனைப் பற்றி அப்படிச் சொல்கிறீர்களே....?''

''கேள் தம்பி! ஒரு பெண்ணின் நெஞ்சின் ஆழத்தில் உள்ள வஞ்சத்துக்குத்தான் அஞ்சுகிறேன். அவள் மனத்தில் என்ன வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்று எண்ணும் போதெல்லாம் என் உள்ளம் பதைபதைக்கிறது. அவள் என்னை மர்மமாகப் பார்க்கும் ஒவ்வொரு பார்வையும் என் நெஞ்சில் ஈட்டியைச் செலுத்துவது போலிருக்கிறது. அதைப் பற்றி


PONDS
PONDS Sandal Talc
PONDS Sandal Talc
பொன் நகைகள் மின்னிட.... சந்தன நறுமணம் கமழ்ந்திட....
இனிய உணர்வுகள் மனதில் மலர்ந்திடும் கணங்கள். உங்கள் மேனியில் பொன் நகைகள் மின்னிட.. தூய சந்தனத்தின் நறுமணம் கமழ்ந்திட இதுவரை அனுபவித்தறியா உணர்வுகளால் உள்ளம் பூரிக்கிறது; பெண்மை உங்களிடம் பூரண பொலிவு பெறுகிறது.
அரிய நறுமணம். மதிப்பில் பொன்னைப் போல் உயர்ந்தது.
பாண்ட்ஸ் சாண்டல் டால்க்

HTA 7023



எண்ணிய உடனே என் கை கால்கள் வெடவெடத்துப் போகின்றன.''

''ஐயா! நந்தினி தேவியின் வஞ்சத்துக்குப் பயப்படவேண்டியதுதான் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அவருடைய உள்ளத்தில் எவ்வளவு பயங்கரமான துவேஷம் குடி கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். என்னை அவர் உயிரோடு போக விட்டதை நினைக்கும்போது சில சமயம் அதில் என்ன சூழ்ச்சி இருக்குமோ என்று பீதி கொள்கிறேன். ஆனால் இதெல்லாம் அவருக்கு உண்மை தெரியாமலிருக்கும் காரணத்தினால்தான் அல்லவா? அவருடைய சகோதரர் தாங்கள் என்பதைத் தெரிவித்து விட்டால் அதற்குப் பிறகு எந்தக் கவலையும் வேண்டியதில்லையல்லவா?''

''அப்படியா எண்ணுகிறாய்? வல்லவரையா! நீ கெட்டிக்காரன் தான். ஆனால் பெண்களின் இயல்பு அறியாத அப்பாவிப் பிள்ளை. நந்தினிக்குத் தான் சுந்தர சோழரின் குமாரி என்பது தெரிந்தால், எங்கள் எல்லோரிடமும் அவளுடைய குரோதம் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகும். தஞ்சை சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக அவளுக்குப் பட்டம் சூட்டுவதாகச் சொன்னபோதிலும் அவளுடைய கோபம் தீராது....''

''இளவரசே! அப்படித் தாங்கள் கருதினால் அந்தப் பொறுப்பை என்னிடமே ஒப்புவியுங்கள். நானே நந்தினியிடம் உண்மை வரலாற்றைச் சொல்வேன். அவருடைய கோபத்தையும் தணிக்க முயல்வேன்.....''

''உன்னாலும் அது முடியாது. நண்ப! நந்தினியின் கோபத்தை யாராலும் தடுக்க முடியாது. நான் சொல்வதைக் கேள்! எங்கள் சோழ குலத்தைக் காப்பாற்ற வேண்டுமானால், ஒன்று நான் சாக வேண்டும்; அல்லது அவள் சாக வேண்டும்; அல்லது இரண்டு பேரும் சாக வேண்டும். வீர பாண்டியனைக் கொன்ற வாளினால் அவளையும் கொன்று விடுகிறேன்...''

''இளவரசே! இது என்ன பயங்கரமான பேச்சு?''

''வல்லவரையா! ஒரு சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதற்காக ஓர் உயிரைக் கொல்லுவது குற்றமா? அவள் பெண்ணாயிருந்தால் என்ன? என் உடன் பிறந்த சகோதரியாக இருந்தால்தான் என்ன? உண்மையில் அவள் பெண் அல்ல; பெண் உருக் கொண்ட மாய மோகினிப் பேய்! அவளை உயிரோடு விட்டிருந்தால் விஜயாலய சோழர் காலத்திலிருந்து பல்கிப் பெருகி வந்திருக்கும் இந்தச் சோழ சாம்ராஜ்யம் சின்னாபின்னமாகி விடும்!.... ஆகா! அது என்ன? என்று ஆதித்த கரிகாலன் திகிலுடன் கேட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தான்.

அச்சமயம் அவர்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் காட்டுப் புதர்களுக்கு மத்தியில் ஏதோ அல்லோல கல்லோலம் நடந்து கொண்டிருந்தது. இருவரும் குதிரைகளைத் தட்டி விட்டு அருகில் சென்று பார்த்தார்கள். மிக அபூர்வமான காட்சி ஒன்று தென்பட்டது. காட்டுப் பன்றி ஒன்றும் சிறுத்தைப் புலி ஒன்றும் கொடூரமாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

''ஆகா! நாம் தேடி வந்தவன் இங்கே இருக்கிறான்!'' என்றான் கரிகாலன்.

''சிறுத்தை நமக்கு வேலை இல்லாமல் செய்து விடும் போலிருக்கிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

''அப்படியா நினைக்கிறாய்? பார்த்துக் கொண்டே இரு!'' என்றான் கரிகாலன்.

சிறுத்தைக்கும் பன்றிக்கும் நடந்த அகோரமான யுத்தத்தை இருவரும் சிறிது நேரம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறுத்தை பன்றியின் மீது பாய்ந்து அதை நகங்களினாலும் பற்களினாலும் தாக்க முயன்றது. ஆனால் காட்டுப் பன்றியின் கடினமான தோல் புலி நகத்திற்கும் பற்களுக்கும் சிறிதும் அசைந்து கொடுக்க வில்லை. ஆனால் பன்றி வேகமாக ஓடிவந்து சிறுத்தையை முட்டித் தள்ளித் தரையிலும் மரங்களிலும் வேர்களிலும் வைத்துத் தேய்த்தபோதெல்லாம் சிறுத்தை படாதபாடு பட்டது. பன்றியின் கோரைப் பற்கள் சிறுத்தையின் தோலைச் சின்னா பின்னமாகக் கிழித்தன. கடைசியாக ஒருமுறை சிறுத்தையைப் பன்றி கீழே முட்டித் தள்ளிய போது அது செத்தது போலக் கிடந்தது.

"தம்பி! சிறுத்தை செத்து விட்டது! பன்றி இனி நம்பேரில் திரும்பும்! அதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும்!" என்று கூறிக் கரிகாலர் வில்லில் அம்பைப் பூட்டி விட்டார்.

அம்பு பன்றியின் கழுத்தில் போய்த் தைத்தது. பன்றி கழுத்தை உதறிக் கொண்டே திரும்பிப் பார்த்தது. இரு குதிரைகளையும் அவற்றின் மீதிருந்தவர்களையும் ஒரு கணம் கவனித்தது. பிறகு ஒரு தடவை சிறுத்தையைப் பார்த்தது. அதனால் இனி ஒன்றும் ஆகாது என்று தெரிந்து கொண்டது போலும்! மூர்க்க ஆவேசத்துடன் குதிரைகளை நோக்கிப் பாய்ந்து வந்தது. கரிகாலன் இன்னொரு அம்பை வில்லில் பூட்டுவதற்கு முன்னால் அவன் ஏறியிருந்த குதிரையைத் தாக்கியது. தாக்குதலின் வேகத்தினால் சிறிது நகர்ந்த குதிரையின் பின்னங்கால் ஒரு மரத்தின் வேரில் அகப்பட்டுக் கொள்ளவே குதிரை தடுமாறிக் கீழே விழுந்தது. குதிரையின் அடியில் கரிகாலன் அகப்பட்டுக் கொண்டான்.

பன்றி சிறிது பின்னால் நகர்ந்து வந்து மறுபடியும் தரையில் கிடந்த குதிரையை நோக்கிப் பாய்ந்து சென்றது.

(தொடரும்)



ஜி. நாராயணன்

"...இங்கே இவ்வளவு வேலை கிடக்கிறப்ப, உனக்கு 'பார்ட்டி' என்ன கேட்கிறது...? ஆபீஸ் முடிஞ்சா நேரே வீட்டுக்கு வர வேண்டியதுதானே...?"

ஒரு இரும்புப் பெண் மாதிரியா...?



வாசலிலேயே ராஜசேகரன் தெரிந் தான்.....!

.... இவள் எதிர்பார்த்ததுதான்.... ஆபீ சிலிருந்து வரக் கொஞ்சம் லேட்டாகிவிட் டாலே, ஆயிரம் கேள்விகள் கேட்பவர், இன்று, இத்தனை நேரம் கழித்து வந்ததற்கு என்னவெல்லாம் பேசப் போகிறாரோ....?

வீடு வந்துவிட்டது.... ராஜசேகரன் இவளைப் பார்த்தான்.... சரேலென்று உள்ளே போய்விட்டான்... கோபமாம்...ம்...

செருப்புச் சத்தம் கேட்டு, "யாரு" என் றது குரல்... மாமனார் குரல்...! ...வழக்கம் போல், ஹாலில், வெறும் தரையில் உட் கார்ந்திருந்தார்." ....இப்படியே எனக்குப் பழக்கமாகிவிட்டது.... இந்த சோபா—நாற் காலி எல்லாம் எடுத்துடலாம்." வந்த முதல் நாளே சொல்லிவிட்டார்.... இவர் இப்படி உட்கார்ந்திருக்கும் போது மற்றவர் நாற் காலியில் எப்படி உட்கார முடியும்...? இந்து வும் அவர் அருகில் கால்களை மடக்கி உட் கார்ந்திருந்தாள்.

"..... சரியா உட்காரு...." என்றார் அவர்..... ஆறு வயதுக்குழந்தைத் புரியாமல் பார்த்தது.... முகம் காட்டியது.

".... மூஞ்சியைத் தூக்காதே...! சரியா உட்காருன்னா சரியா உட்காரணும்..சி. முடி யல்லியா.... எழுந்து போயிடு.. இந்த பாரு... நல்லதோ—கெட்டதோ, என் மனசில் நியா யம்னு பட்டதை நான் சொல்லிடுவேன்... நீ மூஞ்சியைத் தூக்கறியே'ன்னு சொல் லாமல் இருக்கமாட்டேன்....விடமாட்டேன்.. அது என் சுபாவம்... தெரியறதா...?.... கொஞ்சம் அடக்கமா உட்காரு.... பாக்கி கதையைக்கேளு....."

குழந்தை இவளைப் பார்த்தது... அம்மா உதவிக்கு வரமாட்டாள் என்று புரிந்தது... கஷ்டப்பட்டுக் கால்களை மடக்கிற்று.

"..... அந்த ரேணுகா தினமும் கங்கைக் குப் போவாள் ...வெறும் கையை வீசிண்டு... அங்கேயிருக்கிற மணலை இரண்டு கையி லும் அள்ளி... '...இந்த மணல் ஒரு மண் குடமாக மாறவேண்டும்....' என்று நினைப் பாள் அவ்வளவுதான்....! ....அது ஒரு குட மாகி விடும்....! கேட்டியா....? ....'வெறும் மணல்....! ....வெள்ளை மணல்....' அதை, தனது பதிவிரதா சக்தியால் குடமாக மாற்றி ஆற்றிலிருந்து ஜலம் எடுத்து வீட்டுக்குக் கொண்டு போறது வழக்கம்... ஒரு நாள்...! ...ஒரு கந்தர்வன் மேலே பறந்து போவதைப் பார்த்தாள்...! ...ஒரு கணம்.... '...ஆஹா...! ...என்ன அழகு...!'ன்னு தோன்றியது... அதன் பிறகு...? ... மணலை எடுக்கிறாள்...! ....எடுக்கிறாள்.... குடம் வரல்லே...! ...வெறும் மணலாவே கையில் தங்க....!"

ராஜசேகரன் ஒரு மூலையைப் பார்த் தபடி உட்கார்ந்திருந்தான்.... இவளை ஒரு முறை நிமிர்ந்து பார்த்தான்... அதோடு சரி.....!

...சே...! ....என்ன பிழைப்பு...! என்று இவளுக்கு ஒரு நிமிஷம் தோன்றியது... இவர், ஆபீசிலிருந்து சீக்கிரமே வந்துவிடு கிறார்... வந்ததும், ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்து விடுகிறார்... ...ஆண் பிள்ளை....! .... அதனால் சமையல் அறை பக்கம் போகக்கூடாது.... எத்தனை நாழியானாலும் இவள் வந்துதான் 'ப்ரிஜ்' ஜிலிருந்து பாலை எடுக்கவேண்டும்.... சுட வைக்கவேண்டும்.... காப்பியைக் கலந்து எல்லாருக்கும் கொடுக்கவேண்டும்.... இவரிடமிருந்து '....ம்....' என்று ஒரு கனைப்பு பதிலாக வரும்..." .... ராத்திரிக்கு என்ன சமையல்...?" என்று அடுத்த கேள்வி வரும்....

....இந்த வீடும் எனக்கு இன்னொரு ஆபீஸ்....! என்று நினைத்தாள்... இங்கும் சரியான நேரத்தில் இருக்க வேண்டும்...! ...கொஞ்சம் 'லேட்'டாகி விட்டாலும் சரி யான காரணம் சொல்லவேண்டும்....! அத் தனை வேலையும் நம்மை எதிர் பார்த்துக் காத்திருக்கும்.... குவிந்திருக்கும்....! இன்



OO பருப்புத் தீய்ந்து போய்விட்டதே என்று கவலைப்பட வேண்டாம்! தீய்ந்த பருப்பை வேறு பாத்திரத்திற்கு மாற்றி, தண்ணீர் விட்டு, இரண்டு வெற்றிலையைப் போட்டுக் கொதிக்க விடுங்கள். தீய்ந்த வாசனை அடியோடு மறைந்து விடும்!

— அல்லூர் கே.பி. ராமன்.

னொரு சிட் ஆள் இங்கும் நம் உதவிக்கு வரமாட்டான்....!

குளிக்க இறங்கினாள்...

மாமனார் வந்ததிலிருந்து இப்படி ஒரு சாயந்திரக் குளியல் வந்துவிட்டது...

''..... எங்கேயாவது வெளியில் போய் விட்டு வந்தால் உன் மாமியார் குளிக்காமல் சமையல் செய்ய இறங்கமாட்டாள்... ம்.... எல்லாம் அவ காலத்தோட போய் விட்டது....'' என்றார் ஒரு நாள்.... அடுத்த நாள் முதல் இந்தக் குளியல் ஆரம்பமாகி விட்டது....

....அவர் மாற மாட்டார்... மாற்றவும் முடியாது... கிராமத்தில் இருந்தபோது நடந்த மாதிரி.... அதே... காய்தா....... மடி..... ஆசாரம்..... சாப்பாடு....

இரவில் புதியதாகத் திரும்பவும் அவருக்கு ஒரு சமையல் செய்ய வேண்டும்...

....இன்றைக்கு என்ன கறிகாய் இருக்கிறது...? ...ம்.... ஆபீசிலிருந்து வரும்போது ஏதாவது வாங்கிக்கொண்டு வந்திருக்கலாம்.... நாழியாகிவிட்டதே என்ற பதை பதைப்பில் அதை மறந்தாயிற்று....

நாளைக்குச் சீக்கிரம் கிளம்பவேண்டும்.... முதல் பஸ்ஸை எப்படியும் பிடித்து விட வேண்டும்... புது மானேஜர் வருகிறார்... முதல் நாளே 'லேட்' டாகப் போய் அசடு வழியக்கூடாது....

....நாளைக் காலை சமையல்... அப்புறம், இந்துவிற்கு டிபன்.... என்ன செய்யலாம்...!

...சே.... ஒரு நாளைப் பார்த்தாற் போல் தினமும் ஏதாவது பிரச்னை....! மண்டைக் குடைச்சல்....! .... அலுத்து வந்தது.....

காப்பியைக் கலந்து கொண்டு போய் ராஜசேகரனிடம் கொடுத்தாள்...

''....ஏன் இத்தனை 'லேட்'டு....?'' என்றான் கடுமையாக....

''...ஆபீஸ்லே... ஒரு 'பார்ட்டி'....... அதான்.....

''...ஐஸ்கிரீம் உண்டா...?''

''....ம்.... எல்லாம்தான்....''

''.... இங்கே...... நாங்கள்ளாம் ஒரு காப்பிக்குத் திண்டாடிண்டு இருக்கோம்...... கொலைப்பட்டினியா கிடக்கோம்.......! .....உனக்கு.......? .....சே.....''

''....நான் எதையும் தொடலலே....! எனக்கு வயிறு சரியில்லே.... பார்ட்டி எப்ப முடியப் போறதுன்னு காத்திண்டு இருந்தேன்.... எழுந்து வந்துட்டேன்.....

''என் கேள்வி.... இங்கே இவ்வளவு வேலை கிடக்கறப்ப, உனக்கு பார்ட்டி என்ன கேட்கிறது....? ...அப்பா இருக்கிறார்.... வயசானவர்....... தெரிய வேண்டாம்...? ஆபீஸ் முடிஞ்சா நேரே வீட்டுக்கு வரவேண்டியதுதானே...?''

''....மானேஜர் மாற்றலாகிப் போகிறார்....! 'பார்ட்டி' ஏற்பாடு திடீர்னு செய்த முடிவு....! எதிர்பார்க்கல்லே.... ...நான் அவர் செகரட்டரி... 'முடியாது'ன்னு முறிச்சிண்டு கிளம்ப முடியுமா....?''

''....அவர் மாற்றலாகிப் போறாரேன்னு உனக்கு வருத்தம் இருக்கிற மாதிரி தெரியறது....?''

ஆமாம்... ரொம்ப நல்ல மனுஷன்... கோபமே வராது....

''...பார்க்கிறதுக்குக் கூட நல்லா இருப்பான் இல்லே...? ...என்னை விட சிவப்பா... கருட்டை முடியோட.....''

.... என்ன மனிதர் இவர் என்று தோன்றியது... இவர் ஆபீசிலும் பெண்கள் வேலை செய்கிறார்கள்... இப்படி ஒரு வக்கிர எண்ணத்துடனா நான் பார்க்கிறேன்....!

''... நீங்க சொல்றது புரியல்லே....''

''... இப்ப.... அப்பா கதை சொன்னாரே....? ரேணுகா....! அந்த மாதிரி உன்னாலே மணலை எடுத்துக்குடம் பண்ண முடியுமான்னு நினைச்சேன்...! உன் கையில் மணல்தான் தங்கும்னு தோணித்து...! சிரிப்பா வரது.....! அதான்....

இவள் முகம் மாறியது... கோணியது.... இவர் எதற்காக இத்தனை நேரம் சுற்றிச் சுற்றி வளைத்தார் என்று புரிந்தது.... உடன் முகம் சிவந்தது.....

''....போறும்....! ....இனிமேல் பேச வேண்டாம்.....

''.... பேசுவேன்.....''

அவள் பதில் சொல்லவில்லை... அலட்சியமாகப் பார்த்தாள்.... பார்வையில் ஒரு சாக்கடை தெரிந்தது.... ...அதில் நெளிகிற ஒரு புழு....!

இந்த அலட்சியம் அவனை உசுப்பி விட்டது... தன்னுடைய ஆண்மைக்கு வந்த பெரிய சவாலாகத் தோன்றியது.... உடல் துடித்தது.... பரபரத்தது... கையில் கிடைத்ததை எடுத்து அவள் மேல் எறிய நினைத்து...

அவள் அசையாமல் இருந்தாள்... இவன் கோபப்படுவதையோ கையை ஓங்குவதை

யோ சட்டை செய்யாமல் — தனக்குச் சம் பந்தமில்லாத நிகழ்ச்சி என்கிற மாதிரி நின்றிருந்தான்....

"...எத்தனை நெஞ்சழுத்தம் உனக்கு...!"

கையிலிருந்த் டம்ளரைத் தரையில் வீசினான்.... அது பெரிய ஓசையோடு உருண்டு ஓட......

"ராஜசேகரா...?"

"....என்னப்பா...?

"...ஏதோ சத்தம் கேட்டது....?

"ஒண்ணுமில்லே..." என்றான். இருந் தும் இதையெல்லாம் அப்பா கேட்டிருந் திருப்பாரோ என்று ஒரு சந்தேகம்.... கேட் டிருந்திருக்கலாம்.... தன்னை, அவர் விட்டுக் கொடுக்கமாட்டார் என்ற நம்பிக்கை வந்தது... சட்டென்று வெளியில் வந்தான்...

....இவள்.... வரல்லியே — வரல்லி யே'ன்னு இங்கே நாம் கவலைப்பட்டுண்டு இருக்கோம்... இவ.... ஜாலியா ஆபீஸ்லே 'பார்ட்டி'ன்னு நிதானமா வரா.... கேட் டால்....

"...இந்தக்காலம் அப்படித்தான்.....!" என்றார் அவர் பொதுவாக....

ராஜசேகரனுக்கு இப்பொழுது தைரியம் கூடியது.... இவளை ஒரு முறை பார்த்தான்.

"... கேட்டால்...? கோபம் வரது... என் னைப் பார்த்துப் பல்லைக் கடிக்கிறாள்..."

அவர் பேசாமல் இருந்தார். புருஷன் பெண்சாதி சண்டையில் தலையிட வேண் டாம் என்று ஒதுங்கியிருக்கிற மாதிரி தெரிந் தது....

".... எல்லாம் திமிர்...! ... சம்பாதிக்கிற திமிர்...! அவளுக்கு என்னை விட சம்பளம் அதிகம் ...அதான்.... கொழுப்பு....! ஒரு குடும்பப் பெண் மாதிரியா பேசறா...? பதில் சொல்றா....?"

"....ஒரு குடும்பப் பெண் மாதிரி அவளை வைச்சிருக்கியா...?" என்றார் அப்பா திடீ ரென்று....

"...எது... எது... என்னப்பா....?"

".... பசுமாட்டை வண்டியில் கட்டி அடிச்சால் இப்படித்தாண்டா ஆகும்.... என்றார் மெதுவாக...

அவன் புரியாமல் பார்த்தான்.

"...பெண் என்பவள் லட்சுமிகரமா இருக்கணும்.... குடும்பத்தைப் பார்த்துக் கணும்.... ஆனால்...? அவளை நீ வேலைக்கு அனுப்பறே...! அவ சம்பாதிக்கணும்....! பணம் கொண்டு வரணும்...! நிறைய....! பசுமாடு பாலும் கொடுக்கணும்... பார வண்டியும் இழுக்கணும்னு எதிர்பார்க்கிற மாதிரி....! போங்கடா....! நீங்களும் உங்க காரியமும்.... தூ....."

பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டாற் போலிருந்தது. ...ஒரு நிசப்தம்....

இவன் மனத்தில் மெல்ல மெல்ல அவர் சொன்னதெல்லாம் இறங்கியது... அப்படி ஒரு காட்சி கண்முன் விரிந்தது....!

பசுமாடாகி இவள் வண்டியை இழுக் கிறாள்....! வண்டிக்காரனாக.... ராஜசேக ரன்.... 'ம்...ம்...' தார்க்குச்சி குத்தல்... வலி....! ...ஓடு.... ஓடு.... இன்னும் ஓடு....

மாடாக மாறி எல்லாரையும் முட்டித் தள்ள வேண்டும் போலிருந்தது......

சுக போகத் தீவுகள்

17

வரிசை நீண்டுகொண்டே வந்தது.

இத்தனைக்கும் அஞ்சலை விடியல் ஆறு மணிக்கே வந்து, வீதியோரத்தில் கிடந்த ஒரு பெரிய கல்லை எடுத்து, அடையாளம் வைத்து விட்டு, பிளாட்பாரத்தில் அமர்ந்தாள். அவளுக்கு முன் ஏழெட்டுக் கற்கள் இருந்தன. சில நிமிஷங்களுக்கெல்லாம், மூணாவது வீட்டு மீனாச்சி அக்கா அங்கு வந்து மண்ணெண்ணெய் டின்னை அடையாளம் வைத்து விட்டு அஞ்சலைக்குப் பக்கத்தில் அமர்ந்தாள்.

''சே! என்ன பொழைப்பு! ராக்கண்ணு முழிக்கிற பொழைப்பு. படுத்தோம், அசந்து தூங்கினோம், விடிஞ்சு எழுந்தோம், வேலைக்குப் போனோம்னு இல்லாமே, நாய்ப் பொழைப்பா ஆயிடுச்சு. மூச்சுக்கு முந்நூறு தடவை தாய்க்குலம், தாய்க்குலம்னு சொல்றதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லை. இங்கே, தாய்க்குலம், பேய்க் குலம் மாதிரி நடுராத்திரியிலே தண்ணிக்கும், அரிசிக்கும், மண்ணெண்ணெய்க்கும் அலையா அலைஞ்சு தவிச்சுத் தண்ணி குடிக்குது. வோட்டு வாங்க வர்றவனுங்க, நாக்கிலே தேனைத் தடவிக்கிட்டு வாலைக் குழைக்கிறானுங்க... கும்பிடு போட்டு, காலைப் பிடிக்கிறானுங்க.. மானங்கெட்ட பசங்க.. ஜெயிச்சதும் ஒரு நாயி நம்ம கஷ்டத்தைக் கண்டுக்கிடறதில்லே...''

மீனாச்சி அக்காவின் வார்த்தைகளில் பொதிந்திருக்கிற துக்கம், அஞ்சலைக்கும் உள்ளதுதான். மீனாச்சி அக்காவைப் போலவே, இரவுக் கண்விழித்துப்படும் அவஸ்தை அஞ்சலைக்கும் அனுபவம்தான்.

சட்டென்று அவர்களைச் சுற்றிப் பத்து இருபது பேர் இருப்பது தெரிந்தது. எல்லாம் குப்பத்து ஜனங்கள்தான். எல்லோரும், கையில் பையோ, அல்லது மண்ணெண்ணெய் கேனோ வைத்திருந்தார்கள். காலை வெளிச்சம் சுண்ணாம்புத் தண்ணீர் மாதிரி பரவிக் கொண்டிருந்தது. ஒரு சைக்கிளில் அலுமினியக் குண்டானை மூடி போட்டு மறைத்து, இறுக்கிக் கட்டிக் கொண்டு ஒருவன் வந்து சேர்ந்தான்.

''சுக் காப்பி, சுக் காப்பி'' என்றான் அவன்.

அஞ்சலை தன் முந்தானையில் சுற்றி வைத்திருந்த காசை எடுத்தாள்.

''யக்கா, சுக் காப்பி சாப்பிடறியா?'' என்றவள், அவனைப் பார்த்து, ''ரெண்டு காப்பி குடுப்பா'' என்றாள்.

அவன் இரண்டு அலுமினிய டம்ளர்களில், சூடு பறக்கக் காப்பியை ஆற்றி அவர்களிடம் தந்தான். காலைக் குளிருக்கும் பசிக்கும் அது மிக இதமாக இருந்தது. வந்திருந்தவர்கள் பலர் அவனிடம் காப்பி வாங்கிக் குடித்தார்கள். கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்திருந்தது. இப்போது அவர்கள் அடையாளத்துக்கு இட்ட கற்களையும், ஓட்டை டின்களையும் எடுத்து விலக்கி விட்டு அவற்றின் இடத்தில் தங்களைப் பொருத்திக் கொண்டார்கள்.

''இத்தினிக் கஷ்டப்பட்டு, அரிசி வாங்கினா, அரிசி அரிசியாவா இருக்கு? புழு புழுவா புழுத்துப் போயி, உருண்டை உருண்டையா, நாத்தம் பிடிச்சுக் கிடக்கு. இன்னாய்யா இந்த மாதிரி அரிசியைப் போடறேன்னா, அந்த ரேஷன் கடைக்காரன் சொல்றான். உனக்கு இது போதும்மே அப்படின்னு. எவ்வளவு திமிரு பாரு. இந்தப் புழுத்த, நாத்தம் புடிச்ச அரிசியை எந்த எம்.எல்.ஏ.யாவது எந்த மந்திரியாவது சாப்பிட்டிருப்பானா? அவனவனும் நம்ம பணத்தில் சீரக சம்பா அரிசியும், பாசுமதி அரிசியும் திங்கறான். நாம மட்டும் நாள் பூரா, காலம் பூரா நாத்தம் புடிச்ச அரிசியைத்தான் தின்ன வேண்டிருயிக்கு.''

அக்காவின் சலிப்பு அஞ்சலைக்கும் தொற்றியது.

வரிசை மிக நீண்டு கடையையும், தூரத்து பஸ் நிறுத்தத்தையும் தொட்டு நின்றது. முதலில் ஏழாவது இடத்தில் இடம் பிடித்து விட்டதாக நினைத்திருந்த அஞ்சலை, தான் அந்த மிக நீண்ட வரிசையின் பாதியில் நிற்பதை உணர்ந்தாள். ஒவ்வொரு அடையாளப் பெரிய கல்லுக்கும் இடையிடையே சின்னச் சின்னக் கற்கள் இருப்பதை அவள் கவனிக்கவில்லை.

வெயில் சுள்ளென்று மக்கள் தலையில் காய்ந்த காலை வேளையில் இரண்டு பேர் வந்து ரேஷன் கடையைத் திறந்தார்கள். வரிசை, சாத்தியப்படும் அளவுக்குத் தன் முன் இருந்தவரைப் பிடித்துத் தள்ளி நெருக்கியது. ஒவ்வொருத்தராகப் பணத்தைக் கொடுத்துச் சீட்டு வாங்கி, சீட்டைக் காட்டி சரக்கு வாங்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று நாலைந்து ஆட்கள் கடைக்குள் நுழைந்தார்கள். மக்கள் அவர்களை உணவுத் துறை ஊழியர்கள் என்று நினைத்துக் கொண்டார்கள். வந்தவர்கள் பெரிய சிறிய மூட்டைகளாகச் சிலவற்றை எடுத்து, தாங்கள் கொண்டு வந்திருந்த வேனில் ஏற்றிக் கொண்டு போய்ச் சேர்ந்தார்கள்.

அஞ்சலையும், அஞ்சலைக்குப் பின்னால் அக்காவும் கேஷ் கவுண்ட்டரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். பணம் கட்டும் இடத்துக்கும் அஞ்சலைக்கும் இடையே இரண்டே பேர் நிற்கும் போது, ரேஷன் கடை ஆள் எனத் தெரிந்த கரிசலும் ஒல்லியும், காக்கி பேண்ட் அணிந்தவனுமான ஒருவன் வெளிப்பட்டு வரிசையைப் பார்த்துச் சொன்னான்.

''அரிசி, மண்ணெண்ணெய் தீர்ந்து போச்சு. சர்க்கரை மட்டும்தான் கொஞ்சமா இருக்கு.''

இடி விழுந்ததைப் போல மக்கள் கூட்டம் சலசலத்தது.

''யோவ்... இன்னா விளையாடறியா? ராக்கண்ணு முழிச்சுக்கிட்டு நிக்கறோம். அரிசி இல்லேங்கறே...'' என்றாள் அஞ்சலை.

''ஸ்டாக் தீர்ந்து போச்சு.''

''இன்னாது. தீர்ந்து போச்சா... உன் வாயிலே புத்து வைக்க. பொய் சொன்ன



நாக்கு அழுக. தடி தடியாக நாலு பேர் வந்தானுங்களே, மூட்டை மூட்டையா எடுத்துக்கினு போறாங்களே. அது இன்னா? அரிசியா, கோதுமையா, மைதாவா? நீ சைட் வியாபாரம் பண்ணற துக்கு நாங்கள் அரிசி இல்லாமே காய ணுமா?''

''தே. அடக்கிப் பேசும்மா. இல்லேன்னா நடக்கிற சங்கதியே வேறே..''

''இன்னா பண்ணுவே...?''

— இதற்கு அவன் சொன்ன அகங்கார பதிலைக் கேட்டு அஞ்சலை ரௌத்ராகார மாய் அவன் மேல் பாய்ந்தாள். மீனாட்சி அக்காள் மட்டும் அவளைப் பற்றி நிறுத்தி யிருக்கா விட்டால் அங்கு பெரிய அடிதடியே நடந்திருக்கும். கட்டுப்படுத்தப்பட்ட அஞ்சலை, ரேஷன் கடைக்காரரைத் தூற்றியபடி வீதியோரத்தில் குவிந்திருந்த மண்ணை எடுத்து அவனை நோக்கி வீசி னாள். அக்கிரமத்துக்குத் துணை போகிற அரசாங்கத்தைத் திட்டியபடி வீடு நோக்கி, மீனாட்சி அக்காவுடன் நடந்தாள்:

''எவன் ஆண்டாதான் நமக்கு இன்னாக்கா? எல்லாப் பயலும் நமக்கு விரோதியாத்தான் இருக்காங்க. அன்னைக் கும் நாம்ம கஷ்டப்பட்டோம். இன்னைக்கும் படறோம். நமக்காக, நம்மைக் காப்பாத்த யார் இருக்காங்க?''

முதல்வர் முகத்தில் கோபம் வெளிப் படையாகவே தெரிந்தது. தன்னைச் சுற்றி லும், எதிரிலும் அமர்ந்திருந்த தன் கட்சி யின், ஆட்சியின் முக்கியஸ்தர்களை ஒரு நோட்டம் விட்டார். முதல்வரின் கண் களைச் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம், அவற்றை நேர் கொண்டு பார்க்கப் பயந்து, கண்ணை வேறு புறமாகத் திருப்பிக் கொண் டார்கள் அவர் சகாக்கள்.

அவர் பேசத் தொடங்கினார். பொது வாக அவர் அதிகம் பேசாதவர் என்று சொல்லப்பட்டது.

''அய்யா கண்ட கனவை, செயல்படுத் தவே நாம் ஆட்சி கட்டில் ஏறினோம். அடித் தட்டில் இருக்கிற ஏழை பாழைகளின் சிரிப் பிலேதான் ஆண்டவனைக் காண வேண் டும் என்று அவர்கள் சொன்னார்கள். ஏழைகள் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்படி யாக நாம் நடந்து கொள்ளத் தொடங்கி யிருக்கிறோம். மொத்தத்தில எனக்குத் திருப்தி இல்லை. ஆட்சியைக் கலைக்கச் சொல்லி விடலாமா என்று கூட நான் யோசிக்கிறேன். மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்கலாம் என்று எனக்குத் தோன்று கிறது. மீண்டும் தேர்தல் என்று வந்தால், உங்களில் பலருக்கு 'சீட்' இல்லை என்பதை நான் சொல்லி உங்களுக்கு விளக்க வேண்டிய அவசியம் இல்லை.''

அவர் மௌனமானார். யோசனையில் ஆழ்ந்தார். அமர்ந்திருந்த பிரமுகர்கள் முகத்தில் லேசான பயக்குறி தோன்றியது. அவர்கள் இருந்த இடத்திலிருந்தே நெளிந் தார்கள்.

முதல்வர் சட்டென்று எழுந்தார். கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தார். 'என் னுடன் வா' என்பது போல் தலையசைத்து விட்டு, அந்த கான்பரன்ஸ் ஹாலை ஒட்டிய அறைக்குச் சென்றார். கிருஷ்ணமூர்த்தி அவரைப் பின்தொடர்ந்தான்.

உள்ளே சென்ற முதல்வர் ஒரு சோபா வில் அமர்ந்தார். கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து, ''உட்காருங்கள்'' என்றார்.

அவன் அவர் எதிரில் அடக்கமாக அமர்ந் தான்.

''நிலைமை உங்களுக்குப் புரியும். என்றே நினைக்கிறேன். நந்தன் கொலை, சி.பி.ஐ. விசாரணைக்குப் போய் இருக்கிறது. அதோடு, வெளிநாட்டுக் கம்பெனிக்கு நிலம் விற்ற அளவில் நிறைய ஊழல் நடந்து இருப்பதாக, எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. அதிகாரிகள் மட்டத்திலும் ஒத்துழைப்பு நமக்குக் குறைந்து வருகிறது. மத்திய அரசும் முன்பு போல் அவ் வளவு சுமுகமாக இல்லை. நாம் ஏதாவது பெரிய அளவில் செய்தே ஆக வேண்டும். செய்து, பொது மக்களின், செய்திப் பத்திரி கைகளின் கவனத்தைத் திருப்பியாக வேண் டும். என்ன செய்யலாம், கிருஷ்ணமூர்த்தி?''

கிருஷ்ணமூர்த்தி அதுபற்றிச் சிந் தித்தே இருந்தான்.

அவன் சொன்னான்.

''சார்... ஆட்சிக்குள்ளும், கட்சிக்குள்ளும் நிலைமை அவ்வளவு சுமுகமாக இல்லை. ஏதாவது அதிரடி நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும். எனக்கு ஒன்று தோன்று கிறது...''

''சொல்லுங்கள்.''

''இரண்டு நடவடிக்கைகளை நீங்கள்

எடுக்க வேண்டும். ஒன்று, அமைச்சரவையில் ஏழெட்டுப் பேர் பதவியைப் பறித்து, அவர்களால்தான் அரசில் ஊழல் ஏற்பட்டது என்பது போன்று ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களை வீட்டுக்கு அனுப்புவதன் மூலம் நீங்கள் மிகவும் கவனமாகச் செயல்படுவதாக மத்திய அரசுக்கு ஓர் எண்ணம் ஏற்படும். இரண்டாவது, மாவட்டச் செயலாளர்கள் அனைவரையும் நீங்கள் மாற்றி அமைக்க வேண்டும். யாரெல்லாம் இப்போதைய மாவட்டச் செயலாளர்களுக்கு எதிராக இயங்குகிறார்களோ, அவர்களையே செயலாளர்களாகப் போடுங்கள். மக்கள் மத்தியிலும் அதற்கு வரவேற்பு இருக்கும். அதோடு, மாநிலச் சுற்றுப் பயணம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யுங்கள். நிலைமையை நமக்குச் சாதகமாக மாற்றியமைத்துக் கொள்ளலாம்...''

முதல்வரின் முகத்தில் புதிய பிரகாசம் ஒன்று தெரிந்தது. அவனை வியப்போடும், ஆச்சரியத்தோடும் பார்த்தார்.

''நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். யாரையெல்லாம் டிஸ்மிஸ் செய்யலாம் என்று ஒரு பட்டியல் எழுதிக் கொடுங்கள். உடனே புதிய மாவட்டச் செயலாளர் பட்டியலையும் தயார் செய்யுங்கள். ஒரு விஷயம். அந்தப் புதிய பட்டியலில் உங்கள் மாமா இருப்பாரா?''

கிருஷ்ணமூர்த்தி சற்று நேரம் யோசித்து விட்டுச் சொன்னான்.

''அவர் இல்லை.''

''குட்.''

முதல்வரின் முகம் மேலும் பிரகாசமாயிற்று.

''கிருஷ்ணமூர்த்தி... நீங்கள் கட்சியின் புதிய துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள். நாளைக் காலையில் அலுவலகத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். எந்தக் காயை வேண்டுமானாலும் நகர்த்துங்கள். வெட்டி எறியுங்கள். தயவு தாட்சண்யம் வேண்டாம்.''

முதல்வர் கான்பரன்ஸ் அறைக்குள் வந்தார். கூடியிருந்தவர்களைப் பார்த்துப் பொதுவாகச் சொன்னார்.

''கிருஷ்ணமூர்த்தி புதிய துணைப்பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்...''


ஒரு கணம் அமைதியாக இருந்து பின், அனைவரும் பலக்கக் கைதட்டினார்கள். முதல்வர் தொடர்ந்தார்.

''அமைச்சர் அவையில் இடம் பெற்றிருக்கும் அனைவரும் ராஜினாமாக் கடிதம் எழுதிக் கொடுங்கள். மாவட்டச் செயலாளர்கள் கூடத்தான்,'' என்று கூறி விட்டு முதல்வர் அகன்றார்.

அமைச்சர்களும், மாவட்டச் செயலாளர்களும் திடுக்கிட்டுப் போய் அமர்ந்திருந்தார்கள்.

(தொடரும்)

பத்திரிகை தர்மம்!



'''பத்திரிகை தர்மம்'னா என்னங்க?

''ஒண்ணே முக்கால் ரூபா கொடுத்து நான் பேப்பர் வாங்கி உனக்குத் தினமும் ஓசியில படிக்கக் கொடுத்து அழுறேனே, அதான்யா!''

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.



''டாக்டருக்குக் இனி ஜோஸியத்துல கொஞ்சம் நம்பிக்கை உண்டு!''

''அதுக்காகக் இன்னைங்கள்ல விதவிதமா மாத்திரைகளைப் போட்டு வச்சுக் கிட்டுக் கிளியை விட்டு எடுத்துத் தரச் சொல்லணுமா?''

— மேல்மங்கலம் பத்ரா.

''என்னங்க இது, உங்க பையன் டிகிரி முடிச்சிட்டான், பத்தாம் வாய்ப்பாடு தெரியலியே....?''

''அவன் 'மேத்ஸ் மெயின்' இல்லிங்க...''

— ஆர். வசந்தகுமார்.





அருள்வாக்கு

சங்கர ஜயந்தி

பாரத அரசு நடத்தி வரும் ஓராண்டுக் கால "ராஷ்டிரீய சங்கர மஹோத்ஸவம்" மே 9, சங்கர ஜயந்தியுடன் பூர்த்தியாகிறது.

சங்கர ஜயந்திப் புண்ய காலத்துக்கு ஸமமாக எதுவுமில்லை. இப்படி நான் சொன்னால், "எடுத்துக் கொண்டுள்ள விஷயம் ஆசார்யாளைப் பற்றியாதலால் அதை விசேஷமாக ஸ்தோத்ரிக்கத்தான் வேண்டுமென்பதற்காக ஓரேயடியாக உசத்தி வைத்துச் சொல்கிறாரா? இல்லாவிட்டால் அவருடைய மடத்தில் அவர் பெயரை வைத்துக் கொண்டுதானே இவர் ஸ்வாமிகளாக ஊர் கூட்டிக் கொண்டிருக்கிறார் என்பதால் சொல்கிறாரா?" என்று தோன்றலாம்.

இப்படிப்பட்ட காரணங்களுக்காக அந்த ஜயந்திக்கு நான் உயர்வு கற்பித்துச் சொல்லவில்லை. வாஸ்தவத்திலேயே அதற்கென்று இருக்கும் உயர்வினால்தான், 'எல்லாப் புண்ய காலங்களிலும் நம்முடைய ஆசார்யாளின் ஜயந்திதான் பரம புண்ய காலம்' என்று சொல்கிறேன். புண்ய காலங்கள் எவ்வளவோ இருக்கின்றன — சிவராத்ரி, கோகுலாஷ்டமி, ஸ்ரீராமநவமி, நரஸிம்ஹ ஜயந்தி, ஸரஸ்வதி பூஜை, விஜய தசமி, விநாயக சதுர்த்தி, ஸ்கந்த ஷஷ்டி, இன்னம் உத்தராயண புண்ய காலம், தக்ஷிணாயன புண்ய காலம் என்றெல்லாம். எல்லாமே உத்க்ருஷ்டமானவை (உயர்வு பொருந்தியவை) தானென்றால் ஸ்ரீ சங்கர ஜயந்தியோ ஸர்வோத்க்ருஷ்டமானது.

எப்படி? மற்ற புண்ய காலங்கள் வேத — புராண — சாஸ்திரங்களால் ஏற்பட்டு யுகங்களாக அனுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பவை. இது அவற்றுக்கெல்லாம் ரொம்பவும் பிற்பாடுதான் உண்டானது. ஆனாலும் இதுவே ஸர்வோத்க்ருஷ்டமானது என்றால் எப்படி?

ஸரி, இந்தப் புண்ய காலம் எதற்காக உண்டாயிற்று?

வேதங்களையும், புராணங்களையும், சாஸ்திரங்களையும் புனருத்தாரணம் பண்ணுவதற்காகத்தான்!

இந்தப் புண்ய காலம் ஏற்படாமலிருந்தால் என்னவாகியிருக்கும்?

ஈச்வர பக்தியைச் சொல்லாத மதங்கள் ஓரேயடியாகப் பரவியிருக்கும். அப்படிப் பரவியிருந்தால் அப்புறம் சிவராத்ரியும், ஸ்ரீராம நவமியும், மற்ற புண்ய காலங்களும் யார் கொண்டாடியிருப்பார்கள்? அத்தனை புண்ய காலங்களையும் அவைதிகம் அடித்துக் கொண்டு போயிருக்கும்! அப்படிப்பட்ட கட்டத்தில் அந்த எல்லாப் புண்ய காலங்களும் தத்தளித்துக் கொண்டிருந்த போதுதான் இந்த ஒரு புண்ய காலம் ஏற்பட்டது! ஏற்பட்டு வேத வழியை மறுபடி நன்றாக நிலைநாட்டி அந்தப் புண்ய காலங்கள் அத்தனைக்கும் புத்துயிர் கொடுத்து விட்டது! இன்றைக்குச் சிவராத்ரி, ஸ்ரீராம நவமி இத்யாதி நாம் கொண்டாடுகிறோமென்றால், அதற்கு ஆசார்ய ஜயந்திதான் காரணம்! இந்த ஒரு ஜயந்தி இல்லை என்றால் எந்த ஜயந்தியுமே இல்லாமல் போயிருக்கும்! ஜயந்திகளையெல்லாம் ரக்ஷித்துக் கொடுத்த ஜயந்தியாக இருப்பது ஸ்ரீ சங்கர ஜயந்தியே என்பதால்தான் அதைப் புண்ய காலங்கள் அத்தனையிலும் விசேஷமானது என்றது!

எல்லா ஜனங்களும் இந்த விசேஷத்தைப் புரிந்து கொண்டு ஆசார்ய ஜயந்தியை மஹோத்ஸவமாகக் கொண்டாட வேண்டுமென்று எனக்கு ஆசை. சங்கர ஜயந்தி என்று எங்கே நடந்தாலும் அங்கே ஜனங்கள் படையெடுத்துப் போய்ப் பிரஸாத விநியோகத்தை அஸாத்தியமாக்கிவிட வேண்டுமென்று எனக்குப் பேராசை!

எதற்காகக் கொண்டாடணுமென்றால், கொண்டாட்டத்தால் அவருக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. நமக்கேதான் சிரேயஸ். அவரை ஸ்மரிக்கிற புண்யம் ஏற்பட்டுச் சித்த மலம் போகும். மநுஷ்யனாகப் பிறந்தவனுக்கு நன்றியுணர்ச்சி அவசியமோ இல்லையோ? 'நன்றி மறவாமை'யைத் தானே பெரியவர்கள் மநுஷ லக்ஷணத்தின் உச்சியில் சொல்கிறார்கள்? ஆகையால், இடைக்காலத்தில் நமக்கு அடைபட்டுப் போன மோக்ஷ மார்க்கத்தை மறுபடியும் திறந்துவிட்டு, ஸநாதன தர்மத்தைப் புத்துயிரூட்டிக் கொடுத்து, சிவராத்ரி என்றும் ஸ்ரீ ஜயந்தி என்றும் பண்டிகை கொண்டாடும் ஆனந்தத்தைக் கொடுத்தவரிடம் நன்றிக்கு அடையாளமாக அவருடைய ஜயந்தியைப் பண்டிகைகளிலெல்லாம் பெரிய பண்டிகையாகக் கொண்டாட வேண்டியது நியாயந்தானே?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

என் தொலைபேசிக்கு வந்த நோய்!

மனிதனைப் போலவே அவனது உயிர்த் தோழனான தொலைபேசிக்கும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஏதாவது ஒரு நோய் வந்துகொண்டிருக்கும். அதைத் தீர்த்து வைப்பதற்காகப் பல 'டாக்டர்கள்' 24 மணி நேரமும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். (தொலைபேசிக்குப் பொதுவாக வரக்கூடிய நோய்கள், தொடர்பு கொள்ள வேண்டிய T.D.க்கள் (டெலிபோன் டாக்டர்கள்) புகார் கொடுக்க வேண்டிய முறைகள், இவற்றைப் பற்றியெல்லாம் டெலிபோன் டைரக்டரியில் 57, 58, 59 ஆம் பக்கங்களில் காண்க).

சாதாரணமாகத் தொலை பேசிக்கு எத்தனை வகையான நோய்கள் வரக்கூடும் என்று உங்களுக்குத் தெரிய வேண்டுமா, புரட்டுங்கள் 57 ஆம் பக்கத்தை. 1. திடீரென்று பேச்சு மூச்சு இல்லாமல் போய், இதயத் துடிப்பு நின்று, அகால மரணமடைவது. 2. பிறர் நமக்கு 'கால்' போட்டால் பேசலாம். பிறருக்கு நாம் 'கால்' போட்டுப் பேசமுடியாமலிருக்கும் அவதி, 3. ஒரு நம்பரை 'டயல்' செய்தால் ஏற்கனவே கேட்கும் சனஸ்வரம் (டயல்டோன்) அடங்கிப் போகாமல் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருப்பது, 4. மணியடிக்கும் ரிசீவரை ஆசையோடு கையில் எடுத்தாலோ, பேசுபவரின் கழுத்தை யாரோ நெரித்துவிட்டது போல் 'லைன்' கட்டாகிவிடும், 5. நாம் ரிசீவரை எடுத்ததைக் கூட கவனிக்காமல், தூங்கு மூஞ்சி மணி தொடர்ந்து அலறிக் கொண்டிருப்பது. இப்படி 12 வகையான நோய்களின் 'லிஸ்ட்' அப்பக்கத்தில் இருக்கிறது. ஆனால், அதில் இல்லாத தீராத நோய் என் தொலை பேசிக்கு வந்துவிட்டது. மூன்று மாதம் அது இரவு பகலாக என்னை வாட்டி வதைத்து எனக்கு பயங்கர 'நெர்வஸ் டென்ஷன்' ஏற்பட்டு, ஒருவித மன நோயில் கொண்டு போய் விட்டு விட்டது.

மேலும் சஸ்பென்ஸ் இல்லாமல் அந்த நோயைச் சொல்லிவிடுகிறேன். காலையில் எழுந்து முக்கியமான நண்பரிடம் முக்கியமான செய்தியைக் கூற நம்பரைச் சுழற்றுவேன். மறு முனையில் ராமசாமிக்குப் பதில் கருப்பண்ணன் பேசுவார். 'ராங் நம்பர்'. அடுத்து அடுத்து நான்கு ராங் நம்பர்களை வெற்றிகரமாகப் போட்டு, அசடுவழிவேன். இட்டு வாங்கிக்கட்டிக் கொள்வேன். கடைசியில் '199'ன் காலில் தஞ்சம் அடைந்து, சரியான நம்பரைப் பெறுவேன். (சிலர், கனெக்ஷன் பெற்றுத்தரும் பெண்ணின் குரலைக்கேட்டு 'ட்ரங்க் கால்' என்று ஏமாந்து 'ஓ' வென்று இரைச்சல் போட்டுப்பேசுவதைக் கேட்டுச் சிரித்துக்கொள்வேன்).

அச்சாபீசுக்கு 'போன்' போட்டால், இன்கம்டாக்ஸ் ஆபீசர் 'ஹலோ' என்பார். சபா காரியதரிசியோடு அவசரமாகப் பேச முனைந்தால், 'யெஸ், போலீஸ் கன்ட்ரோல் ரூம்' என்ற கரடு முரடான குரல் கேட்கும். இப்படி ஒரு நாளைக்கு 20, 30 ராங் கால்கள் விழச்செய்து என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்ட தொலைபேசி, டிபார்ட்மெண்ட்டுக்கு நிறைய பணம் சம்பாதித்துக் கொடுத்து, அவர்களிடம் நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டிருந்தது. அனுகூல சத்ரு!

நான் AE, JE, DE, AM, PM. என்று நம்பர்களைத் தேடித் தேடி கம்ப்ளெயிண்ட்





செய்தும் 'ராங் நம்பர்' நோயிலிருந்து விமோசனம் கிடைக்கவில்லை. டெலிபோன் டாக்டர்களின் நம்பர்களையே ராங்காக விழச் செய்து என் தொலை பேசி என்னைப் பார்த்து வெற்றிச் சிரிப்புச் சிரித்தது. தப்பித் தவறி, ரைட் நம்பர் கிடைத்துவிட்டாலோ, 'அந்த டாக்டரைப் பாருங்க' 'இந்த ஸ்பெஷலிஸ்ட் கிட்டே சொல்லுங்க' உங்க ஏரியா டாக்டர் அவர்தான் என்று கையைக் காட்டி விட்டு ஒதுங்கிவிடுவார்கள். சில சமயம் 'கவலைப்படாதீர்கள் வீட்டைத் தேடி ஹவுஸ் சர்ஜன் வருவார்' என்று பதில்தான் வரும். ஆனால், அவர் வரவேமாட்டார்!


இந்த மாதம் வந்த டெலிபோன் பில்லைப் பார்த்ததும் 'ஓ'வென்று ஒப்பாரி வைக்க வேண்டும் போலிருந்தது எனக்கு. ராங்நம்பர் நோய்க்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும் என்று முடிவுக்கு வந்தேன். யாருக்கு போன் செய்யலாம் என்று டைரக்டரியைப் புரட்டத் தொடங்கினேன். 7 ஆம் ப க் க த் தி லே **Customer Relations and Public Grievances Officer'** என்று ஒரு ந ம் ப ர் கண்ணில் பட்டது. சுழற்றினேன். என் அன்றைய ராசி பலன். சுழற்றிய நம்பர் கிடைத்தது! தொலைபேசியின் மூன்று மாத நோயையும் அதனால் எனக்கு ஏற்பட்டுள்ள கால விரயத்தையும், பண விரயத்தையும் பற்றி அவரிடம் ஒரு குரல் அல்ல, ஏகப்பட்ட குரல்கள் அழுதேன். ''ஐயையோ, அப்பமங்களா, அடேடே..... அச்சச்சோ..... அடபாவமே...!''என்று மனிதாபிமான அனுதாபத்தோடு அவர் துக்கம் விசாரித்ததேமனத்துக்கு இதமாக இருந்தது. 'சார், நீங்கதான் எனக்கு கதி, நீங்களும் ஒன்றும் செய்யவில்லையென்றால் நான் ஜி.எம்.முக்கோ, சீஃப் ஜி.எம்.முக்கோதான் புகார் செய்ய வேண்டி இருக்கும். சிம்பிள் மேட்டருக்கு' என்று நான் முடிப்பதற்குள்ளேயே அவர், 'அதெல்லாம் எதுக்குங்க, மனசைத் தளர விடாதீங்க..... நாளைக் காலைலே உங்க பிரச்னை தீர்ந்து விடும்' என்று அபயக் குரல் கொடுத்தார்.

மறுநாள் வீட்டுக்கு ஒரு 'ஹவுஸ் சர்ஜன்' வந்தார். ஒரு கணத்தில் ஆபரேஷன் செய்து (ஔயரைக் கட் செய்து) என் பழைய கறுப்பு டெலிபோனை கையில் எடுத்துக் கொண்டு, அந்த இடத்தில் வேறு மாடல் இன்ஸ்ட்ருமெண்ட்டைப் பொறுத்தி விட்டு, மூன்று மாத நோயை மூன்றே நிமிடத்தில் தீர்த்து வைத்து விட்டுப் பறந்து விட்டார்.

வெளியே போகும் போது பழைய டெலிபோன் பேசியது என் காதில் மட்டும் விழுந்தது. 'புதுசா ஒருத்தன் வந்துட்டான்னு ரொம்பவும் மகிழ்ந்து போயிடாதே. அவனுக்கும் எந்த நிமிஷமும் எந்த நோயும் வரலாம். என்னைத் தினமும் நீ சபிச்ச பா வ ம் உன்னைப் பழிவாங்காமல் விடாது'.

'குருவாயூரப்பா, என் தொலை பேசிக்கு எந்த நோயை வேணுமானாலும் கொடு. ராங் நம்பர் நோயைக் கொடுத்துடாதே நான் பிழைக்க மாட்டேன்.....'

— மெரீனா



பாஃகல் டீவி!


டீ.வி. அல்லது விடியோ தொடர்பான எந்த ஓர் அனுபவத்தையும் ரத்தினச் சுருக்கமாக எழுதலாம். டீ.வி. நிகழ்ச்சிகளைக் கல்கியில் அரைப் பக்கத்துக்கு மேற்படாமல் நல்ல விதமாகவோ கிண்டலாகவோ விமர்சிக்கலாம். ஆனால் ஒன்று: நீங்கள் எழுதியதைப் படிப்பவர் சிரித்தாக வேண்டும்! பிரசுரமானால் பரிசு ரூ. 25/— தவிர பிரசுரமாகும் அனைத்துக்கும் வரிசை எண் தரப்பட்டு, ஆறு மாதம் சென்று குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டீ.வி. பரிசு!

மிகச் சமீபத்திய கல்கி இதழின் தலையங்கப் பக்கத்தில் உள்ள தேதிப் பகுதியை மட்டும்-மூன்று வரிகள் — நீங்கள் எழுதும் துணுக்கு அல்லது விமர்சனத்துக்கு மேல்புறம் ஒட்டி அனுப்புங்கள்.



Keep Time To The Music
MIRACLE EYE
SOUND AUTO CONTROL
Ajanta®
Miracle Eye
—is on position-music will not play at dark-night.
Hourly remembrance
Makes everyone happy
No sleep disturbance
Pioneer of musical clocks in India
Ajanta®
QUARTZ
the touch of tomorrow's technology
Regd. Office:
Ajanta Clock Mfg. Co.
Pruthviraj Plot, P.B. No. 115,
MORVI 363641
Phones: 3627, 2280, 2457, 2433.
Telex: 0168-212 ATCM
GRAM: VANITHA
M297
M277
M207
M287
M267
M227
M237
AVAILABLE AT ALL LEADING STORES

காண்பது அரிது இணைபிரியாத நண்பர்களை



உங்களை என்றென்றும் கைவிடாத ஒரு நண்பன் கெல்விநேட்டர் ரெஃப்ரிஜெரேட்டர். லட்சக் கணக்கான மக்கள் இதை நம்பி வாங்குவதே இதன் நம்பகத் தன்மைக்குச் சான்று.

இதன் நட்பின் ரகசியம் 'மின் சாரத்தை மிச்சப்படுத்தும்' கம்ப்ரெஸ்ஸர். வெளிப்புறத் தட்பவெப்பம் எவ்வளவாக இருந்தாலும் விரைந்து குளிர்விக்கிறது. சீக்கிரம் ஐஸ் உண்டாக்குகிறது. வோல்ட்டேஜ் எவ்வளவுதான் கூடினாலும் குறைந்தாலும், இதன் அமைதியான இயக்கம் தடைப்படுவதில்லை. உபயோகிக்கும் மின்சாரமோ மிகக் குறைந்த அளவுதான்.

கெல்விநேட்டர் தரும் மற்றுமொரு ஆச்சரியம் பொருட்களை வைப்பதற்கான விசாலமான இடப் பரப்பு. அதிக அளவு இடவசதிக்காக மூலை முடுக்குகள் இன்றி இதன் உட்புறம் மிகக் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.


வலிமை மிக்கது: எல்லாமே எஃகினாலான கட்டுமானமும், திடமான ஏபிஎஸ் லைனரும் சேர்ந்து, இதன் வெளிப்புறத்துக்கும் உட்புறத்துக்கும் கூடுதல் வலு கொடுக்கிறது. எனவே நீண்ட காலம் இணைபிரியாமல் உழைக்கிறது.

நீங்கள் தேர்ந்தெடுக்க வசதியாக பற்பல மாடல்கள் பளிச்சிடும் வண்ணங்களில்.

ஆகவே, உங்கள் கவலையை எல்லாம் கெல்விநேட்டர் ரெஃப்ரிஜெரேட்டரிடம் விட்டுவிட்டு 'அக்கடா' என்று இருங்கள். அதற்குத்தானே நண்பன் வேண்டும்!

விற்பனை செய்து சேவை செய்வோர்:
எக்ஸ்போ மெஷினரி லிமிடெட்
பிரகதி டவர், 26, ராஜேந்திரா ப்ளேஸ்,
புது டெல்லி-110 008.





கெல்விநேட்டர்

ரெஃப்ரிஜெரேட்டர்

"மிகவும் விரைவாக குளிர்பதனப்படுத்துவதில் ஈடு இணையற்றது."

Mutual 4711Fld TM

தியாக பூமி



இந்தியாவில் ஒரே சமயத்தில் இரண்டு தியேட்டர்களில் ஓடிய முதல் படம் எது தெரியுமா...? அமரர் கல்கி கதை எழுத, கே. சுப்ரமண்யம் இயக்கி, தயாரித்த தியாக பூமி. படத்தின் ஒரே பிரதிதான் இருந்த தாகையால், இரண்டு தியேட்டர்களிலும் அரை மணி நேர இடைவெளி விட்டுப் படத்தை ஆரம்பிப்பார்களாம். முதல் தியேட்டரில் ஒவ்வொரு ரீலாகக் காண்பித்து முடிக்க, முடிக்க, அதனை காரில் எடுத்து போய் இரண்டாவது தியேட்டரில் போட்டுக் காண்பிப்பார்களாம்!

விடுதலை வேட்கையை வளர்த்ததால், பிரிட்டிஷ் அரசாங்கம் 'தியாக பூமி'யைத் தடை செய்தது. மறுநாள் முதல் தடை அமுலாகும் என்று தெரிந்ததும், படம் ஓடிய கெயிட்டி தியேட்டரில் கூட்டம் அலை மோதி, காம்பவுண்டு சுவரே இடிந்து விழுந்ததாம்!

ஐம்பது வருடங்களுக்கு முன் எடுக்கப் பட்ட தியாக பூமி திரைப்படத்தைப் பவழ விழாவையொட்டி சமீபத்தில் திரையிட்டார்கள். படத்தின் கதையம்சமும் வசனங்களும் அரை நூற்றாண்டுக்கு முன் எவ்வளவு அர்த்தமுள்ளனவாக இருந்தனவோ, அதே அளவு சமூக முக்கியத்துவத்துடனும் ஜீவனுடனும் இன்றும்இருப்பதைக் காண முடிந்தது.

கதாநாயகி உமா, கர்ப்பமுற்ற நிலையில் கணவன் மற்றும் புக்ககத்தாரால் கைவிடப்பட்டு, தற்கொலையின் விளிம்பைத் தொட்டு, பின் மனம் மாறி, வடக்கே சென்று பெரும் பணக்காரியாகி, சமூக அந்தஸ்துள்ள 'உமா ராணி'யாகத் திரும்புகிறாள். ஆறு வருடப் பிரிவுக்குப் பின், அவள் பணத்துக்கு ஆசைப்பட்டு, தாம்பத்திய உரிமை கோரி அவள் பேரில் வழக்குத் தொடர்கிறான் கணவன் ஸ்ரீதரன். வழக்காடு மன்றக் காட்சியில், உமாராணி ஸ்ரீதரனிடம் திரும்ப மறுக்கிறாள். 'வேண்டுமானால், அவருக்கு 'ஜீவனாம்சம்' அளிக்கிறேன்' என்கிறாள். அதைக் கேட்டு கோர்ட்டில் கைதட்டல், ஆரவாரம்! நீதிபதி 'இது என்ன சினிமா கொட்டகையா!' என்று அதட்டி ஆரவாரத்தை அடக்குகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், இன்றைக்கும் இந்த வசனம் அரங்கில் பலத்த கரவொலியைப் பெற்றது என்பதுதான்!

இறுதியில் ஸ்ரீதரன் மனம் திருந்துகிறான். ஆனால் உமாராணியை வற்புறுத்தித் தன்னுடன் வாழச் செய்யவில்லை. உமா ராணியின் தந்தை, 'தியாகங்களுக்குப் பெயர் போனது நம் நாடு; நீயும் ஒரு தியாகமாக நினைத்து உன் கணவனோடு சென்று வாழ்' என்று அறிவுரை கூறுகிறார். இந்தக் கட்டத்தில் உமா ராணி ''நான் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்வேனே யொழிய அடிமைத்தனத்துக்காகத் தியாகம் செய்ய மாட்டேன்'' என்கிறாளே...! ஆயிரமாயிரம் அர்த்தங்கள் தொனிக்கும் அந்த வசனம் இன்றைக்கும் நாடி நரம்புகளில் எல்லாம் நெருப்பைச் செலுத்துகிறது!

செயற்கையாக, — சினிமாத்தனமாக — ஒன்று சேராமல், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, தனித்தனியே சிறை செல்கிறார்கள் நாயகனும் நாயகியும். கதையின் இயல்பான போக்கைப் போலவே, பாபநாசம் சிவன், எஸ். டி. சுப்புலக்ஷ்மி, பேபி சரோஜா ஆகியோரது நடிப்பும் மிகைப் படுத்தாத இயல்பான நடிப்பு. இயக்கத்திலும் ஒளிப்பதிவிலும் உள்ள மெருகு, 'அடேயப்பா! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே இத்தனை சிறப்பாகச் செய்திருக்கிறார்களே' என்று எண்ண வைக்கிறது.

பெண்ணை அடிமைப்படுத்துதல், வரதட்சணைக் கொடுமை, ஜாதி வெறி, வறுமையிலும் அறியாமையிலும் உழலும் குப்பங்கள் என்று படத்தில் கூறப்பட்ட சமூகப் பிரச்னைகள் யாவும் இன்றைக்கும் உள்ளவைதான் என்று நினைக்கையில் மனம் சோர்கிறது. ஆனால் அரை நூற்றாண்டுக்கு முன்னரே துணிவோடும் வேகத்தோடும் தெளிந்த பார்வையோடும் அவற்றைச் சாடியவர்களை நினைத்தால் பெருமிதமாக இருக்கிறது.

— ரசிகா

பி.கு: அமரர் கல்கி எழுதிய தியாக பூமி நாவலின் புதிய பதிப்பு அண்மையில் வெளியாகியிருக்கிறது.
பிரசுரம்: வானதி பதிப்பகம்,
சென்னை — 600 017.

எம்.ஜி.ஆர் விருது- கலைஞர் அறிவிப்பானேன்?



* தூக்கி வீசினார்!



* மோதலைத் தவிர்க்க...

* தாங்கள் கனி, சென்னை – 18.

? 'மூப்பனாரைத் தூக்கி வீசியது நான் தான்' என்று ஜெயலலிதா பேட்டியளித்திருப்பது பற்றி?

! இதன் பிறகு கூட காங்கிரஸ் மேலிடத்துக்குச் சூடு சுரணை பிறக்கப் போவதில்லை என்பதுதான் பரிதாபம்!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? சட்டசபை பெரும்பான்மையை நிரூபிக்கும் வாய்ப்பு தரப்படாமலே கர்நாடகத்தில் ஜனதா தள ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பது குறித்து?

! 1. கர்நாடக ஜனதா தளக் கட்சியில் முதுகில் குத்தும் துரோகிகள் சிலர் இருந்த காரணத்தால் மத்திய இ. காங்கிரஸ் அரசுக்குக் கர்நாடக அரசின் முதுகில் குத்துவது எளிதாகிப் போனது.

2. கட்சி தாவுதல் தடுப்புச் சட்டத்தில் ஓட்டைகள் உள்ளன. அடைக்கப்பட வேண்டும்.

3. மெஜாரிடியைச் சட்டசபையில் நிரூபிக்க வாய்ப்புத் தராமல், ஜனநாயக கோட்பாடுகளை மீறி ஜனதா தள அரசை டிஸ் மிஸ் செய்ததில், ராஜீவ் எதிர்க் கட்சிகளுக்கு டானிக் கொடுத்துத் தம்மை மேலும் பலவீனப்படுத்திக் கொண்டு விட்டார்!

* ஆர். ராஜா, சீர்காழி.

? தமிழகத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

! அறுபது சதம் மின்வெட்டு என்றால் எதிர்காலம் பிரகாசமாகவா இருக்கும்? இருள் சூழ்ந்துதான் இருக்கும்! கல்பாக்கம், எண்ணூர், நெய்வேலி, மேட்டூர் என்று எல்லா இடங்களிலும் கோளாறு. உருப்பட்டாற் போலத்தான்!

* தமிழ் எழிலன், காஞ்சிபுரம்.

? கலைஞர்களுக்கு எம்.ஜி.ஆர். பெயரில் விருது என்று கருணாநிதி அறிவித்திருப்பது எதைச் சரிக்கட்ட?

! திரைப்பட உலகில் சரித்திரம் படைத்தவர் எம்.ஜி.ஆர். தமது வெற்றிப் படங்கள் மூலம் லட்சோப லட்சம் மக்களுக்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வாழ்வளித்தவர். அவர் நினைவைப் போற்றுவது திரைப்பட உலகின் கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றும்போதே புதிய கலைஞர்களை ஊக்குவிப்பது என்பது சிறந்த திட்டம். ஆக, ஒரு கடமையை நிறைவேற்றுவதில் ஏற்பட்டிருந்த ஒரு தேக்கத்தைச் சரிக்கட்டவே கருணாநிதி செயல்பட்டிருக்கிறார்.

* ப. கரும்ரார் ராஜ், தூத்துக்குடி.

? பொன் விழா கொண்டாடவிருக்கும் தமிழக சட்டசபை பற்றி?

! அதான் மார்ச் இருபத்தைந்தாம் தேதி அமர்க்களமாகக் கொண்டாடி விட்டார்களே. இன்னும் என்ன?

* சரவணன், ஊட்டி.

? வன்னியர் சட்ட எரிப்புப் போராட்டம் பற்றித் தங்கள் கருத்து?

! ரொம்பவும் பிடிவாதம் பிடிக்கிறார்கள்; கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். 'தமிழக அரசு அறிவித்துள்ள புதிய இட ஒதுக்கீடு திட்டம் திருப்திகரமாகச் செயல்படுகிறதா இல்



* எம்.ஜி.ஆர். விருது!





* 300 — 14

நீங்கள் கேட்டவை — தராசு

* 'பாவ விழா'?

லையா என்று பரீட்சித்துப் பாருங்கள் என்ற முதல்வரின் கோரிக்கை நியாயமானது. இரண்டு ஆண்டுகளாவது புதிய திட்டத்தை அமல்படுத்திப் பார்த்து விட்டுப் பிறகு ஒரு முடிவுக்கு வரலாம்.

* இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? 'சத்யஜித் ரே இல்லாத பவழ விழா, பாவ விழாவாகத்தான் இருக்க முடியும்' என்று டைரக்டர் மகேந்திரன் வெடித்திருக்கிறாரே?

! சத்யஜித் ரேக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று கருத ஆதாரம் இல்லை. ஆனால் அவருக்கு உடல்நலம் சரியில்லை என்று ஆதாரபூர்வமாக அறிகிறோம்.

* அ. ராமச்சந்திரன், பெசண்ட் நகர்.

? சாவி பத்தாம் ஆண்டு விழாவுக்குப் போயிருந்தீர்களா?

! அட, அது சாவி விழாவா? கலைஞருக்குப் பாராட்டு விழா என்றல்லவோ நினைத்தேன்!

* எல். மாறன், மேல்பட்டி.

? தராசு, ராஜா பாடிய பாடல்களின் போது பலவித மூட்களில் இருந்ததாகக் கூறிவிட்டு, கடைசியில் 'காதலிலே தோல்வியுற்றான்...' என்று முடித்திருப்பதை நினைத்தால்...?

! தாராளமாக நினைத்து விட்டுப் போங்களேன். இதில் 'ஹி... ஹி...' ஒன்றும் கிடையாது. ஆனால் ஒன்று. காதல் என்பது பெண் சம்பந்தப்பட்டதாக மட்டுமே இருக்க வேண்டும் என்பது இல்லை.

* அ. முஸ்தபா, தக்கோலம்.

? மே. இ. தீவுகளில் எல்லாப் போட்டிகளிலும் அருமையாக விளையாடியதாக நம் இந்திய அணியினரில் யாரைக் குறிப்பிடலாம்?

! அப்படி யாரையும் குறிப்பிட்டுக் கூறுவது கஷ்டம் என்றாலும் இந்த டூரில் மூன்று சதத்தை எட்டிப் பார்க்க முயன்று சித்து என்றும் நினைவில் நிற்பார்.

* பா. புஸ்பமுருகேசராஜன், சின்னமனூர்.

? சி. சுப்பிரமணியம் அமைத்த மூவர் குழு ஏன் கலைக்கப்பட்டது?

! சட்ட மன்றத்துடன் ஒரு மோதலைத் தவிர்க்கத்தான். ஆந்திராவில் நடந்ததைப் பாருங்கள். சட்டசபையுடன் சிலர் மோத, அவர்களைச் சட்டமன்றம் தண்டிக்க, நீதிமன்றம் அவர்களுடைய விடுதலையைக் கோர... சட்டமன்றத்துக்கும் நீதி மன்றத்துக்கும் இப்போது மீண்டும் ஒரு மோதல் ஆரம்பமாகியுள்ளது.

* ராகவேந்திரா, மசூலிப்பட்டனம்.

? ஒரு ஜோக் ப்ளீஸ்?

! ''ஜலண்டு எக்ஸ்பிரஸ் ரயில் கவிழ்ந்ததற்கு யாருமே பொறுப்பல்ல; வானிலை ஆய்வு நிலையத்துக்கே கூடத் தெரிய வராத ஒரு திடீர் சூறாவளிதான் காரணம்!'' என்ற ரயில்வே பாதுகாப்பு கமிஷனரின் தீர்ப்புதான் கொடூர ஜோக்குகளில் முதல் பரிசு பெறுவது.

* எஸ். பி. முருகன், திருநெல்வேலி.

? டீவியில் 'திரை கண்ட பவனம்' நிகழ்ச்சி பாரபட்சமானது அல்லவா?

! சந்தேகமில்லாமல். ஆனால் அதனை நிவர்த்தி செய்ய டீவி நிலையத்தாருக்கு வாய்ப்பு இருக்கிறது. எதிர்ப்பு நிறைய கிளம்பி இருப்பதால் சரி செய்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

* சந்தோஷி, சென்னை — 7.

? குறுகிய வாழ்வு காலத்திலே உலக அனுபவம் பெற, மனமும் பக்குவமடைய மிகச் சிறந்த புத்தகம் எது?

! சத்திய சோதனை. ஆனால் ஒன்று. எந்த நூலும் நமக்கு உதவுமே தவிர உருவாக்காது. நம்மை உருவாக்கிக் கொள்வது என்பது நம்மிடம்தான் உள்ளது.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:
தமிழ் எழிலன்,
9, ஆடிசன் பேட்டை தெரு,
காஞ்சிபுரம் — 631 501.

''எமது கிராமத்தின் பாதுகாப்புக்கு

உத்தரவாதம்''

''ஆம்! கால்நடை இன்ஷுரன்ஸ் இப்போது சாதாரண விஷயம்—அது ஒரு மிக முக்கியத் தேவை. நோய் நொடி வந்தாலும், இயற்கையின் விபத்து நேர்ந்தாலும்—தீ மூளுவது, வெள்ளப் பெருக்கு—பாம்பு கடித்தல் மற்றும் பல விபத்துக்கள் நேர்ந்தாலும் சரிதான்! கால்நடை இன்ஷுரன்ஸ் ஒரு எளிய வசதி. இன்ஷுரன்ஸ் கம்பெனியின் தயவினால் இப்போது எங்களது கால்நடைகளை இன்ஷுர் செய்ய முடிகிறது. இதற்கு நாங்கள் நகரத்திற்குக் கூடப் போக வேண்டியதில்லை—ஓரியண்டல் இன்ஷுரன்ஸ் தன்னுடைய பிரதிநிதியை எங்கள் கிராமத்திற்கு அனுப்புகிறது!! இவ்வளவு பாதுகாப்பு இருக்கும் போது நாங்கள் ஏன் இன்ஷுர் செய்யக் கூடாது? சிறு தொகைதான் ப்ரீமியம் செலுத்த வேண்டும்!''



ஓரியண்டல் இன்ஷுரன்ஸ் நமது கிராமவாசித் தோழர்களுக்கென பல இன்ஷுரன்ஸ் திட்டங்களை நடத்துகிறது. அதாவது விவசாய பம்பு செட் இன்ஷுரன்ஸ், கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு இன்ஷுரன்ஸ் திட்டங்கள் .பிராணிகள் இழுக்கும் வண்டிகள் இன்ஷுரன்ஸ், கிராமவாசிகள் விபத்து இன்ஷுரன்ஸ், மற்றும் தனி நபர் விபத்து இன்ஷுரன்ஸ் முதலானவை. விவரமான தகவல்களுக்கு, எமது அலுவலகம் ஏதேனும் ஒன்றை அணுகி உங்கள் தேவைக்கேற்ற விவரங்களை அறியவும்.

இன்ஷுரன்ஸ்	ஆண்டு ப்ரீமியம் தொகை	
எருமை/பசு	ஐ.ஆர்.டி.பி 2 ரூ. 25 பைசா	(மற்றவை) 4.00 ரூ.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ்	நபருக்கு 12 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 15,000 ரூ.
கிராமிய விபத்து இன்ஷுரன்ஸ்	நபருக்கு 5 ரூபாய்	காப்பீட்டுத் தொகை 6,000 ரூ.
விவசாய பம்பு செட்		
1) மின் சக்தியால் இயங்குகிறது	50 முதல் 190 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொறுத்து)	
2) டீசலினால் இயங்குவது	70 முதல் 230 ரூபாய் வரை (குதிரை சக்தியைப் பொறுத்து)	
முட்டை இடும் கோழி	ஐ.ஆர்.டி.பி. ஒரு குஞ்சிற்கு 80 பைசா (1 நாள் முதல் 72 வாரம் வரை)	(மற்றவை 1.20 முதல் 1.50 ரூ. வரை (வயதுக்குத் தக்கவாறு)
ப்ராய்லர் குஞ்சு	ஒரு குஞ்சிற்கு 25 பைசா (1 நாள் முதல் 8 வாரம் வரை)	

தி ஓரியண்டல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்
(பாரதீய சதாரண பீமா நிகம் தி. சகாயக கம்பெனி)
ஓரியண்டல் ஹவுஸ், ஏ-25/27, ஆஸப் அலி ரோடு, புதுதில்லி-110 002.



திருபர்: நீங்க இசையமைத்த பாடல்கள் எதுவும் பொதுமக்கள் நினைவில் தங்கற மாதிரி இல்லையே... ஏன்?

இசையமைப்பாளர்: பொது மக்களின் ஞாபக சக்திக் குறைவுக்கு நான் என்ன செய்ய முடியும்?

— உ. ராஜாஜி.



சில ஆண்டுகளுக்கு முன்பு மைசூரில் ஒரு சந்தினுள் நுழைய முடியாத அளவுக்குச் சிறுநீர் கழித்து அசிங்கம் செய்து வந்தார்கள். பார்த்தார் கார்ப்பரேஷன் அதிகாரி. அந்த இடத்தில் பெரிய போர்டு ஒன்றை நட்டார். அதில் நாய் ஒன்று காலுயர்த்திச் சிறுநீர் கழிப்பது போன்ற வண்ண ஓவியம். அதன் கீழே ஆங்கிலத்திலும் கன்னடத்திலும் "கண்ட கண்ட இடங்களில் காலுயர்த்துவது இதன் பிறப்புரிமை நம்முடையது அல்ல." நகர மக்கள் ரசித்தார்கள். நல்ல பலனும் கிடைத்தது.

— பி. நாச்சிமுத்து.



"எதுக்குப்பா ஆபீஸுக்குள் இப்படி ஒரு போர்டு?"

"பல பேர் கள்ள நோட்டை லஞ்சமாக் கொடுத்துட்டுப் போயிடறாங்களே!"

— உ. ராஜாஜி.



"உங்க கட்சியிலே இருபத்தெட்டு கோஷ்டிகள் இருக்குன்னு எப்படி கரெக்டா சொல்றீங்க?"

"இருபத்தெட்டு மந்திரிகள் இருக்காங்களே...!"

— ஆர். வசந்தகுமார்.



முல்லா ஒரு சிறுவனைத் தண்ணீர் கொண்டு வர கிணற்றுக்கு அனுப்பினார். அப்போது "ஜாக்கிரதை! பானையை உடைத்து விடாதே" என்று கூறி, பையன் தலையில் குட்டினார்! பக்கத்தில் நின்றிருந்தவருக்கோ ஆச்சரியம்! "முல்லா! தவறு இழைக்காத அச்சிறுவனை எதற்காகத் தண்டிக்கிறீர்?" "பானையை உடைத்த பிறகு அவனைத் தண்டித்து என்ன பயன்?" என்றார் முல்லா மெதுவாக!

– முல்லாவின் கதைகள் என்னும் நூலிலிருந்து

— தேனி. என். செல்வராஜன்.

நிறைகுடம்

இண்டர்காமில் பேசிக் கொண்டிருந்தார் ஸ்டோர் கீப்பர். வியர்க்க விறுவிறுக்க ரிஸீவரை வைத்தார்.

''எம்.டி.தான்.... ஸர்ப்ரைஸ் செக்காம்... பார்ச்சேஸ் மேனேஜர், அக்கௌண்டன்ட்... ரெண்டு பேரும் வராங்க...'' என்றதுதான் தாமதம் ஸ்டோரே அமர்க்களப்பட ஆரம்பித்தது.

எங்கேயோ போய் விட்டு உள்ளே நுழைந்த சுந்தரத்திடம் ''வாங்க... கொஞ்ச நேரம் ஸீட்டுல இருங்க... ஸ்டாக் வெரிஃபிக்கேஷனுக்கு வராங்க... புதுசா சேர்ந்த நீங்க மாட்டிக்கப் போறீங்க...'' என்றார் ஸ்டோர்கீப்பர்.

'' பாத்ரூமுக்குப் போயிட்டு வரேன்...''

கேட்காத கேள்விக்குப் பதிலைச் சொன்ன சுந்தரத்திடம் ''சரி, உங்க பொறுப்புல இருக்கிற அந்த பின்—கார்டை **(Bin Card)**யெல்லாம் ஒழுங்கா எடுத்து வெச்சுக்கும்... என்ட்ரியெல்லாம் அப்டுடேட்டா இருக்குல்ல...?'' என்றார் ஸ்டோர் கீப்பர்.

''ம்... ம்...'' என்று தலையாட்டினார் சுந்தரம்.

''அப்டுடேட்டா இல்லேன்னாலும் பயப்படாதீரும்... நீர் வேலைக்குச் சேர்ந்து ஒரு வாரம்தானே ஆவுது... நம்ம கம்பெனி மெத்தட்ஸ் புரிபடலே... வயசானவர் பாவம்னு ஏதாவது சொல்லிச் சமாளிச்சு ஒம்ம பேரைக் காப்பாத்தறேன்'' என்ற ஸ்டோர் கீப்பரின் காதில் சுந்தரத்தின் ''தாங்க்ஸ்'' விழவில்லை.

''பதறாம தேடுங்க... அந்த பின் கார்ட் இப்ப.... காலைல பார்த்தேனே... நிச்சயமா இங்கேதான் இருக்கணும்...'' என்றார் ஸ்டோர்—கீப்பர்.

நடுங்கும் விரல்களுடன் பின்—கார்டுகளை ஒவ்வொன்றாய்ப் பார்க்க ஆரம்பித்தார் சுந்தரம்.

''இது ஆச்சரியமாயில்லே ஸார்... இந்த ஐட்டம்தான் அன் ஆத்தரைஸ்டா வெளியிலே போயிருக்குன்னு ரிப்போர்ட் வந்துருக்கு... அதோட பின்—கார்டைக் காணோம்... இந்த ஐட்டம் ஒண்ணோட விலையே தொள்ளாயிரத்து நாப்பத்து மூணு... வெளியிலே இதுக்கு ஏக டிமாண்ட்.. பத்து ஐட்டம் வந்ததுன்னா உடனே பின்—கார்ட் அட்டைல வரவு பத்துன்னு தேதி போட்டு வரவு காலத்துல எழுதிடணும்... அது மாதிரி ஸ்டோர்லேந்து ஒண்ணோ ரெண்டோ... எவ்வளவு போனாலும் அந்த எண்ணிக்கையைத் தேதி போட்டு ரிக்வஸிஷன் நெம்பரைப் போட்டு எழுதிடணும்.. இது மாதிரிதான் எல்லாப் பொருள்களுக்கும் பின்—கார்ட் என்ட்ரி... இந்தப் பொருள் திருட்டுத்தனமா வெளியே போயிடுச்சுன்னு நமக்குத் தகவல் வந்ததை' செக் பண்ணலாம்னு எம்.டி. அனுப்பிச்ச இங்கே வந்தா, அந்த பின்—கார்டையே காணோமே...! இப்ப அதுலே இருக்கற எண்ணிக்கைக்கும் பொருள்களோட எண்ணிக்கைக்கும் சரிபார்க்க முடியாம திருட்டு நடந்துதா இல்லையான்னும் தீர்மானிக்க முடியாதே...!''

— பர்ச்சேஸ் மேனேஜர் பெரிய பிரசங்கமே செய்தார். அக்கௌண்டன்ட் ''என்ன கெடச்சுதா....'' என்றார் சுந்தரத்திடம்.

''இ.... இல்ல ஸார்....''

''இல்லையா....! நல்லா பாத்துட்டீங்களா?'' என்று பர்ச்சேஸ் மேனேஜர் சொல்ல, ''ரமேஷ்! ஐட்டம் எழுபத்தாறு பின்—கார்ட் அங்கே எங்கேயாவது மிஸ்டேக்கா வந்துருக்கா பாரு...'' என்று குரல் கொடுத்தார் ஸ்டோர்—கீப்பர்.

''எழுபத்தாறா... இல்லியே ஸார்...''

ஸலீம், மேனன், ரகு என்று வரிசையாக எல்லோரையும் விசாரித்த ஸ்டோர்—கீப்பர் 'இல்லை' என்ற ஒரே பதிலைப் பெற்றார்.

ரகு சுந்தரத்தை நெருங்கி ''தள்ளுங்க ஸார்... நான் ஒரு வாட்டி பார்க்கறேன்'' என்று வந்தான்.

''பொறுப்பில்லாதவரா இருப்பாரு போலிருக்கே...'' என்று சன்னமான குரலில் விமர்சித்தார் பர்ச்சேஸ் மேனேஜர்.

''புதுசு...! பாவம், அதான் கோட்டை விட்டுட்டு, தட்டுத் தடுமாறி முழிக்கறாரு'' என்று ஸ்டோர்—கீப்பர் பரிந்து கொண்டு வந்தார்.

''ஒரு வாரம் ஆவுது இல்லே... இன்னும் எத்தனை நாளைக்குப் புதுசாம்... இவரு லயன் ஸிமிண்ட்ஸ்ல எத்தனை வருட ஸர்வீஸ் போட்டிருக்காரு...? அதுல இருந்து ரிட்டயர் ஆனவருதானே...? அதுல ஒவ்வொரு செக்ஷனா இருந்து இந்த வேலை எல்லாத்தையும் கத்துக்கிட்டு வந்தவருதானே...? அப்புறம் என்னவாம்...''

— அக்கௌண்டன்ட் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார்.

''லயன் ஸிமண்ட்ஸ் அரசாங்கத்துது. கவர்ன்மென்ட் ஆபீஸ்ல வேலை நடக்கறாப்பலதானே இவரு இங்கயும் வேலை செஞ்சுருப்பாரு...'' என்றார் ஸ்டோர்—கீப்பர்.

இந்தச் சமயத்தில் போன் அடிக்க, அதை

திருவரங்கம் இசைப்பித்தன்

எடுத்துப் பேசிய சுந்தரம், ''ரகு உனக்கு ஃபோன்'' என்று அழைக்க முற்பட்டார்.

அக்கௌண்டன்ட் ரகுவை அழைப்பதைக் கவனித்து ''ரகு ஆஃபீஸரோட முக்கியமான விஷயம் பேசிக்கிட்டிருக்காரு... என்ன விஷயம் சொல்லுங்கோ... சொல்லிடறேன்'' என்றார் ஃபோனில்.

பர்சேஸ் மேனேஜர் கடுப்புடன் பேசினார்: ''சாப்பாட்டுக்குக் கஷ்டப்படற ரிடையர்ட் கவர்ன்மென்ட் ஸர்வென்ட்டா இருந்தா வேலைல ஒழுங்கா இருந்திருப்பாரு.. இவரு அப்படியில்லியே... லயன்ஸ் ஸிமின்ட்ஸ்ல வந்த ஸெட்டில்மென்ட் பணத்தை பேங்க்ல ஃபிக்ஸட்ல போட்டுட்டுப் பொழுது போகவேன்னு வேலைக்கு வந்தவர்தானே... அதான் இப்படி அஜாக்ரதையா இருந்திருக்காரு...

அதே நேரம் சுந்தரம்''கண்டிப்பா சொல்லிடறேன் வெச்சுடட்டுங்களா'' என்று ஃபோனில் சொல்லி விட்டு ரிஸீவரை வைத்தார்.

''எம்.டீ.கிட்ட விஷயத்தைச் சொல்லிட வேண்டியதுதான்'' என்ற பர்ச்சேஸ் மேனேஜர், இன்டர்காமில் எம்.டீ.யுடன் தொடர்பு கொண்டார்.

“ஐயாம் ஸாரி மிஸ்டர் சுந்தரம்... எம்.டீ. உங்களுக்குக் கணக்கு தீர்க்கச் சொல்லிட்டாரு'' என்றார் ஸ்டோர்–கீப்பர்.

''பரவாயில்ல... தப்பு எம் பேருல தானே... தண்டனையையும் நான்தான் அனுபவிக்கணும்'' என்ற சுந்தரத்திடம், ''அக்கௌண்ட் ஸெக்ஷன்ல போயி நீங்க வேலை செஞ்ச ஆறு நாள் சம்பளத்தை வாங்கிட்டுப் போங்க'' என்றார் ஸ்டோர்–கீப்பர்.

''சரி ஸார்'' என்ற சுந்தரம், மெதுவாகத் தமது உடமைகளை எடுத்துக் கொண்டு,



ஒவ்வொருவரிடமாகச் சொல்லிக் கொண்டு வெளியேறினார்.

அனைவரும் அவரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்க, சுந்தரம் திரும்பி, "அப்புறம் ரகு... உனக்கு ஒரு ஃபோன் வந்தது..." என்றார்.

ரகு, "யாரு ஸார்...? என்னவாம் ஸார்...?" என்றவாறு அவரை நெருங்க, மற்றவர்கள் தமது வேலைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

"ஆஸ்பத்திரிலேந்து உன் தங்கச்சிதான் பேசிச்சு... இப்ப உங்கம்மாவுக்கு எவ்வளவோ பரவாயில்லையாம்... விலையுசந்த அந்த இஞ்ஜெக்ஷன் இனிமே வேணாமாம்..." என்றார் சுந்தரம்.

ரகு ஏதோ விளக்கம் சொல்ல முயல, "இப்ப எனக்கு எல்லாம் புரிஞ்சு போச்சுப்பா" என்று அவன் தோளில் ஆதரவாய்க் கை வைத்துப் பேசினார் சுந்தரம்.

"அம்மாவோட உயிர்ன்னு வரச்ச நானும் நீ செஞ்ச காரியத்தைத்தான் செஞ்சுருப்பேனோ என்னமோ... அதனாலதான் ஸர்ப்ரைஸ் செக்கிங்னு நியூஸ் வந்தவுடனே அந்த பின்—கார்டையே மறைச்சு எடுத்துக்கிட்டுப் போயி சுக்கு நூறா கிழிச்சு டாய்லெட்ல போட்டு பக்கெட் பக்கெட்டா தண்ணி ஊத்தி அடிச்சுட்டுப் போகப் பண்ணிட்டேன்.. இப்ப பொருள் திருடு போச்சுன்னு நிச்சயம் பண்ணிக்க முடியாத நெலமை..."

"ஆனா ஸார்... எனக்காக நீங்க டிஸ்மிஸ்..."

— வாக்கியத்தை முடிக்க முடியாமல் ரகுவிற்குத் தொண்டையடைத்தது.

"பரவாயில்லப்பா... இந்தக் கிழவனுக்கு வேற ஏதாவது கம்பெனிலே வேலை கிடைக்கும்... என்ன, இதைவிட சம்பளம் கம்மியா இருக்கலாம்... ஆனா முப்பது வயசு தாண்டிட்ட ஒனக்கு, கவர்ன்மென்ட் பேங்க் வேலை இனிமே கிடைக்காது. கல்யாணத்துக்கு நிக்கற தங்கை, வயசான தாய்ன்னு பொறுப்புகளைச் சுமந்துக்கிட்டிருக்கிற ஒனக்கு வேலை போயிட்டா...? அதனாலேதான். நேத்து ஏற்பட்ட மாதிரி இக்கட்டான சூழ்நிலை இனிமே ஏற்பட்டா அதுக்குத் தயாரா கொஞ்சம் பணத்தைச் சேமிச்சு வெச்சுக்கப்பா... அது மட்டுமில்ல... இன்வாய்ஸ். ரிக்வஸிஷன் ஸ்லிப் இதெல்லாம் வெச்சு இன்னொரு பின்—கார்டு இரண்டு மூணு நாள்ல தயார் பண்ணிடுவாங்க... அதுக்குள்ளே எப்படியாவது பணம் புரட்டி எவ்வளவு ஐட்டம்ஸ் போச்சோ அவ்வளவையும் வெளியில வாங்கி வெக்கறதுதான் உனக்கு நல்லது. ஏதோ எனக்குத் தோணினதைச் சொன்னேன்... நான் வரட்டா?"

தளர்ந்த நடையுடன் சென்ற சுந்தரத்தை, ரகுவின் கண்களில் நிரம்பி விட்ட நீர் மறைத்தது.



நியமன எம்.எல்.ஏ.க்கு உரிமைகள் உண்டா?

காலை ஒன்பது மணி முதல் மதியம் வரை சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மதியத்திற்குப் பிறகு லயோலா கல்லூரியில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார் ஆஸ்கார் சி. நிகிலி. சென்னை லயோலா கல்லூரி நிர்வாகம், இவரை உற்சாகப்படுத்தி சட்டமன்றம் சென்று வர வசதியாக வகுப்பு நேரங்களை மாற்றித் தந்து உதவியிருக்கிறது.

இவர் ஒரு நியமன உறுப்பினர். ஆங்கிலோ – இந்திய வகுப்பினரின் கோரிக்கைகளையும், நலன்களையும் அரசுக்கு எடுத்துச் சொல்வதற்காக நியமிக்கப்பட்டவர்.

''அது என்ன நியமன உறுப்பினர்...?''

''நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஆங்கிலேயர்கள், ஆங்கிலோ – இந்திய வகுப்பினரைச் சரியாகக் கவனிப்பதில்லை என்ற புகார் இருந்தது. சுதந்திரத்துக்கு பிறகு, இந்திய அரசு அவர்களை அலட்சியப்படுத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. எனவே அவர்களது நலன்களை எடுத்துச் சொல்ல அரசியல் சட்டத்திலேயே வழி வகை செய்யப்பட்டது. அரசியல் சட்டம் 333–ம் பிரிவின் கீழ் அவர்களின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகப் பாராளுமன்றத்திலும் மாநில சட்ட மன்றங்களிலும் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.''

''நீங்கள் எப்படி நியமிக்கப்பட்டீர்கள்?''

''புதிய மாநில அரசு பதவிக்கு வந்தவுடன் எங்கள் சமூகத்திலிருந்து, பல நபர்கள் இந்தப் பதவிக்கு வர முயற்சி செய்தார்கள். கிட்டத்தட்ட பதினைந்து நபர்கள் முயற்சி செய்தார்கள். முதல்வர் எல்லோருடைய பயோ–டேட்டாவையும் பார்த்து விட்டு என்னை நியமிக்க கவர்னருக்குச் சிபாரிசு செய்தார்.''

''உங்களுக்கு மற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் போல எல்லா உரிமைகளும் உண்டா?''

''சகல உரிமைகளும் உண்டு.. ஒன்றைத் தவிர. ராஜ்ய சபா உறுப்பினர்களைச் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் மட்டும் வோட்டுப் போட உரிமை இல்லை.''

பொருளாதார பேராசிரியரான நிகிலியிடம், ''கலைஞரின் முதல் பட்ஜெட் எப்படி?'' என்று கேட்டோம்.

''இப்போதிருக்கும் சூழ்நிலையில் இதை விடச் சிறந்த பட்ஜெட்டை யாரும் போட்டு விட முடியாது.''

தேர்ந்தெடுக்கப்பட்ட நியமன உறுப்பினர் ஆறு மாதங்களுக்குப் பின்னர் ஏதாவது ஒரு கட்சியில் சேரலாம் என்று விதி இருக்கிறது. ''நீங்கள் எந்தக் கட்சியில் சேர விரும்புகிறீர்கள்'' என்ற போது நிகிலி ''நான் இது பற்றி யோசிக்கவே இல்லை'' என்று கூறிச் சிரித்தார்.

சந்திப்பு: **கௌசல்யா**

காதலன்: அன்பே ஏன் தூரவே போய் உட்கார்ந்திருக்கிறாய்? வெட்கமா?

காதலி: இல்லே... கண்டலைச் சாப்பிட்டு விட்டுக் கையைப் புடவையில துடைச்சிடுவீங்க... அதுதான்!

திருத்துறைப்பூண்டி. எஸ். கந்தசாமி.



டீ. வி. வீடியோ பக்கங்கள்:

நான் ஏன் டீ.வி பார்ப்பதில்லை?



பாட்டியின் சந்தேகம்!

○○ எங்கள் வீட்டு அரை டிக்கெட்டுகள், ஓர் ஞாயிறு அன்று காலை வி.ஸி.ஆர். உபயத்தில் **Kapil's Knock, All the way for Four** போன்ற டீ.வி.யில் ஒளிபரப்பான நிகழ்ச்சிகளின் ரிக்கார்டிங்குகளைப் போட்டுக் குஷியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சமையலறையிலிருந்து என் அம்மா, "கண்ணா! உடனே ஓடிப் போய்க் கோடிக் கடையில் உப்பு வாங்கிட்டு வாடா" என் றான் பேரனிடம். அவனோ, "போ பாட்டி! 'கபில்ஸ் நாக்'கைப் பார்த்துக்கிட்டு இருக்கேன். அரைமணி கழிச்சுத்தான் போவேன்" என்று சொல்லி விட்டான்.

என் அம்மா என் மனைவியிடம் 'கபில்ஸ் என்றால் என்ன?' என்று கேட்டாள். அதற்கு அவள், 'கபில்தேவ் என்ற கிரிக்கெட்காரரைத்தான் சுருக்கமாகக் கபில் என்று கூறுவார்கள்' என்று பதில் சொல்ல, என் அம்மாவுக்கு ஒரே வியப்பு! 'கபில்தேவ் நாக்கில் அப்படி என்ன விசேஷம்? டீவிக்காரன் அரை மணி நேரம் காட்ட இவங்களும் மெனக்கெட்டுப் பார்த்துக்கிட்டு இருக்காங்களே!' என்றாள்.

— ரா. ர. தமன், சென்னை — 24.

இராவணன் முறித்த வில்!

○○ கன்னட ஒளியும், ஒலியும் பார்த்துக் கொண்டு இருந்தோம். அதில் ஒரு காட்சி. பள்ளிச் சிறுவர்கள் சேர்ந்து ராமாயண நாடகத்தைப் பாடல் வடிவில் நடிக்கிறார்கள். சீதை மாலையுடன் காத்துக் கொண்டிருக்க, ஒவ்வொரு இளவரசரும் வில்லை முறிக்க முயற்சி செய்து முடியாமல் போவது போல் நடிக்கிறார்கள். இராவணனாக நடித்த சிறுவன், ஆர்வம் காரணமாக வில்லை இரண்டாக உடைத்து விட, பின்னால் வந்த இராமன் விழிக்க, டீச்சர் இராவணனை முறைக்க, நாடகம் பார்க்க வந்த மாணவர்கள் அனைவரும் சிரித்து விடுகிறார்கள். இராவணனாக நடித்த சிறுவன் அழ, அதற்குள் திரை போட்டு விடுகிறார்கள். வில்லுக்குப் பிளாஸ்திரி போட்டு ஒட்ட வைக்கிறார்கள். மீண்டும் திரை விலக டீச்சர் விட்ட டோஸில் இராவணன் வில்லைத் தொட்டு விட்டு ஓடி விட, பின்னால் வந்த இராமன் வில்லை ஒடித்து விட்டுச் சீதையை மணக்கிறார்! கன்னட ஒளியும் ஒலியும் பகுதியில் இந்தப் பாட்டை மீண்டும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்!

— பி. உஷா, சென்னை — 23.

'செலக்டர்' தோரணையில்...

○○ பல மாதங்களாக 'பிளான்' போட்டு, வாங்கி வந்த டீ.வி. செட்டிற்கு முறைப்படி பூஜை போட்டு, சுவிட்சை 'ஆன்' செய்த போது, கிரிக்கெட் மாட்ச் ஒன்று ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது!

யூ.கே.ஜி. படிக்கும் ஐந்தரை வயது தீபு உள்பட அனைவரும் ஆவலோடு, இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்த நிகழ்ச்சியின் போது, மேற்கிந்திய அணியைச் சேர்ந்த 'விவ் ரிச்சர்ட்ஸ்' எதிர் அணியின் பாட்ஸ்மேன் தந்த காட்ச் ஒன்றை நழுவ விட்டார்!


டீ.வி.யில், அந்த நிகழ்ச்சியை மீண்டும் ஒருமுறை ரீபிளேயில் ஸ்லோமோஷனில் காண்பிக்கும் போது எங்கள் வாண்டுப் பயல் உணர்ச்சிவசப்பட்டு, "தண்டமான ஃபீல்டர். ஒருமுறைதான் காட்சை விட்டு விட்டார். மீண்டும், முன்பை விட ஸ்லோவா வந்த காட்சையும் கூட டிராப் செய்து விட்டாரே! அவரை முதலில் டீமிலிருந்து டிராப் செய்ய வேண்டும்!" என்று செலக்டர் தோரணையில் திட்டவட்டமாகச் சொன்னானே பார்க்கணும்!

— ஸ்ரீதர் சாமா, சென்னை — 4.

"ஏமாத்திட்டீங்க!"

○○ எங்கள் கடையில் டீ.வி. வாங்கிய ஒருவர், ஒரு வாரத்தில் திரும்பி வந்தார். "என்னை ஏமாத்திட்டீங்க! படம் ஆடுது. அலை அலையா வருது.. வேற டீ.வி. மாத்திக் கொடுங்க..."— என்று கத்தினார். சமாதானம் சொல்லி அவர் பின்னாலேயே மெக்கானிக்கையும் அனுப்பினோம். மெக்கானிக் திரும்பி வந்து, "டீவி நல்லா இருக்கு சார், எந்த ப்ராப்ளமும் இல்லை! அந்த ஆளுக்கு டியூன் பண்ணவே தெரியலே!" என்றார்.

மறுநாள் அந்த ஆள் வந்து திரும்பவும் டீவி அதே போல் ரிப்பேராகவே இருப்பதாகக் கத்தினார். நாங்களும் தலைமை என்ஜினியரை அனுப்பினோம். அவர்



போய் விட்டு வந்த பின்புதான் உண்மை தெரிய வந்தது.

''அந்த ஆள் சாயங்காலம் ஆச்சுன்னா ஃபுல்லா தண்ணியைப் போட்டுட்டுப் போதையிலே இருக்காரு சார்! வீட்லே வேற ஆளுங்களும் இல்லை. ஃபுல் கிக்குல டி.வி. பார்த்தா வேற எப்படித் தெரியும்? இதுக்கு நாம என்ன பண்ண முடியும்?'' என்றார்.

— தே. சுப்பிரமணியன், மதுரை — 1.

'ரிக்ஷா மந்திரி!'

○○ ''ரிக்ஷாக்காரங்க குறைகளைத் தீர்க்கறதுக்காகவே ஒரு மந்திரிசபை நியமிச்சுருக்காங்களா? எவ்வளவு தாராள மனசு!''

''இதோ பார் பாட்டி! இந்தி தெரியாதப்ப இந்தி நியூஸ் பார்க்காதேன்னு சொல்லியிருக்கேனில்ல. அவங்க சொல்றது ரக்ஷா மந்திரி — ராணுவ மந்திரி. நீ நெனைக்கிற மாதிரி ரிக்ஷா மந்திரி இல்லே!''

— அ. குமார், பெங்களூர் — 5.

ஆறு மாதங்களாய் அவதி!

○○ கேரளத்திற்கு டி.வி. வந்த புதிதில் எர்ணாகுளத்தில் ஒரு கலர் டிவியை வாங்கினேன். ஏகமாக விளம்பரம் செய்யப்படும் டி.வி. இரண்டரை வருட காலம் மிகத் தெளிவாகச் செயல்பட்டது. ஒருநாள் புகைவிடத் தொடங்கி, தன் பணியை நிறுத்தி விட்டது.

வாங்கிய கடையிலேயே சர்விஸ் மேனைத் தேடிப் போக, அவர் கோயமுத்தூர் சென்று விட்டதாகவும் இனி கோவையிலுள்ள ஸர்விஸ் நிலையத்தில்தான் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் கூறிக் கைவிரித்து விட்டார் கடைக்காரர். உடனே கோவைக்கும், அதன் தலைமை நிறுவனமுள்ள சென்னைக்கும் தொடர்பு கொண்டோம். இரண்டு மாதங்கள் கழித்து அவர்கள் இங்கு வந்து பழுதடைந்த வெளிநாட்டு உதிரிப் பாகத்தைக் கூடுதல் விலை கொடுத்து வாங்கிப் பொருத்திச் சென்றனர்.

ஒரு மாதத்திலேயே மீண்டும் எங்கள் டி.வி. புகைவிடத் தொடங்கி வேலை நிறுத்தம் செய்தது. கோவைக்குக் கடிதம், போன்கால் பறக்க, அவர்கள் சாவகாசமாக மூன்று முறை வந்து, டி.வி.யின் நாடி பார்த்து, ஒரொரு முறையும் ஒரொரு பகுதி செயலிழந்து விட்டது எனச் சொல்லி, கடைசியாக ஒரு சர்க்யூட் பகுதியையே கழற்றி எடுத்துச் சென்றனர்.

ஆறு மாதமாகியும் சரியாகிற வழியில்லை! கோவையிலிருந்து ஸர்வீஸ்மேன் இங்கு வரப் போக ஆகும் பயணச் செலவு, பழுதுபார்க்க ஏற்படும் காலதாமதத்தின் காரணமறியாமை, டி.வி.யின் தொடர் நிகழ்ச்சிகளைக் காண இயலாமை இவற்றால் ஏற்படும் கோபதாபங்கள் என்னை வருத்தி எடுக்கின்றன. எனவே டி.வி. வாங்கும் போது அதனைப் பழுதுபார்க்கும் வசதியும் அருகாமையில் அமைந்துள்ளதா என்று பார்த்து அத்தகைய டி.வி.யையே வாங்குங்கள் என யோசனை கூற விரும்புகிறேன்.

— டி. எஸ். சுப்பம்மாள் சோமசுந்தரம், உத்யோகமண்டல்.

நான் ஏன் டி. வி. பார்ப்பதில்லை..?

○○ ஐந்து காரணங்கள்:

சிரிப்பை வரவழைக்கும் எந்த நிகழ்ச்சியும் என் மாமியாருக்குப் பிடிக்காது. யாராவது சிரித்தாலே ஏதோ பஞ்சமாபாதகம் புரிந்து விட்டதைப் போல நொந்து கொள்வது அவர் வழக்கம். சிரிப்பைக் கட்டுப்படுத்தும் அமானுஷ்ய சக்தி எனக்கு இல்லாததால் டி.வி. பார்ப்பதை நிறுத்தி என் மாமியாரிடம் நல்ல பெயர் வாங்கிக் கொண்டேன்.

டி.வி.யில் திரைப்படம் பார்க்கும் போது கூட தியேட்டரில் படம் பார்க்கும் குஷியும், திருப்தியும் கிடைப்பதில்லை. பக்கத்தில் குழந்தையின் அழுகுரலும், சண்டைக் காட்சிகளில் ரசிகர்களின் ஆரவார விசில் சப்த ஜாலங்களும் தரும் கிளுகிளுப்பு வீட்டில் கிடைப்பதில்லை.

ஏதோ பூர்வ புண்யவசத்தால்தான் தகுதியற்ற எனக்கு ஆபீஸ் உத்யோகம் கிடைத்ததாக என் கணவரின் மதிப்பீடு. அதை மெய்ப்பிப்பதே போன்று க்விஸ் புரோக்ராமின் போது நான் தரும் விடைகளே என் மேதாவிலாசத்தைப் புரிய வைத்து விடுகின்றன.

பொழுதுபோக்காக நான் டி.வி. நிகழ்ச்சிகளைக் கூடப் பார்க்காததால், டில்லி, பம்பாய் இவற்றையாவது பார்க்கட்டுமே என்று என் கணவர் அக்கறையுடன் என்னை அழைத்துப் போகிறார். (என் ஆபீஸ் LTCயில்தான்).

— எஸ். ஜெயந்தி, சென்னை — 13.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: இ. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 260/—; விமானத் தபால் ரூ. 680/.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



பிரியமான சந்திப்பிற்கு 'ஆரஞ்சு க்ரீம்'. நலம் விசாரிக்கவோ 'பைனாப்பிள் க்ரீம்'. மகிழ்வைப் பகிர்ந்து கொள்ள 'சாக்லேட் க்ரீம்' தோது. களிப்பான நேரங்களுக்கு 'எலாய்ச்சி'யன்றி வேறேது! 'கஸ்டர்டு க்ரீமு'டனே அறிமுகத்தைத் தொடங்கி 'அஸ்ஸார்ட்டட் க்ரீமு'டன் இனிமையைத் தொடரலாம்.


நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகள். உங்களின்
அகமகிழ்வை
அருஞ்சுவையுடன்
உணர்த்திட.



nutrine BISCUITS

நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகள்.
உவகையான காலங்களுக்கு உற்ற துணை.

Mudra:Blr:NB:181:89:TAM


பால் தேவைப்படும் போதெல்லாம், அமூல்யா
இன்ஸ்டன்ட் மில்க்மிக்ஸ் கொண்டு தயார்
செய்யுங்கள். வெதுவெதுப்பான நீரில் கலந்து,
உங்களின் டீ அல்லது காப்பிக்கு உபயோகியுங்கள்.
அல்லது பாலாகவும் உபயோகிக்கலாம். இதன்
ருசி உங்களுக்கு மிகவும் பிடிக்கும்.
இதனை அளிப்பது அமூல். இதில் அமூல
கொண்டுள்ள சுவையும் தூய்மையும் உண்டு.
Amulya
Instant Milkmix
Amulya
Instant Milkmix
பால்-எப்போது தேவையோ அப்போது
OPERATION
FLOOD
விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப். மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன்
ஆனந்த்-388 001.
ULKA-3-88-